ஸ்ருதித்தமிழால் ...
ஸ்வர்ண மங்கையர் ...
சிருஷ்டிக்கும்...

# "ஸ்வர"



# சங்கநாதம்

2018

தமிழ் இலக்கிய மன்றம்
கண்டி பெண்கள் உயர்தர பாடசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீதாஞ்சலி நாயகன்...



Rabindranath Tagore

**How the desert**
**yearns for the**
**love of just one**
**blade of grass**
**the grass**
**shakes her head,**
**laughs, and**
**flies away**

ரவீந்திரநாத் தாகூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டி பெண்கள் உயர்தர பாடசாலை

தமிழ் இலக்கிய மன்றம்

*ஸ்வேதத் தமிழால் சமர்ப்பிக்கும்*

# "ஸ்வர" சங்கநாதம்

பிரதம அதிதி

## திருமதி சாந்தினி றொசய்றோ

சிரேஷ்ட விரிவுரையாளர் -
கதிரியக்க சிகிச்சை ஆலோசகர் மருத்துவ பீடம்
பேராதனை பல்கலைக்கழகம்

கௌரவ அதிதி

## திருமதி கோகிலேஷ்வரி ராம்குமார்

பிரதி அதிபர் - இராஜவெல இந்து தேசிய கல்லூரி
முன்னாள் பிரதி அதிபர் - கண்டி பெண்கள் உயர்தர பாடசாலை

திகதி : 30.06.2018

நேரம் : பி. ப. 2.00 மணி

இடம் : கொன்ஸ்டன்ஸ் மெலட் மண்டபம்
(பிரதான மண்டபம்)

*ஸ்வர்ண மங்கையர் சமர்ப்பிக்கும்*
*சுந்தர தமிழை*
*சுவைப்பீர்! மகிழ்வீர்! வாழ்த்துவீர்!*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீதாஞ்சலி நாயகன்



Rabindranath Tagore

How the desert
yearns for the
love of just one
blade of grass
the grass
shakes her head,
laughs, and
flies away

ரவீந்திரநாத் தாகூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த்தாய் வணக்கம்

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ் பரத கண்டமதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்த நறுந்திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிட நல்திருநாடும்
அத்திலகவாசனை போல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ் மணக்க இருந்த பெருந்தமிழணங்கே

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத்துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள் முன் இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும், களிதெலுங்கும், கவின்மலையாளந்துளுவும்
உன்னுதிரத்துதித்தெழுந்தே ஒன்று பலவாயிடினும்
ஆரியம்போல் உலகவழக்கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத்திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே

பேராசிரியர் மனோன் மணியம் சுந்தரம்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழ் மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழியவே
வானம் அளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே
ஏழ்கடல் வைப்பினும் தன் மணம்வீசி
இசைகொண்டு வாழியவே
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே
சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே

தொல்லை வினைதரு தொல்லை அகன்று
சுடர்க தமிழ் நாடே
வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே
வானம் அளந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே

மகாகவி சுப்ரமணிய பாரதியார்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை கீதம்

நாற்பதாண்டு கழிய எமது
இளமையின் எழிலுருத்தோன்றிடுமே
சோகம் மறைந்து சிரிப்பொலி எங்கும்
எதிரொலிப்பதைக்கேட்டு மகிழ்ந்திடுவோம்
பள்ளிவாழ்க்கைக் கூடாகச் சென்று
திரும்பவும் இளமையில் வாழ்ந்திடுவோம்
முதுமையிலும் எமதிளமையின் காட்சி
வித்யா பேரிகை கொட்டிடுமே

ஏகுவோம், ஏகுவோம், ஏகுவோம், ஏகுவோம், ஏகுவோம்.......ம்
கையில் நூலும் கோலும் எடுப்போம்
நல்முயற்சிக்குப் பின் ஓய்ந்திடுப்போம்
ஏகுவோம்......ம், ஏகுவோம்.........ம்.

நாற்பதாண்டில் குழுமிய நாமும்
நால்வேறு திக்கில் சென்றிடுவோம்
மறந்தும் மனதில் நினைத்திடும் போது
இளமையின் பல்வேறு காட்சிகளாம்
மனக்கண் முன் சிலவேளை காட்டி மறைப்பதும்
காற்றில் மிதந்த கீதமன்றோ
கல்விப் பருவத்தின் தோற்றம் எம்முன்
கனவாய் என்றும் நிலைத்திடுமே

ஏகுவோம், ஏகுவோம், ஏகுவோம், ஏகுவோம், ஏகுவோம்.......ம்
கையில் நூலும் கோலும் எடுப்போம்
நல் முயற்சிக்குப் பின் ஓய்ந்திடுப்போம்
ஏதவோம்......ம், ஏதவோம்.......ம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதி அதிதியிடமிருந்து வாழ்த்துரை



தமிழ் ஓர் உயர்தனிச் செம்மொழி. அது தனித்து இயங்கும் தகுதி வாய்ந்த மொழி. அது இலக்கிய நயம் செறிந்த மொழி. அது ஏற்றமும், தோற்றமும், பண்பும், பயனும் பொதிந்த மொழி "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்று பாரதி பாராட்டிப் பாடியமை பொய்யுரையன்று, புகழுரையன்று பொருளுரையே.

தமிழ் மொழியை "பக்தியின் மொழி" என்று கூறுவர். பரவசமூட்டும் தெய்வத்தை பரவசத்தோடு பகிரும் மொழி எம் தமிழ் மொழி. கலையையும், கடவுளையும் பிரித்துப் பார்க்க முடியாது. கடவுள் கலையை அற்புதமாக இரசிக்கின்றார் என்பதை தமிழ் இலக்கிய மேன்மையிலே நாம் கண்கூடாகக் காண்கின்றோம்.

எனது பாடசாலையான கண்டி பெண்கள் உயர்தரப் பாடசாலை மீண்டும் ஒரு கலைச் சங்கமத்தை "ஸ்வர சங்கநாதம்" என்ற தலைப்பில் நடாத்துவதையிட்டு நான் பேருவகை அடைகின்றேன். 1952ம் ஆண்டிலே ஆரம்பித்த இந்தக் கலைப்பயணம், இன்று 66 வது அரிய நினைவிலே நிதர்சனமாவதை நினைத்து மகிழ்வடைகின்றேன்.

"இன்று தமிழின் கலை வடிவங்கள் அருகிவரும் நிலையை ஒவ்வொரு தமிழ் மகனும், மகளும் உணர்ந்து எமது முதுசமான கலை வடிவங்களைப் பேணி பாதுகாக்க வேண்டும்" என்ற தாழ்மையான அழைப்பை ஒரு தமிழ் மகளாக உங்களிடம் விடுக்கின்றேன்.

என்னை கௌரவித்து பிரதம அதிதியாக அழைத்துப் பெருமைப்படுத்தும் உங்கள் அனைவருக்கும் எனது நன்றிகள் பல. இவ் விழாவினை ஏற்பாடு செய்த அதிபர், உப அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுக்கள். 'ஸ்வர சங்கநாதம்' வெற்றி பெற எனது ஆசிகளும் வாழ்த்துக்களும்.

வைத்திய கலாநிதி சாந்தினி றொசய்றோ
சிரேஷ்ட விரிவுரையாளர்
கதிரியல்துறை விசேட வைத்திய நிபுணர்
மருத்துவ பீடம்
பேராதனை பல்கலைக்கழகம், பேராதனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னாள் பிரதி அதிபரின் ஆசிச்செய்தி



முறையான கலைத்திட்ட அபிவிருத்தியில் இணைப்பாட விதான செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் தந்து தனிமனித ஆளுமைவிருத்திக்கு கல்வியுடன் வேறும் பல்வேறு செயற்றிட்டங்கள் தேவை என்பதை இலங்கைத் திருநாட்டின் கல்விச்செயற்பாடுகளில் முதன் முதல் அறிமுகம் செய்த பெருமை எமது கல்லூரி க/பெண்கள் உயர்தரக் கல்லூரியையே சாரும். இக் கல்லூரியானது பாடசாலை சீருடை, சின்னம், கழுத்துப்பட்டி, இல்ல விளையாட்டுப் போட்டி அதற்கான சின்னங்கள், வலைபந்து, செயன்முறையுடன் கூடிய மனையியற் கல்வி, பெண் சாரணீயம் என இன்னோரன்ன பல செயற்றிட்டங்களை முதன் முறையாக பாடசாலைக் கல்வியில் அறிமுகம் செய்த கலைக் கூடம் இது அந்த வகையில் கல்வியும் கலாசாரமும் சிறப்புறத்திகழ வேண்டுமென உயிர்த்துடிப்புள்ள செயற்பாடாய் அமைந்ததே சங்கநாத கலை விழாவாகும்.

பாடசாலை அதிபர் ஆசிரியர், பெற்றார், பழைய மாணவர், நலன் விரும்பிகள் பல்கலைக்கழக சமூகம் என தனது உறவுகளை ஒன்றிணைத்து வருடந்தோறும் உயர்ந்த தரத்தில் வடிவெடுப்பது தமிழ் இலக்கியமன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் சங்கநாத கலைவிழா. இவ்விழாவின் பெருவெற்றிக்கு பங்கேற்போரின் உணர்வும், அர்ப்பணிப்பும், பங்களிப்புமே சங்கநாதமாகும். காலம் காலமாக இக்கல்லூரியின் தரத்தினை வெளிப்படுத்தும் ஒரு நிழற் கண்ணாடி போல் திகழ்வது சங்கநாத கலைவிழா. இந்நிகழ்வின் அதிதியாக கலந்து கொள்வதிலும் இவ்விழா மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதிலும் யான் பெரும் கௌரவமடைகிறேன். இச்சங்கநாதம் வெளியீடு பல தசாப்தங்களைக் கடந்தாலும் கடந்த ஒரு தசாப்தமாக இடயறாது தொடர்ந்து இதழாசிரியரின் வழிகாட்டலில் மிகவும் உயர்ந்த தரத்தில மாணவரின் பல்வேறு ஆற்றல்களை உள்ளடக்கி மலர்வது இறை செயல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நேரம் இச்சங்கநாதக் கலைவிழாவின் ஆரம்ப கர்த்தா முன்னாள் பிரதி அதிபர் திருமதி நவம் வெள்ளைச்சாமியை இவ்விடத்தில் மறக்க முடியாது. அண்ணார் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் 1991 ஆம் ஆண்டில் சங்கநாதக் கலைவிழாவினை ஆரம்பித்தார். அது வளர்ந்து உயர்ந்து விருடசமாகி நிற்பதற்கு மூல காரணகர்த்தா அவரே. அண்ணார் 2018.04.15ம் திகதி இறைபதம் எய்தியமை கண்டி பெண்கள் உயர்தர பாடசாலை மிகவும் மனத்துயருடன் நினைவு கூறுகிறது. அண்ணாரின் ஆத்மா இறையுடன் இணைந்திருப்பார் என்பதும் ஐயமில்லை. ஆரம்பித்துதந்த சங்கநாத கலைவிழா வளர உயர அவர் எங்கிருப்பினும் ஆசிவழங்குவார் என்பதில் ஐயமில்லை.

இவ்வாறாக கண்டி பெண்கள் உயர்தர பாடசாலையின் தமிழ்ப் பிரிவினால் நடாத்தப்படும் கலைவிழாவிற்கு ஆசி வழங்குவதுடன், காலத்தால் அழியாத ஓர் நிலைபெற்ற ஆவணமாகத் திகழும் இச் சங்கநாத மலர் சிறப்பாக மலர உதவிய கௌரவ அதிபர், பிரதி, உதவி அதிபர்கள், தமிழ்ப்பிரிவு ஆசிரிய பெருந்தகைகள் அன்பான மாணவச்செல்வங்கள் கல்விசாரா ஊழியங்கள், பெற்றார்கள், பழைய மாணவிகள், நலன் விரும்பிகள் அனைவருக்கும் எனது அன்புடன் பணிவான நன்றிகள். இப்பணி செவ்வனே தொடரவும், இன்றைய விழா சிறப்புற நடைபெறவும் இறையாசி வேண்டி நல்வாழ்த்துக்களைக் கூறிக்கொள்கிறேன்.

திருமதி எம். கோகிலேஸ்வரி ராம்குமார்
முன்னாள் பிரதி அதிபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னாள் தமிழ்ப்பிரிவு அதிபர்

திருமதி நவம் வெள்ளைச்சாமி



# மகிழும் நினைவு

அழகின் சிரிப்பு
அன்பு நிறை நெஞ்சம்
அறிவின் பெருக்கம்
பண்பின் செறிவு
அரவணைக்கும் தாய்
நம் அனைவருக்கும் தாய்

-மீரா-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Message from the Principal....



It is with a great sense of pleasure; I send this Message of felicitation to the annual magazine "Swara Sanganatham" launched by the Tamil society of Girls' High School, Kandy, on the special occasion of Kalai Vizha -2018.

I am indeed happy to state that our school offers a wide array of opportunities for her young learners to display their hidden talents and skills in this multi-cultural school community. We strongly believe that these kinds of co-curricular activities will be of great importance to explore the diversities of culture.

I take this great opportunity to note that our school is striving hard to achieve excellence throughout 140 years and I am proud to state that we gained more exposure to the new heights in the globe being a school placed among the top rankers in both academic and co-curricular arenas.

I would like to recall the great services of all the past principals, teachers and students who committed much in uplifting the standards of the education process of this school.

As we all are aware, these co-curricular activities play a major role in moulding the total personality of the young learners. I am confident that our students gain social skills like team spirit when working together collaboratively with others. In addition, this will be an ideal approach to inculcate good attitudes and values apart from the classroom teaching-learning process.

I wish to place my special appreciation to the Chief Guest of the day Mrs. Shanthini Rosairo, Consultant Radiologist, Senior Lecturer, Department of Radiology, Faculty of Medicine, University of Peradeniya for sharing her precious time being an inspirational mould of the nation.

I offer my sincere thanks to Mrs. Kohileshwary Ramkumar Deputy Principal, Rajawella Hindu College, for her wholehearted service and invaluable commitment in uplifting the standards of the co-curricular activities of our school being a deputy principal. I thank the Assistant Principal, of the Tamil section Mrs. Shivanthani Nandhakumar and all the members of the staff for their endless services towards the success of this programme. I always admire the enthusiasm shown by our students towards the co-curricular activities; I sincerely hope that it will help you to gain experience to become useful and virtuous citizens with a total personality to win the world with utmost confidence. Once again, I thank you all for sharing the eye catching memories of this cultural show.

*I wish you Good Luck in your future endeavors.*

**Mrs. Malkanthi Abeygunasekara**
*Principal, Girls' High School, Kandy.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்ப் பிரிவு அதிபரின் வாழ்த்துரை



எழில்மிகு கண்டி மாநகரில் கல்விச் செயற்பாடுகளோடு சகல துறைகளிலும் தன் தனித்துவத்தை பேணி பாதுகாத்து வரும் எமது க/பெண்கள் உயர்தர பாடசாலையின் தமிழ் இலக்கிய மன்றத்தினால் ஒவ்வொரு வருடமும் நடாத்தப்படும் கலைவிழாவிற்கும் சங்கநாதம் சஞ்சிகைக்கும் வாழ்த்துக்களை வழங்குவதில் பெருமகிழ்ச்சி-யடைகின்றேன்.

"சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ்முழக்கம் செழிக்கச்செய்வீர்"

என தன் கவியால் தமிழ்மொழிக்கு உரம் கொடுத்தார் மகாகவி பாரதி, அந்த வகையில் ஒரு சமூகத்தின் வளர்ச்சியில் மொழி பாரிய தாக்கத்தினை செலுத்துகிறது. எமது சமூகத்தின் பண்பாட்டு பாரம்பரியங்களை பிரதிபலிக்கும் கண்ணாடியாக தாய்மொழி விளங்குகிறது. இவ்வாறான சிறப்புமிக்க தமிழ் மொழியை எமது பாடசாலையிலும் முத்தமிழாய் வெளிப்படுத்த இக் கலைவிழாவும், சங்கநாதம் சஞ்சிகை வெளியீடும், ஆண்டுதோறும் களம் அமைத்து கொடுக்கிறது. மாணவர்களுக்கு மொழி, இலக்கிய, கலை, கலாசார, பண்பாடு பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்தி, அவற்றை பேணி பாதுகாக்கவும், காலத்தின் தேவைக்கேற்ப அதனை கையாண்டு புத்தாக்கங்களை படைக்கவும், சமூக திறன்களை கொண்ட ஆளுமைமிக்க நாளைய பெண்களை உருவாக்கவும் தேவையான சிறந்த அனுபவங்களை இந்நிகழ்வு பெற்றுக்கொடுக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

இக் கலைவிழா சிறப்பாக நடைபெறுவதற்கும், 'ஸ்வர சங்கநாதம்' சஞ்சிகை வெளியீட்டிற்கும் சகல வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கிய அனைத்து நல்லுள்ளங்களுக்கும் நன்றிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவிப்பதோடு, எதிர்காலத்திலும் தமிழ் இலக்கிய மன்றத்தின் இப்பயணப் பாதை பல வெற்றிகளுடன் தொடர வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

திருமதி சிவாந்தினி நந்தகுமார்
தமிழ்ப்பிரிவு அதிபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகுதித் தலைவரின் உரை....



ஓங்கலிடைவந் துயர்ந்தோர் தொழ விளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திருள்கடியும் ஆங்கவற்றுள்
மின்னோர் தனியாழி வெங்கதிரோன் றேனையது
தன்னே ரிலாத தமிழ்

ஞாலத்தின் இருள் நீக்கும் கதிரவனுக்கு நிகராக போற்றப்படும் தமிழ் மொழியின் சிறப்பையும், பண்பாட்டையும் பேணிக் காக்கும் வகையில் கண்டி பெண்கள் உயர்தர பாடசாலை தமிழ் இலக்கிய மன்றத்தினால் ஒவ்வொரு வருடமும் சங்கநாத கலை விழா நடாத்தப்பட்டு வருகிறது. இச் சங்கநாத மேடையானது முத்தமிழ் கலை வளர்க்கும் மேடையாக மட்டுமன்றி எமது மாணவர்களிடையே அறிவு, ஆற்றல், ஒற்றுமை, விவேகம், ஒழுங்கமைப்பு போன்ற குணங்களை விதைத்து அவர்களை ஆளுமை மிக்க தலைவர்களாக உருவாக்கும் களமாகவும் விளங்குகிறது.

தமிழ் மொழிக்காற்றப்படும் இச் சிறுதொண்டானது 66வது முறையாக இவ் வருடம் எமது வனிதையர்களால் தொடரப்பட்டு ஸ்வர சங்கநாதமாக அரங்கேற்றப்படுகிறது. ஓங்காப் புகழ் மிக்க எம் தமிழன்னைக்கு விழா எடுக்கும் இத்தினத்திலே எம் மங்கையரின் மனதில் உதித்த எண்ணங்களை கட்டுரைகளாகவும், கவிதைகளாக-வும், பல வண்ண சித்திரங்களாகவும் தாங்கி எம் கைகளில் தவழும் சங்கநாத மலரிற்கும், பழைமையைப் பேணிப் புதுமை படைக்கும் எம் மங்கையரின் தமிழ்த் தொண்டிற்கும் எனது வாழ்த்துக்களை பகிர்வதில் பேருவகையடைகிறேன். எமது பாடசாலை தமிழ் இலக்கிய மன்றத்தினால் ஆற்றப்படும் இத் தமிழ்த்தொண்டு பல்லாண்டு காலம் தொடர உளமாற வாழ்த்துகிறேன்.

"தேமதுர தமிழோசை உலகமெல்லாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்"

திருமதி மனோகரி மகிபாலன்
பகுதித் தலைவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் மன்றத் தலைவரின் தங்கவுரை



மலையகத்தில் மங்கையர்க்கு மகுடம் சேர்க்கும் கண்டி பெண்கள் உயர்தர கல்லூரி தனது 140வது வருடம் தடம் பதித்துள்ள இவ்வேளையில், ஆண்டு தோறும் நடாத்தி வரும் பெருவிழா எமது கல்லூரி தமிழ் இலக்கிய மன்றத்தின் 66வது "ஸ்வர சங்கநாதம்" இவ் இதழ் உங்கள் கைகளில் தவழும் இவ்வேளையில் பெருமகிழ்வுடன் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

அத்துடன் மாணவர்களின் ஆக்கங்கள் ஒன்றிணைந்த சங்கநாத இதழையும், இச் சங்கநாதத்தினை வெற்றி சங்கநாதமாக்க உதவிய நல்லுள்ளங்களுக்கும் தமது இயல், இசை, நாடகத் திறன்களை வெளிக்கொண்டுவர மாணவர்களுக்கு ஊக்கமும், ஆக்கமுமளித்த இனிய ஆசிரிய உள்ளங்களுக்கும், முத்தமிழால் சங்கநாதத்தை மெருகூட்டிய மாணவியருக்கும் நன்றிகள் பல. அளப்பரிய சேவை மென்மேலும் தொடர்ந்து எத்திசையும் பரவ எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்.

அத்துடன் இம்மன்றத்தினை வெற்றிகரமாக நடாத்திச் செல்வதற்கு அறிவுரைகளையும், ஒத்துழைப்பையும் நல்கிய பாடசாலையின் அதிபர், பிரதி அதிபர், தமிழ்ப்பிரிவு அதிபர், பகுதித் தலைவர், ஏனைய அனைத்து ஆசிரியப் பெருந்தகைகளுக்கும், பெற்றோர்கள், மாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி எம்.எப். மஹீஸா பாரூக்
பொறுப்பாசிரியர்
தமிழ் இலக்கிய மன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் மன்ற செயலாளர் உரை...



மலையகத்தின் புகழ்மிக்க க/பெண்கள் உயர்தரப் பாடசாலை வெளியிடும் சஞ்சிகைக்கு வாழ்த்து தெரிவிப்பதில் பெருமகிழ்வடைகிறேன். தமிழ்ச் சங்கத்தின் 66வது ஆண்டில் வெளிவரும் "ஸ்வர சங்கநாதம்" சஞ்சிகை மாணவிகளின் வெற்றியாய் அமைய என் வாழ்த்துக்கள்.

நாளைய சமுதாயத்தின் சுடர்களாய், நாளைய சமுதாயத்தின் மங்கையர்களாய் திகழவிருக்கும் உயர்தர கல்லூரி பெண்களின் வெளியீடே ஸ்வர சங்கநாதமாகும். இத்தகைய பெருமை மிகு வெளியீடான இச்சஞ்சிகை எமது மாணவிகளின் திறமைக்கு அடையாளமாய் அமைகிறது. ஆண்டாண்டு காலமாய் வெளிவரும் ஒவ்வொரு இதழ்களும் சுமந்து வரும் ஆக்கங்களோ பல. அவற்றுள் மற்றுமொரு ஆக்கமே இந்த 'ஸ்வர சங்கநாதம்' சஞ்சிகையாகும்.

இசைக்கு ஸ்வரம் போல இச் சங்கநாத சஞ்சிகை உயர்தர கல்லூரி பெண்களின் அறிவுக்கு அழகு சேர்த்து, அறிவின் சுடராய் ஒளிர வேண்டும் என என் மனதார வாழ்த்துகின்றேன்.

மாணவிகள் தங்களின் திறமைகளை வெளிகாட்டும் களமாக இச்சஞ்சிகை வெளியீடு அமைந்து காணப்படுகிறது. எனவே மாணவிகளின் எண்ணங்களை கருத்துக்களாக்கி எழுத்துரு கொடுக்கும் சஞ்சிகையானது தொடர்ந்து வரும் சகோதர மாணவிகளின் முன்மாதிரிக்கு அடித்தளமாய் அமைய வேண்டும்.

"எண்பொருள் வாகச் செலச்சொல்லித்தான்
பிறர்வாய் நுண்பொருள் காண்பது அறிவு"

என்பதை நிரூபிக்கும் வகையில் உயர்தர கருத்துக்களை தெளிவாகக் கூறி, பிறர் கூறும் தெளிவற்ற சொற்களிலும் நுட்பமான பொருளை கண்டறியும் அறிவை பெற்று திகழ எமது மாணவிகளின் அறிவு வளர வளமான வாழ்த்துக்கள்.

சகீலா சரவணகுமார்
செயலாளர்
தமிழ் இலக்கிய மன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் மன்ற பொருளாளரின் பொன்னுரை



கண்டி பெண்கள் உயர்தர பாடசாலையின் தமிழ் இலக்கிய மன்றத்தினால் வருடா வருடம் நடத்தப்படும் இக்கலை விழாவின் 'சங்கநாதம்' சஞ்சிகைக்கு ஆசிச் செய்தி வழங்க கிடைத்தமையையிட்டு பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

பிரதான கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுடன் பேச்சு, கட்டுரை, கவிதை, இசை, நாடகம், விவாதம் போன்ற இணைபாட விதான செயற்பாடுகள் மூலம் மாணவர்கள் பல்வேறு ஆற்றல்களை தம்மிடையே வளர்த்துக் கொள்கின்றனர். எனவே இது போன்ற கலை விழாக்கள் மாணவர்களுக்கு பல சிறந்த அனுபவங்களை பெற்றுக் கொடுப்பதுடன் அவர்களின் எதிர்கால வாழ்வில் எழும் பல்வேறு சவால்களுக்கு வெற்றிகரமாக முகங் கொடுக்கும் ஆற்றல்களையும் பெற்றுக்கொடுத்து சிறந்த ஆளுமையுடைய சமநிலையான நல் மங்கையர்களாக திகழ நல்லதோர் அடித்தளம் அமைத்துக் கொடுக்கின்றது.

எனவே இக்கலை விழாவினை சிறப்பாக நடத்தவும், இம் மலரினை வெளியிடவும் எல்லா வகையான வளங்களாலும் பங்களிப்புச் செய்த நல்லுள்ளங்களை மனதார வாழ்த்துகிறேன்.

திருமதி எம்.எஸ். பஸீனா
பொருளாளர்
தமிழ் இலக்கிய மன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரிய துணை இதழாசிரியரின் இதயத்திலிருந்து



139 வருட வரலாற்றை கடந்துள்ள எமது பாடசாலையின் தமிழ் இலக்கிய மன்றத்தினால் நடாத்தப்படும் கலைவிழா சங்கநாதம் சஞ்சிகைக்கு ஆசிச் செய்தி வழங்க கிடைத்தமையையிட்டு அகமகிழ்கின்றேன்.

எத்தனை சவால்கள் வந்தாலும், புதிய பல நவீனத்து-வங்களை கடந்தும் தமிழ் இனத்தின் சமூக, கலாசார, பண்பாட்டு விழுமியங்களை கட்டியெழுப்புவதில் நம் தாய்மொழி அளவிட முடியாத வெற்றிகளை சாதித்தமையை தமிழ் இலக்கிய வரலாறு பறைசாற்றுகின்றது. எந்த ஒரு இனத்தினாலும் மொழி, கலை, இலக்கிய, பண்பாட்டு, பாரம்பரியங்கள் சமூகத்தின் தொடர்ச்சியான இருப்பிற்கு காரணமாக அமைவதுடன், மானுட நேயமுள்ள மனிதர்களை உருவாக்குகின்றது. இவ்வாறு சிறப்பு மிக்க தமிழ் தாயின் பெருமையை, செழுமையை, இளமையை, புதுமையை மேலும் மெருகூட்டும் நிகழ்வாக இக் கலைவிழாவை நான் காண்கிறேன். இது மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளோடு மட்டும் நின்று விடாது, பல்வேறு துறைகளில் தமது ஆற்றல்களை வெளிகாட்டவும், வளர்க்கவும், தனியாள் ஆளுமை விருத்திக்கும் களம் அமைத்து கொடுக்கின்றது.

தொடர்ந்து வரும் காலங்களிலும் எமது பாடசாலையின் வெற்றி பயண பாதைகளில் 'சங்கநாதம்' சஞ்சிகையும் பல நாமங்களில் தன் காலடியைப்பதிக்க வேண்டுமென உளப்பூர்வமான வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கின்றேன். 'ஸ்வர சங்கநாதம்' வெளிவர உழைத்த நல் உள்ளங்கள் அனைவருக்கும், இதழாசிரியருக்கும் உளமார்ந்த நன்றிகள்.

வெற்றி முரசொலி கொட்டிய - எங்கள்
வீரத்தமிழனின் போருக்கும், தூய காதலுக்கும்
உயிரூட்டிய சங்க தமிழ் தாய் - எம்
மங்கையரின் வெற்றிகளை சங்கநாதமாய்
என்றும் இசைத்திட வேண்டுமென
வாழ்த்துகிறேன்....

திருமதி தேவிகா இரவிச்சந்திரன்
துணை இதழாசிரியர்
தமிழ் இலக்கிய மன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவத் தலைவியின் மகிழ்வுரை...



"அத்திலக வாசனை போல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ் மணக்க இருந்தபெருந்தமிழணங்கே"

"கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்த தமிழ்" என்று சிறப்பிக்கப்படும் தமிழ் மொழி அமுதிலும் இனிதாக, அவைமிகு மொழியாக, எழில் மணம் வீசி தனது புகழால் சுடர் விட்டு ஒளிர்ந்துக்கொண்டிருக்கிறது.மொழியானது கலைகளோடு தொடர்புடையது. கலைகளை மொழி மூலம் வெளிப்படுத்தும் போது அவை சிறப்படைகின்றன. அதனால் தான் தமிழும் இயல், இசை, நாடகம் எனும் மூன்றையும் கொண்ட 'முத்தமிழ்' எனச் சிறப்பிக்கப்படுகிறது.

இந்து சமுத்திர முத்தின், முத்தமிழ் வளர்க்கும் கலைக்கூடமாம் கண்டி பெண்கள் உயர்தரப்பாடசாலை தமிழ் இலக்கிய மன்றத்தால் நடாத்தப்படும் "சங்கநாத கலைவிழா" 140வது வருட உன்னத வரலாற்றில் தமிழ் பிரிவு மாணவர்களின் கலை ஆர்வத்தை வெளிப்படுத்தும் 66வது "ஸ்வர சங்கநாதம்" சங்கமிக்க உள்ளது.

முடிவிலா சவால்கள், அயரா முயற்சி, எதிர்பார்ப்பே அற்ற நட்பு, என்றும் இருக்க வேண்டிய பொறுமை இவற்றின் ஒட்டு மொத்தமே நீங்கள் இன்று காணும் எமது "ஸ்வர சங்கநாத கலைவிழா". எமது மாணவியரின் அளவிலா ஆர்வத்தின் பலனாக அவர்களது எண்ணமும், எழுத்து வண்ணமும் சஞ்சிகையாக உங்கள் கைகளில்!

பாரினில் படர்ந்த கடல் போல எம் தமிழ் இலக்கிய மன்றத்தின் தமிழ்ப் பணியின் புகழ் திக்கெட்டிலும் பரவ இறைவனின் இன்னருள் கிடைக்கப்பெற வேண்டுகிறேன்.

"முச்சங்கங்கள் வளர்த்த தமிழ்
மூவேந்தர் வளர்த்த தமிழ்
கம்பன் காவிய தமிழ்
காளமேகம் பொழிந்த தமிழ்
பெண்கள் உயர்தர பள்ளியில் பெருந்தமிழ்"

சயோஜிதா விஜயகுமார்
மாணவத் தலைவி
தமிழ் இலக்கிய மன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவ செயலாளரின் இதயசிப்பியிலிருந்து உதிர்ந்த சில முத்துக்கள்



குறிஞ்சிமாநகரில் குன்றாப புகழுடன் பிரபல்யம் பெற்று விளங்கும் கண்டி பெண்கள் உயர்தர பாடசாலையினால் வெளியிடும் 'ஸ்வர சங்கநாதம்' இதழுக்கு ஆசிச்செய்தி வழங்குவதை இட்டு பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

காலகண்ணாடியின் விம்பமாய் பிரதிபலிக்கும் ஸ்வர சங்கநாதம் தமிழுக்கு வளம் சேர்ப்பதுடன் சமூக கலாசார பண்பாட்டு அறிவியல் மேம்பாட்டிற்கும் துணை நிற்கின்றது என்றால் அது மிகையாகாது.

இலைமறைக்காயாக அமைந்த எம் ஆற்றலினை வெளிக்கொணர இளமைதுடிப்பும், செயலூக்கமும் மிக்க இளம் மாணவிகளின் அயரா உழைப்பினதும் அறுவடையாக விளங்கும் 'ஸ்வர சங்கநாதம்' இதழ் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

வாழ்க தமிழ்மொழி வளர்க 'ஸ்வர சங்கநாதம்'

அக்ஷரா தியாகராஜா
மாணவச் செயலாளர்
தமிழ் இலக்கிய மன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவப் பொருளாளரின் உரை



"தேன் மதுர தமிழோசை
உலகெங்கும் பரவும்
வகை செய்தல் வேண்டும்"

கல் தோன்றி மண் தோன்றா காலத்திற்கு முன்தோன்றிய இலக்கிய மரபை கொண்ட எம் தாய்மொழி தமிழ் மொழியை வணங்கி எனது உரையை ஆரம்பிக்கின்றேன்.

இலங்கை தீவின் இதயமான கண்டி மாநகரின் இதய துடிப்பாய் இயங்கி கொண்டிருக்கும் கண்டி பெண்கள் உயர்தர பாடசாலை தமிழ் பிரிவு மாணவர்களால் அரங்கேற்றம் காணும் கலை விழாவை முன்னிட்டு வெளியிடப்படும் இச் சஞ்சிகையினூடாக வாழ்த்து செய்தி பகிர்வதில் பேருவகை அடைகிறேன்.

தமிழ் மொழியின் பெருமைகளையும், பண்பாடுகளையும் வெளிகொண்டுவரும் முகமாக எம் பாடசாலை மாணவிகளின் ஆக்க பூர்வமான கலை படைப்புகளை அள்ளி தந்து இச் சங்கநாத சஞ்சிகையை கட்டியெழுப்ப எம் மாணவிகள் அயராது பாடுபட்டுள்ளனர்.

இச்சங்கநாத கலைவிழா இனிதே நடைபெற ஆசி வழங்கி ஊக்கமளித்த எம் கல்லூரி அதிபர், தமிழ் பிரிவு அதிபர், தமிழ் மன்ற பொறுப்பாசிரியர், இதழாசிரியர், உள்ளிட்ட ஏனைய ஆசிரியர்களுக்கும், மாணவர்கள், நலன் விரும்பிகள் மற்றும் எமக்கு பக்க பலமாய் திகழ்ந்த அனைவருக்கும் என் உளம் கனிந்த நன்றிகளை தெரிவித்து கொள்கிறேன்.

ரேக்ஷனா புவனேந்திரன்
மாணவப் பொருளாளர்
தமிழ் இலக்கிய மன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவ இதழாசிரியர் இன்னுரை...



உலகமொழிகளுள் மூத்ததும் பழமையானதுமான மொழிகளுள் தமிழ் மொழியும் ஒன்று என்றால் மிகையாகாது. இன்றும் எழுத்தளவிலும் பேச்சளவிலும் தன் தொண்மையை காத்து சிறப்போடும் வாழ்ந்து கொண்டிருக்கிறது தமிழ் மொழி.

கலை எனப்படுவது "நுட்பமான தன்மை மற்றும் திறமையை உள்ளடக்கியது" மனித நடத்தையினாலும் தம் கற்பனை வளத்தினாலும், கலைநுட்பத் திறமையுடன் கூடிய நிகழ்வுகளை வெளிக்காட்டுவது கலை ஆகும்.

இத்தகைய இனிய கலைகளை 66 வருடங்களாக மேடை ஏற்றும் மாபெரும் விழாவே கண்டி பெண்கள் உயர்தர பாடசாலை ஆண்டு தோறும் பெருமையுடன் நடாத்தும் சங்கநாத கலை விழாவாகும். முத்தமிழ் இலக்கியமாக வடிக்கும் இச் சஞ்சிகையை தமிழன்னைக்கு அணி சேர்க்கும் வண்ணம் 26வது ஸ்வர சங்கநாத சஞ்சிகையை தமிழ் இலக்கிய மன்றம் வெளியிடுவதை எண்ணி பேரானந்தமடைகின்றேன்.

எமது பாடசாலையின் தமிழ்ப்பிரிவு மாணவர்களின் கற்பனைத் திறன்களை மற்றும் எண்ணற்ற ஆக்கத்திறன்களை காவிவரும் இச் சஞ்சிகை புதுப்பொலிவுடன் தமிழன்னை மடியில் தவழும் வண்ணம் அமையப்பெற்று உள்ளது.

இந்நூலை செம்மையுற வடிவமைக்க இராப்பகல் பாராது அயராது எம்முடன் உழைத்த எமது தமிழ் இலக்கிய மன்ற இதழாசிரியருக்கும் துணை இதழாசிரியருக்கும், தமிழ் பிரிவு அதிபர், மன்ற பொறுப்பாசிரியர் உட்பட ஏனைய ஆசிரிய ஆசிரியைகளுக்கும் ஆக்கங்களை தந்து சிறப்பித்த மாணவ உள்ளங்களுக்கும், பல வகையில் உதவிய அனைத்து நல் நெஞ்சங்களுக்கும் என் மனமார்ந்த நன்றிகள்.

"தமிழுக்கும் அமுதென்று பேர் அந்தத் தமிழ்,
இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்"

விநாயகமூர்த்தி நர்மதா
மாணவ இதழாசிரியர்
தமிழ் இலக்கிய மன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவத் துணை இதழாசிரியரின் இன்னுரை...



"கானல் நீரென மறைந்த கலைகளை
காவிக் கொணர்ந்த தாழத்திறவான்"

அண்டங்கள் அடங்கும் ஒரு மொழி, அந்தங்கள் இல்லாத செம்மொழி, எம் நரம்புகள் மீட்டிடும் தமிழ் மொழி என உலகம் பறைசாட்டிக் கொண்டிருக்கும் நேரத்தில் வானத்தில் இடியுடன் மின்னல் எழுப்புவது போல நாமும் இனி பளிச்சிடும் தருணம் இது என்பதில் பேருவகை கொள்கின்றேன்.

அந்தவகையில் இந்து சமுத்திரத்தின் முத்தான பேரழகை கொண்ட எம் இலங்கை திருநாட்டில் நூற்று முப்பத்தொன்பது வருடங்களாக மத்திய மலை நாட்டில் மாணிக்கமாய் திகழும் பெண்கள் உயர்தர பாடசாலை, தமிழ் கலை அன்னைக்கு பெருமை சேர்க்கும் நாள்!

தமிழின் வளம் பெருக உதவிய அனைத்து நல் உள்ளங்களுக்கும் நன்றி கூறுவதோடு தமிழ் மொழியின் அழகும் நளினமும், இனிமையும், இளமையும் மாறாது தமிழுக்கு சிறப்பு சேர்க்கும் நிகழ்வாக இவ்விழா அமைகின்றது.

"வாழ்க முத்தமிழ்
வளர்க எம் தமிழ் இலக்கிய மன்றம்"

எப். இவோன் ட்றிப்பேஷா
மாணவத் துணை இதழாசிரியர்
தமிழ் இலக்கிய மன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூற்குழுவினர் நுவழ்கின்றார்கள்....



"தமிழுக்கு அமுதென்று பேர்
அந்த தமிழ், இன்பத் தமிழ்
எங்கள் உயிருக்கு நேர்"

செம்மைசேர் செந்தமிழின் செல்வங்களான நாம் எம் தாய்க்கு செய்யும் சமர்ப்பணமே "ஸ்வர சங்கநாதம்".

தமிழ்ப்பரிவு மாணவியரின் கலை ஆர்வத்தை வெளிப்படுத்தும் முகமாக இம் முறையும் "ஸ்வர சங்கநாதம்" கலைவிழாவில் வெளிவரும் இதழானது தமிழன்னைக்கு அணி சேர்க்கும் முகமாக அமைவதையிட்டு, உங்கள் கரங்களில் தவழ்வதையிட்டும் பெருமிதம் கொள்கிறோம்.

எமது "ஸ்வர சங்கநாதம்" இதழ் சிறந்த முறையில் வெளிவர இராப்பகல் பாராது உழைத்த எமது இதழாசிரியர் மீரா அல்பிரட் அவர்களுக்கும், துணை இதழாசிரியர் தேவிகா இரவிச்சந்திரன் அவர்களுக்கும், மன்றப் பொறுப்பாசிரியர்களுக்கும், ஆக்கங்களை உரிய முறையில் தந்துதவிய பெருந்தகைகளுக்கும், எம் சகோதரிகளுக்கும் உளம் கனிந்த எம் நன்றிகளை தெரிவித்து கொள்கிறோம்.

"வாழ்க தமிழ்மொழி!
வளர்க தமிழ்மொழி!

மாணவ இதழாசிரியர்கள்
தமிழ் இலக்கிய மன்றம்

சுகிர்தா பிரசாத்
தர்ஷிகா சிவப்பிரகாசம்
மதுபாஷினி ராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாணவச் செயலாளர் அறிக்கை

கண்டி பெண்கள் உயர்தர பாடசாலையின்
தமிழ் இலக்கிய மன்றத்தின்
66 ஆவது ஆண்டறிக்கை

அனைவருக்கும் வணக்கம்

''சொல்லின் கிழந்தி மெல்லிய விணையடி
சிந்தைலைத் தியம்புவல் செய்யுட் கணியே....!'' என்ற பாடல் அடிகளுக்கு உரிமைபூண்டவளான கலைமகளின் பாதார விந்தங்களுக்கு வந்தனம் தெரிவித்துக் கொள்வதுடன் கண்டி பெண்கள் உயர்தர பாடாசலையில் தமிழ்பிரிவு வருடாவருடம் வெளியிடப்படும் ''சங்கநாத'' சஞ்சிகைக்கு இவ் வருட அறிக்கை எழுதுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

பிரியாவிடை நிகழ்வு

மன்றத்தால் நடாத்தப்பட்ட முதலாவது நிகழ்வாக எமது பாடசாலையின் பிரதி அதிபர் திருமதி கோகிலேஸ்வரி ராம்குமார் அம்மையார் அவர்களுக்கும், திருமதி மல்லிகா பாலசுப்ரமணியம் அம்மையார் அவர்களுக்கும், செல்வி சுபத்ரா மகாலிங்கம் அம்மையார் அவர்களுக்கும் பிரியாவிடை நிகழ்வு கடந்த 2017.11.24 ஆம் திகதி அன்று பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. அன்றைய தினம் பிரதி அதிபர் திருமதி கோகிலேஸ்வரி ராம்குமார் அம்மையார் அவர்களால் வருகைதர முடியாமல் போனது.

அதற்கடுத்து இடம்பெற்ற பிரியாவிடை நிகழ்வானது திருமதி கோகிலா இராசையா அம்மையார் அவர்களுக்கும், செல்வி லாபிரா ஜெமால்டீன் அம்மையார் அவர்களுக்கும், திருமதி வசந்தி கிருஷாந்தன் அம்மையார் அவர்களுக்கும், திருமதி உஷாந்தினி திவாகரன் அம்மையார் அவர்களுக்கும் 2018.05.25 ஆம் திகதி அன்று இடம்பெற்றது. அத்துடன் பிரதியதிபர் கோகிலேஸ்வரி ராம்குமார் அம்மையார் அவர்களின் பிரியாவிடை நிகழ்வு 2018.06.19 ஆம் திகதி அன்று எமது பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்றத்தால் நடாத்தப்பட்ட முதலாவது பொதுக்கூட்டம்

நடப்பாண்டுக்கான முதலாவது பொதுக்கூட்டம் கடந்த 2017.11.17 ஆம் திகதி அன்று கூட்டப்பட்டது. இதில் மாணவப் பொருளாளர், இதழாசிரியர், துணை இதழாசிரியர், குழு அங்கத்தவர்கள் உள்ளிட்டோர் தெரிவு செய்யப்பட்டனர்.

பாடசாலை மட்ட தமிழ் தினப்போட்டி

2018.01.24, 2018.01.25 ஆம் திகதிகளில் எமது பாடசாலை மாணவர்களுக்கிடையிலான பேச்சு, பாவோதல், இசையும் அசையும் போன்ற போட்டிகள் ஆசிரியர்களின் பங்களிப்புடன் நடைபெற்றதுடன் 2018.02.06, 2018.02.07 ஆம் தினங்களில் பாடசாலை மட்டத்திலான கட்டுரை, கவிதை, தமிழ் இலக்கிய விமர்சனம், சிறுகதை, இலக்கண போட்டி, தனி இசை போட்டி என்பன நடாத்தப்பட்டன.

வலய மட்ட தமிழ் தினப்போட்டி

எழுத்தாக்க போட்டிகள் 2018.04.28 ஆம் திகதி பேராதெனிய இந்துக் கல்லூரியில் இடம்பெற்றதுடன், 2018.05.05 ஆம் திகதி கண்டி பதுதீன் மகளிர் கல்லூரியில் எழுத்தாக்கம் தவிர்ந்த ஏனைய தனி நிகழ்ச்சிகளும், 2018.05.06 ஆம் திகதி குழு நிகழ்ச்சிகளும் இடம்பெற்றது. இதில் எமது மாணவர்கள் 7 முதலாம் இடங்களை பெற்றுக்கொண்டனர்.

மாகாண மட்ட தமிழ் தினப்போட்டி

2018.05.12 ஆம் திகதி பேராதனை இந்துக் கல்லூரியில் எழுத்தாக்க போட்டிகள் இடம்பெற்றதுடன். 2018.05.19, 2018.05.20 ஆம் திகதிகளில் மாகாண மட்ட ஏனைய தமிழ் தினப்போட்டி நடைபெற்றன. இதில் 5 முதலாம் இடங்களை எமது பாடசாலை பெற்றுக்கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இல்லங்களுக்கிடையிலான விவாதப் போட்டி

கடந்த 2018.02.19 ஆம் திகதி எமது பாடசாலையில் இல்லங்களுக்கிடையிலான விவாதப் போட்டி நடைபெற்றதுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதில் ''ஈடன்'' இல்லம் முதலாம் இடத்தையும், 2ம், 3ம், 4ம் இடங்களை ''சன்சம்'', ''லோரன்ஸ்'', ''லண்டன்'' இல்லங்களும் பெற்று கொண்டன.

மன்றத்தால் நடாத்தப்பட்ட இரண்டாவது பொது கூட்டம்

2018.05.08 ஆம் திகதி நடாத்தப்பட்ட கூட்டத்தில் பாடசாலை கலைவிழா பற்றி கலந்தாலோசிக்கப்பட்டது. இக் கூட்டம் தமிழ் பிரிவு அதிபர் திருமதி சிவாந்தினி நந்தகுமார் அவர்களின் தலைமையில் நடைபெற்றதுடன் கலைவிழாவிற்கான வேலைகள் மாணவர்களிடையே பகிர்ந்தளிக்கப்பட்டன.

இல்லங்களுக்கிடையிலான நாடகப் போட்டி

கடந்த 2018.05.11 ஆம் திகதி பாடசாலை பிரதான மண்டபத்தில் மு.ப. 11.00 மணியளவில் இல்லங்களுக்கிடையிலான நாடகப்போட்டி இடம்பெற்றது. இதில் ''லண்டன்'' இல்லம் முதலாம் இடத்தை சுவீகரித்ததோடு ''சன்சம்'' இல்லம் இரண்டாம் இடத்தையும், ''லோரன்ஸ்'' ''ஈடன்'' இல்லங்கள் மூன்றாம் இடத்தையும் தன்வசப்படுத்தின.

இல்லங்களுக்கிடையிலான குழு இசைப்போட்டி

கடந்த 2018.05.28 ஆம் திகதி இல்லங்களுக்கிடையிலான குழு இசைப்போட்டி மு.ப. 11.00 மணியளவில் நடைபெற்றது. இதில் கனிஷ்ட பிரிவில் முதலாம் இடத்தை ''சன்சம்'' இல்லமும், இரண்டாம், மூன்றாம், நான்காம் இடத்தை ''லண்டன்'', ''லோரன்ஸ்'', ''ஈடன்'' இல்லங்கள் பெற்றுக்கொண்டதுடன் சிரேஷ்ட பிரிவிலும் முதலாம் இடத்தை ''சன்சம்'' இல்லமும், இரண்டாம், மூன்றாம், நான்காம் இடங்களை ''ஈடன்'', ''லோரன்ஸ்'', ''லண்டன்'' இல்லங்களும் பெற்றுக்கொண்டன.

சஞ்சிகை வெளியீடு

தமிழ் இலக்கிய மன்ற இதழாசிரியர் திருமதி மீரா அல்பிரட் அவர்களினதும் துணை இதழாசிரியர் திருமதி தேவிகா ரவிச்சந்திரன் அவர்களினதும் மேற்பார்வையில் 2018.06.30 ஆம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திகதி அன்று நடைபெறவிருக்கும் 'ஸ்வர சங்கநாதம்' கலைவிழாவில் 2018 ஆம் ஆண்டுக்கான சஞ்சிகை வெளியிடப்படுகிறது.

கலைவிழா

2018.06.30 ஆம் திகதியன்று கண்டி பெண்கள் உயர்தர பாடசாலையில் கொன்ஸ்டன்ஸ் மெலட் மண்டபத்தில் மதிப்பிற்குரிய அதிபர் மல்காந்தி அபேகுணசேகர அவர்களினதும், தமிழ் பிரிவு அதிபர் திருமதி சிவாந்தினி நந்தகுமார் அவர்களினதும் பகுதி தலைவர் திருமதி மனோகரி மகிபாலன் அவர்களினதும், தமிழ் இலக்கிய மன்ற ஆசிரியர் செயற்குழு மற்றும் ஏனைய ஆசிரியர்களின் வழிகாட்டலுடனும், பாடசாலை மாணவர்களின் பங்களிப்புடனும் சங்கநாத கலைவிழா நடைபெறவிருக்கிறது.

நன்றிகள்

எமது தமிழ் இலக்கிய மன்றத்தால் மேற்குறிப்பிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளின் போது எமக்கு சகல வழிகளிலும் உதவி நல்கிய எமது அதிபர், பிரதி அதிபர்கள், தமிழ் பிரிவு அதிபர், தமிழ் பிரிவு பகுதி தலைவர் மற்றும் மன்றப் பொறுப்பாசிரியர்கள், ஏனைய ஆசிரியர்கள் மற்றும் மாணவ செயற்குழு உறுப்பினர்களும், பெற்றோர்களுக்கும், நலன் விரும்பிகளுக்கும், இவ்விழா சிறப்புற அமைய பலவழிகளிலும் உதவிய அனைத்து நல்லுள்ளங்களுக்கும் எமது பணிவான நன்றிகளை தெரிவிக்கின்றேன்.

''தேமதுரத் தமிழோசை
உலகமெங்கும் பரவச் செய்வோம்''

அக்ஸரா தியகராஜா
செயலாளர்
தமிழ் இலக்கிய மன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்லக் கிருஷ்ணருடன் யசோதை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ரவீந்திரநாத் தாகூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "கீதாஞ்சலி" இல் இருந்து...

என் தலைவனே!
எப்படிப் பாடுகிறாய் என்பது நான் அறிகிலன்
மௌனம் விழுமிய வியப்புடன்
எப்போதும் செவி திளைக்கிறேன்.

உன் இசையின் வெளிச்சம்
உலகினுக்குள் ஒளி தீட்டுகிறது
உன் இசையின் உயிர் மூச்சு
வானங்களிடை ஓடித் திரிகிறது
உன் இசைப் புனித நதி
பாறைத் தடைகளைத் தகர்த்து விரைகிறது.

உன் பாடலுடன் இணைய
என் இதயம் விழைகிறது
ஆனால் ஒரு குரல் நாடி
வீணே வியர்க்கிறது
நான் பேசக்கூடும்
ஆனால் என் வாய்மொழி
பாடலாக வடிவு எடுப்பதில்லை
நான் திகைத்து ஓலமிடுகிறேன்.
ஆ... என் தலைவனே!
உன் இசையின் முடிவிலாப் பின்னல்களில்
என் இதயம் சிறைகொண்டனையே!

ரவீந்திரநாத் தாகூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவீந்தர நாத் புகழ்பெற்ற வங்காள பல்துறை அறிஞர் ஆவார். 19ம் நூற்றாண்டின் இறுதியிலும் 20ம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் இவர் வங்காள இலக்கியம் மற்றும் இசை வடிவத்தில் பெரும் மாற்றங்களை கொண்டு வந்தார். மேலும் இந்திய கலைகளிலும் மாற்றங்களை கொண்டுவந்தார். புகழ்பெற்ற ‘‘கீதாஞ்சலி’’ எனும் கவிதை தொகுப்பின் ஆசிரியராவார். இக்கவிதை தொகுப்பிற்காக இவர் 1913 இல் இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்ற முதல் ஆசிரியர் இவரேயாவார். மேலும் ஐரோப்பியர் அல்லாத ஒருவர் இந்த விருதை பெற்றதும் இதுவே முதல் முறையாகும்.

தாகூரின் படைப்புக்கள் ஆன்மீகத்தை அடிப்படையாகக் கொண்டதாக இருந்தது. இருந்த போதிலும் இவரின் படைப்புகளில் இருந்த நேர்த்தியான உரைநடையும், கவிதையின் மாயத்தன்மையும் வங்காளத்திற்கு மட்டுமல்லாது அனைத்து மொழியினருக்கும் பொருந்தக்கூடியதாக இருந்தது. சில நேரங்களில் இவர் ‘‘வங்காள கவி’’ எனவும் அறியப்படுகிறார். இந்தியாவின் தேசிய கீதமான ‘‘ஜனகண மன’’ பாடலை இயற்றியவரும் இவரே. இவருடைய மற்றொரு பாடல் ‘‘அமர் சோனாத் பங்களா’’ வங்காள தேசத்தின் தேசிய கீதமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

கல்கத்தாவை சேர்ந்த வங்காளப் பிராமணரான இவர், ஜெஸிபூர் மாவட்ட ஜமிந்தார் மரபைச் சேர்ந்தவர். இவர் தேவேந்திரநாத், சாரதா தேவி தம்பதியினருக்கு 1861 ஆம் ஆண்டு மே மாதம் 7ம் திகதி பிறந்தார். இவர் மனம் வங்காள மொழியிலும், சமஸ்கிருத மொழியிலும் லயித்து நின்றது. தனது 8வது வயதிலேயே இவர் கவிதைகளை எழுதத் தொடங்கினார். இவரது 12ம் வயதில் பல இடங்களுக்கு பயணம் மேற்கொண்டு கடைசியில் இமயமலைப் பகுதியான ‘‘டால்கூசி’’ செல்ல முன்னர் ‘‘அம்ரித்சாரில்’’ தங்கியிருந்து பலருடைய வரலாறுகளை கற்றதுடன் வானியல், அறியியல், சமஸ்கிருதம் ஆகிய பாடங்களை கற்றார். காளிதாஸரின் கவிதைகளையும் கற்றார். தமது 16ம் வயதில் இவரது முதலாவது கவிதைத் தொகுதியை பானுசிங்கோ - Banusimho (சூரிய சிங்கம்) என்னும் புனைப்பெயரில் வெளியிட்டார்.

இதனை இலக்கிய ஆணையம் கைப்பற்றியது. 1877 ஆம் ஆண்டில் இவரது முதல் சிறுகதையும், நாடகமும் இவரது பெயரிலேயே வெளிவந்தன. 16ம் வயதில் சிறுகதைகளும், நாடகங்களும் எழுத ஆரம்பித்தார். தன்னுடைய 20 ஆவது வயதில் தன்னுடைய முதல் நாடகத்தை ‘‘வால்மீகி பிரமிதா’’ (The Genius of Valmiki) எழுதினார். அவருடைய 60வது வயதில் ஓவியங்களை வரையவும், வண்ணங்களை தீட்டவும் ஆரம்பித்தார். தெற்கு பிரான்ஸில் சந்தித்த ஒரு கலைஞரின் ஊக்குவிப்பினால் தன்னுடைய படைப்புக்களை வைத்தும் பொருட்காட்சி நடத்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1978 ஆம் ஆண்டு முதல் 1932 ஆம் ஆண்டு முடியும் வரை இரவீந்திரர் 5 கண்டங்களில் முப்பத்தொறு நாடுகளுக்கு சென்று வந்தார். 1915 ஆம் ஆண்டில் பிரித்தானிய அரசாங்கம் தாகூரிற்கு "Sir/Knight" ஆகிய பட்டங்களையும் வழங்கி கௌரவித்தது. ''யாத்ரி'' என்னும் நூற் தொகுப்பில் தாகூரின் தென்கிழக்கு ஆசியாவின் பயணக் குறிப்புக்களை அறியலாம்.

எழுத்தாளராக, அநேக புத்தகங்கள் எழுதியுள்ளார். முதலில் தன் தாய் மொழியான வங்காளத்தில் தான் எழுதினார். அவருடைய கீதாஞ்சலிக்குக் கிடைத்த வரவேற்பை பார்த்ததும், தான் ஏற்கனவே வங்காளியில் எழுதியதை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். 2000த்திற்கும் மேலாகப் பாடல்கள் எழுதி சில பாடல்களுக்கு அவர் இசையும் அமைத்துள்ளார்.

கடுமையான செந்நெறி வடிவங்களை விளக்கியதன் மூலம் தாகூர் வங்காள கலையில் புதுமைகளை புகுத்தினார். இவரது புதினங்கள், கதைகள், பாடல்கள், நாட்டிய நாடகங்கள், கட்டுரைகள் என்பன அரசியல் தலைப்புகளையும் தனிப்பட்ட விடயங்களையும் தழுவி இருந்தது. கீதாஞ்சலி, கோரா, சாரேபைரே ஆகியவை இவரது பிரபலமான படைப்புக்களாகும். இவரது பாடல்கள் சிறுகதைகள், புதினங்கள் ஆகியவை அவற்றின் உணர்ச்சிகளுக்காகவும், மொழி நடைக்காகவும், இயல்புத்-தன்மைக்காகவும் பெரிதும் புகழ்பெற்றன.

1890ம் ஆண்டில் இவரது பெயர் பெற்ற ஆக்கங்களில் ஒன்றான ''மானஸ்த்'' எனும் கவிதையை வெளியிட்டார். அத்தோடு தாகூர் தான் இயற்றி மெட்டமைத்த பாடலை பாடும் முறையை சுவாமி விவேகானந்தருக்கு கற்பித்து பாவித்துள்ளார். சுவாமி விவேகானந்தர் தமது ''சங்கீத கஸ்தரு'' என்ற இசை நூலில் தாகூரின் பாடல்களை தொகுத்தமைத்துள்ளார். இவர் 1901 இல் ''நைவேத்ய''எனும் ஆக்கத்ததையும் 1906 இல் ''கேயா'' எனும் ஆக்கத்தையும் வெளியிட்டார்.

1921 ஆம் ஆண்டு சாந்திநிகேதனுக்கு அருகில் உள்ள சுருல் என்ற கிராமத்தில் ஸ்ரீநிகேதன் (Abode of Peace) என்ற நிறுவனத்தை ஆரம்பித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1905 ஆம் ஆண்டில் "வங்காளத்தைப் பிரிப்போம்" என்ற அரசாங்கம் தீர்மானிக்க வங்காளம் முழுவதும் கொதித்தெழுந்தது. இரவீந்திர நாதரும் "அடிமை ஒழிக" என கர்ஜித்து எழுந்தார். எண்ணிறந்த கூட்டங்களில் இடியென வெகுண்டு பேசினார். இவர் செய்த பிரசாரங்களில் உள்ள வீராவேசமும், தேசாபிமானமும், தன் நாட்டு மக்களிடத்தில் உள்ள தயையும் வேறெந்த மொழியிலும் நான் கண்டதில்லை" என்று இ.ஜே. தோம்சன் என்னும் ஆங்கிலேயர் புகழ்ந்துரைத்தார்.

இக்காலத்தில் தான் இரவீந்திரநாத்தாகூர், தம் நாட்டு மக்களிடமிருந்த வறுமையையும், அவர்கள் மிகவும் தாழ்ந்த நிலைக்கு தள்ளப் பட்டிருப்பதையும், அடிமைகள் போல் நடத்தப்படுவதையும் கண்டு மனம் வெகுண்டார். கல்வி அறிவே இல்லாதோர் எண்ணிறைந்தவர். மூட நம்பிக்கையும், குறுகிய நோக்கமும், சுயநலமும், சிறு மனமும் எங்கும் திகழ்வதைக் கண்டார். "இந்திய மக்களுக்கு இக்கதியும் வந்ததோ!" என்று துன்பத்தில் ஆழ்ந்தார். தங்களிடமிருந்த இப்பெருங்குறைகளை நீக்கினாலன்றி இவர்களால் அடையத்தக்கது ஒன்றுமே இல்லை என்று முடிவு செய்தார். இனி இங்கு இருப்பதில் பயனில்லை என்று தேசிய இயக்கங்கள் யாவற்றிலுமிருந்து திடீரென்று விலகினார்.

1919 ஆம் ஆண்டில் பஞ்சாபிலுள்ள அம்ரித்சாரில் நடந்த கோர சம்பவத்தைக் கேட்டதும் இரவீந்திரநாத்தாகூர், தமக்கு ஆங்கிலேயர் அளித்த "ஸர்" பட்டத்தைத் துறந்ததுடன், உள்ளன் பில்லாத வெளி நடப்பில் தமக்குப் பற்றில்லை என்பதையும் புலப்படுத்தி செவி தைக்கும்படி சுடுசொல் பகர்ந்தார்.

1930 ஆம் ஆண்டு ஜுன் மாதம் H.G. Wells அவர்களும் தாகூரும் ஜெனீவாவில் சந்தித்தனர். அன்று அவர்கள் பல விஷயங்கள் பற்றி உரையாடினார்கள். ஜுலை 14 1930 அன்று Dr. Mendel என்னும் நண்பர் மூலம் பிரசித்திபெற்ற நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானி ஐன்ஸ்டீனை அவர் இல்லத்தில் சந்தித்து உரையாடினார். இதன் பிறகு ஐன்ஸ்டீன் தாகூருடைய இல்லத்திற்கு வந்து அவருடன் உரையாடினார். 1940 ஆம் ஆண்டு இங்கிலாந்து நாட்டின் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் சாந்திநிகேதனுக்கே வந்து அவருக்கு "டாக்டர் ஆப் லிட்ரேச்சர்" என்ற விருது வழங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விஞ்ஞானி அல்பர்ட் ஐன்ஸ்டீன்

உடன்

ரவீந்திரநாத் தாகூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதழாசிரியரிடமிருந்து....

ஸ்யாமளன்....
ஸ்யமந்தகன்....
ஸ்ருங்காரன்....
சீர் கொண்ட மனதுள்
ஸ்வர்ணமாய் உறைவான்
இன்னருள் பொழிந்தது....
கரத்தினில் தவழ்ந்தது....
**'ஸ்வரம்' தந்த**
வரம்....



பன்முக ஆளுமைப்படைத்த இரவீந்திரநாத்தாகூர் அவர்களை சற்றே மனதிருதுகின்றேன் இம்முறை. இவரது படைப்புகளுள் ஒருவித பணியின் மென்மையை நுகரலாம். எனினும் வங்காளப் பிரிவினையின் போது ஆக்ரோசம் கொண்டெழுந்த ஒரு முகம் இவருக்கு உண்டு.

புகழ்பெற்ற "கீதாஞ்சலியின்" நாயகனாகிய இரவீந்திரநாத் தாகூரை பற்றி எம்மாணவ செல்வங்கள் அறிந்து கொள்ள அவாவுகின்றேன். இவ்வுலகில் உலகப்பொது ஆளுமைகள் ஓராயிரம் பேர் உண்டு. அவ்வகையில் மிகு ஆளுமைப்படைத்த, நோபல் பரிசு பெற்ற தாகூர் அவர்களும் ஒருவரே. தாகூர் அவர்கள் சுவாமி விவேகானந்தருடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்தார். புகழ்பெற்ற விஞ்ஞானி அல்பர்ட் ஐன்ஸ்டீனும் தாகூருடன் நட்பினைக் கொண்டிருந்தார்.

இவ்விதழினை நெறிப்படுத்த அன்புடன் அனுமதி தந்த அதிபர், தமிழ் பிரிவு அதிபர், பகுதித்தலைவர், ஆசிரியர்கள், மாணவச் செல்வங்கள் அனைவருக்கும் என் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ்வேளையில் துணை இதழாசிரியரும், எனது அன்பிற்கினிய மாணவியுமான திருமதி தேவிகா இரவிச்சந்திரன் அவர்களுக்கும், எனது மனங்கனிந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன். திருமதி சுமதினி மகிந்தன்ராஜ், திருமதி நந்தினி பாஸ்கரன் ஆகியோருக்கும் எனது விஷேட நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் மாணவ இதழாசிரியருக்கும், துணை மாணவ இதழாசிரியருக்கும், நூற் குழுவினருக்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆக்கங்களை தந்த அனைவருக்கும், அழகுர கணனி ஆக்கம் செய்த திருமதி ரஞ்சனி செற்றிக் அவர்களுக்கும், வழமைப்போல் இம்முறையும் மிக குறுகிய காலத்திற்குள் இச்சஞ்சிகையை அழகுற பதிப்பித்து தந்த பாக்யா அச்சகத்தினருக்கும் எனது உளங்கனிந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

வாழ்க தமிழ் மன்றப்பணி!

திருமதி மீரா அல்பிரட்
இதழாசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமானியா அன்சார்
தரம் - 12
கலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஹஷ்மிதா பார்த்ீபன்
தரம் - 8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீங்காத நினைவுகளுடன்
## முன்னாள் தமிழ்ப்பிரிவு அதிபர்
## திருமதி நவம் வெள்ளைச்சாமி



"நிமிர்ந்த நன்னடையும் நேர் கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கு மஞ்சாத நெறிகளும்
திமிர்ந்த ஞானச் செருக்கு மிருப்பதால்
செம்மை மாதர் திறம்புவ தில்லையாம்
அமிழ்ந்து பேரிரு ளாமறி யாமையில்
அவல மெய்திக் கலையின்றி வாழ்வதை
உமிழ்ந்து தள்ளுதல் பெண்ணற மாகுமாம்"

இப் பாடலுக்குப் பொருள் சேர்க்கும் வகையில் புரட்சிக் கவிஞன் பாரதியின் புதுமைப் பெண்ணாக தன்னை உருவாக்கிக் கொண்ட திருமதி. நவரத்தினம்மா வெள்ளைச்சாமி அம்மையார் அவர்கள் எமது கல்லூரியிலே இணைந்துக்கொள்ள முன்பே கல்வித்துறையில் பல வெற்றிகரமான படிகளைத் தாண்டி வந்தவர்.

தனது ஆரம்பகால ஆசிரியப் பணியை கண்டி இந்து சிரேஷ்ட தமிழ் வித்தியாலயத்திலும், அதனைத் தொடர்ந்து கண்டி கட்டுகஸ்தோட்டை புனித அந்தோனியார் மகளிர் கல்லூரி, புசல்லாவை சீ.சீ. தமிழ் மகா வித்தியாலயம், புசல்லாவை சரஸ்வதி தமிழ் மகா வித்தியாலயம், நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரி ஆகியவற்றிலும் சிறப்புற ஆற்றியவர். அதனைத் தொடர்ந்து கல்வி அமைச்சின் நியமனத்தின் பேரில் பெருந்தோட்டக் கல்வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்தி திட்டத்தின் (PSDP) கீழ் இளம் ஆசிரியர் குழுவுக்குப் பயிற்சியளிக்கும் நிறுவனத்தின் பொறுப்பாளராகவும் விரிவுரையாளராகவும் சிறப்பாகச் செயற்பட்டார். தொடர்ந்து பெருந்தோட்ட ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறியின் பொறுப்பாளராக கடமையாற்றிய அம்மையாரின் சேவை 1988 ஆம் ஆண்டு எமது கல்லூரியை நோக்கித் திரும்பியது. எமது கல்லூரியின் தமிழ்ப்பிரிவு அதிபராக கடமையேற்று பணியாற்றிய அம்மையார், பாடசாலை சேவையைத் தாண்டி கல்வி மாணிப்பட்ட கற்கை நெறி, பட்டமேற் கல்வி டிப்ளோமா கற்கை நெறி ஆகியவற்றின் பொறுப்பாளராகவும், விரிவுரையாளராகவும் செயற்பட்டதோடு, தேசிய கல்வி நிறுவகத்தின் சிங்கள மொழிமூல பட்டமேற் கல்வி டிப்ளோமா பாடநெறியின் தமிழ்மொழி வள ஆலோசகராகவும், தன்னை வியாபித்துக் கொண்டதோடு 1996 ஆம் ஆண்டு புதுடில்லியில் கல்வி நிர்வாகத் திட்டமிடலுக்கான விசேட பயிற்சியைப் பெற்றுத் திரும்பினார்.

இவற்றையெல்லாம் கடந்து அவர் ஒரு சிறந்த சொற்பொழிவாளரும், எழுத்தாளரும் ஆவார் என்றால் அது மிகையாகாது. இவரது காத்திரமான படைப்புகள் பல வீரகேசரி உட்பட பல பத்திரிகைகளில் வெளிவந்துள்ளதோடு, பல்வேறு நூற் பதிப்புகளிலும் பிரசுரமாகியுள்ளன. மேலும் சர்வதேச அபிவிருத்திக்கான நோர்வேஜியன் ஸ்தாபனம், தேசிய கல்வி நிறுவகம் என இன்னோரன்ன நிறுவனங்களின் கருத்தரங்குகளில் பங்குபற்றி உரையாற்றியுள்ளதோடு பல்வேறு அமைப்புகளிலும், கோயில்களிலும் சொற்பொழிவாற்றியுள்ளார். இவர் இலங்கைத் தொலைக்காட்சி மற்றும் இலங்கை வானொலி என்பவற்றிலும் பல சொற்பொழிவுகளை ஆற்றியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. இச் சேவைகளோடு மட்டும் தன்னை வரையறுத்துக் கொள்ளாது, பல்வேறு சமூகப் பணிகளிலும் தன்னை அர்ப்பணிப்புடன் ஈடுபடுத்திக் கொண்டார். இவரது அரிய பல சமூகப் பணிகளையும், சமூக அக்கறையையும் பாராட்டி இலங்கை நீதி அமைச்சு 2000 ஆம் ஆண்டு அகில இலங்கை சமாதான நீதவான் பட்டத்தை வழங்கியது. இவ்வாறு இவரது சாதனைகளைப் பட்டியலிட்டுக் கொண்டே போகலாம் என்பது வியப்புக்குரியதல்ல ஏனெனில் இவரது இத்தனை ஆற்றல்களின் அழியாது வாழும் சான்றுகளே இவர் வழிகாட்டி நெறிப்படுத்தியதில் இன்று சிகரம் தொட்டு நிற்கும் பல்லாயிரக்கணக்கான மாணவ, மாணவிகள்.

பெண்மையின் இலக்கணமாகத்திகழ்ந்த இவர் நிர்வாகத்திலும், ஆளுமைமிக்க அதிபராகத் திகழ்ந்தார். எமது கல்லூரியிலே தமிழ் பிரிவுக்கு அதிபராக இணைந்து கொண்டபின் அவர் ஆற்றிய அரும்பணிகள் அளவற்றவை. இருமொழிமூல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைகளில் இயல்பாக ஏற்படும் சவால்களை வெற்றிகரமாக எதிர்கொண்டு தமிழ்ப்பிரிவின் தரத்தை எப்போதும் உறுதி செய்தவர். இன்று நமது கல்லூரியின் தமிழ்ப்பிரிவு தலை நிமிர்ந்து நிற்கிறது என்றால், அந்த புகழ் யாவும் அதற்கு ஆணிவேராய்த் திகழ்ந்த அம்மையார் அவர்களையே சாரும். தமிழுக்கு தனி அரங்கமைத்து தமிழ்க் கலைகள் அனைத்தையும் "சங்க நாதமாய்" முழங்கச் செய்த பெருமை அவருக்கு மட்டுமே உரியது. ஏனெனில் இன்றும் மிகச் சிறப்பாக நிகழ்ந்து கொண்டிருக்கும் "சங்க நாதம்" கலைவிழாவும், சஞ்சிகை வெளியீடும் 1990ம் ஆண்டு இவராலேயே கோலாகலமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

எமது கல்லூரியின் வரலாற்றில் "திருமதி ஏக்கநாயக்க அம்மையார் யுகம்" என சிறப்பித்துக் கூறுவது போல், கல்லூரியின் தமிழ்ப்பிரிவின் வரலாற்றில் "வெள்ளைச்சாமி அம்மையார் யுகம்" என்பதை யாராலும் மறுக்கவோ, மறக்கவோ முடியாது என்பதே நிஜம். ஏனெனில் தன்னுடைய பணியில் மகிழ்வோடும், நேர்மையோடும், நேர்த்தியோடும் ஈடுபட்டு தன்னைச் சூழ இருக்கும் அனைவரையும் மகிழ்வுடனும், பாரபட்சமின்றி, சமத்துவத்துடனும் நடத்தி கடினப் பணிகளையும் இலகுவாக்கும் உளவியல் நுட்பமும், மனிதநேயமும் அறிந்தவர். தமிழ்த்துறையின் பெருமை காக்கும் வகையில் திடமான முடிவுகளை தக்க சமயத்தில் திறம்பட எடுப்பதில் திடசங்கற்பம் கொண்ட இவர் வெறுமனே நிர்வாகத்தின் கட்டளைக்குத் தலைசாய்க்கும் பதுமையாக அன்றி உரிமைகளை வென்றெடுக்கும் ஆளுமையுடன் திகழ்ந்தவர். நேர்மை, தெளிந்த சிந்தனை, பிரச்சினைகளைத் தர்க்க ரீதியாக அணுகும் விதம், மற்றவர் மீதான உண்மையான கரிசனை, இனிமையான வார்த்தைப் பிரயோகம், புன்னகை மாறாத முகம், மும்மொழி பேசும் ஆற்றல், சமத்துவத்தன்மை என்பன அனைத்து மொழிமூல ஆசிரியர்களையும், மாணவர்களையும், கல்விசாரா ஊழியர்களையும் இவர்மீது பேரபிமானம் கொள்ளச் செய்தது எனலாம்.

அது மட்டுமா? மாணவர்களது நிலைமைகளையும், தனித் திறமைகளையும் நன்கறிந்து கல்வியூட்டியதோடு, ஆளுமைமிக்க சீரிய மங்கையராய் மாணவிகளை வழிநடத்திச் சென்றவர் என்றால் அது மிகையாகாது. மாணவர்களுக்கு புகட்ட வேண்டிய பாடங்களை மட்டுமன்றி மாணவரையும் அறிந்து கற்பிக்கும் உயரிய உளவியல் நுட்பங்களை நன்கறிந்தவர். பாடத்தை ஆரம்பிக்கும்போது மாணவர்களது உடல், உள சமூகத் தன்மைகளை உள்ளார்ந்து அறிந்து கொண்டு இன்முகத்துடன் தன் பக்கம் ஈர்த்து இலாவகமாக கல்வியூட்டும் வித்தையை இதுவரை வேறு யாரிடத்திலும் காணக் கிடைத்ததில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மொழி மீது தீராத காதல் கொண்டிருந்ததாலோ என்னவோ, முத்தமிழை ஆழக்கற்று முழுமையாய் தன்னுள் அடக்கி வைத்திருந்தார். அதனால் தான் அவர் ஒரு போதும் கற்பித்தலுக்கு செய்யுள் நூல்களை கையில் எடுத்ததில்லை. அனைத்து செய்யுளும் பொருளும் அவரிடத்தில் இருந்து அருவிபோல பாய்ந்து வரும் என்பது அதிசயம், ஆனாலும் உண்மை. அவர் கற்பித்த எந்த பாடத்தையும் மாணவர்கள் ஒருபோதும் மீளக் கற்றதில்லை ஏனெனில் ஒரே தடவையில் பாடங்களை மனதில் பதிய வைக்கும் மந்திர வித்தை அறிந்தவர் அவர். இவ்வாறு பரவசமூட்டி கற்பிக்கும் அவர் வகுப்பறைக்கு அப்பால் சென்று மாணவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை தேடியறிந்து, அரவணைத்து உதவும் அற்புத பண்புகளோடு ஆசிரியர் சமூகத்திற்கு முன்னுதாரணமாக வாழ்ந்து காட்டியவர்.

மேலும் யாரிடத்திலும் எளிதில் காணக்கிடைக்காத அறிய பண்பாய், எத்தகைய சூழ்நிலையிலும் அன்றலர்ந்த செந்தாமரைப் போல மலர்ந்த முகத்துடனும், நிறைந்த அகத்துடனும் மாணவிகளையும், ஆசிரியர்களையும் "மகளே" என மிகுந்த பாசத்துடன் விளிக்கும் மேன்மைப் பண்பு மிகுந்தவர். இத்தகைய தனிச் சிறந்த பண்புகளை வெளிப்படுத்துவதில் அவருக்கு நிகர் அவரே. மேலும் தன்னுடன் பணியாற்றிய ஆசிரியர்களுடன் மாத்திரமன்றி கல்லூரியின் கல்விசார், கல்விசாரா உத்தியோகத்தவர் அனைவரிடத்திலும், அன்போடும், அனுசரணையோடும் பழகிய அம்மையார் சமூக உணர்வும், தியாக மனப்பான்மையும் சமயப் பற்றும் மிக்கவராகவும் திகழ்ந்தார்.

2002 ஆம் ஆண்டு கல்விச் சேவையிலிருந்து ஓய்வு பெற்றுக் கொண்ட அவர், தனது பணி ஓய்வின் பின்னரும் கல்வித்துறைக்கு பல்வேறு சேவைகளை ஆற்றினார். அச்சேவைகளை கல்விக்கு மட்டுமே வரையறுத்துக் கொள்ளாது, சமூகத்தின்பாலும் விரிவடையச் செய்து சமூகத்தின் உயர்வுக்கும், தமிழின் பெருமைக்கும், சைவ சமயத்தின் வளர்ச்சிக்கும் பாடுபட்ட அம்மையார் தமிழ் மகளிருக்கு சமய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்காகக் கொண்டு கண்டியில் "அஞ்ஞனை இந்து சேவா" சங்கத்தை நிறுவினார். அதனூடாக பொது மக்களுக்கு அரிய பல சேவைகளை ஆற்றினார். மேலும் 2008 ஆம் ஆண்டு இலங்கை இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தினூடாக "சைவ சித்தாந்த பயிற்சி" சான்றிதழைப் பெற்றுக் கொண்டதோடு இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் இந்து இளைஞர், யுவதிகளுக்கான ஆன்மீக எழுச்சி பட்டறைகளில் உரை நிகழ்த்தி, இளைய தலைமுறையினருக்கு பயிற்சியளித்ததோடு, பதினான்காவது அனைத்து உலக ஆய்வு மகா நாட்டிலும் பங்குபற்றி பங்களிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தார். கொழும்பு தமிழ் சங்கத்தின் நிரந்தர உறுப்பினரான இவர் அச் சங்கத்திற்காக பல சேவைகளையும், சொற்பொழிவுகளையும் ஆற்றினார். மேலும் பல அமைப்புகளிலும் கோயில்களிலும் சொற்பொழிவாற்றி அறிவூட்டும் பணியை தொடர்ச்சியாக மேற்கொண்டு தன் சேவையை கடல் கடந்தும் கொண்டு சென்ற அவர் 2004 ஆம் ஆண்டு லண்டன் சிவன் கோயிலில் பெரியபுராணம் பற்றிய சொற்பொழிவை நிகழ்த்தினார்.

ஓய்வுக்கு முன்னரும் ஓய்வுக்குப் பின்னரும் என எல்லையில்லா சேவைகளைத் தாண்டி, பல விருதுகளையும் இவர் பெற்றுள்ளார். மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழாவில் ஆன்மீகத் துறைக்காக விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட அம்மையாருக்கு 2004 ஆம் ஆண்டு லண்டன் பேரூர் ஆதீன மடத் தலைவரால் சமயப்பணியைப் பாராட்டி விருது வழங்கப்பட்டது. மேலும் 2015 ஆம் ஆண்டு இலங்கை கலாசார அலுவல்கள் திணைக்களம் இவரது சேவையைப் பாராட்டி "கலாபூஷணம்" விருதை வழங்கி கௌரவித்தது. அதே ஆண்டு சைவப்புலவர் பட்டதாரிகள் சங்கத்திடமிருந்து "சைவப் புலவர்" பட்டத்தையும் பெற்றுக் கொண்டார்.

பெண்ணுக்கே உரிய பெருந்தன்மைகள் யாவும் நிறைந்த அவர் தம் வாழ்க்கையில் நற்பண்புகள் நிறைந்த நல்லாசிரியையாக, பக்குவம் நிறைந்த பகுதித் தலைவராக, வாண்மை மிகுந்த தமிழ்ப் பிரிவு அதிபராக, வித்தைமிகு விரிவுரையாளராக, ஆசான்களுக்கே ஆசானாக, ஆசான்களை ஆதரிக்கும் சகோதரியாக, மாணவச் செல்வங்களை மனம் நிறைந்து அரவணைக்கும் தாயாக, பல் ஆளுமை மிகுந்த குடும்பத் தலைவியாக, கணவனுக்கு கனிவோடு ஒத்துழைப்பு நல்கும் நல்ல மனைவியாக, ஈன்ற குழந்தைகளை சீரிய பாதையிலே வழி நடத்தி, நெறிப்படுத்திய அன்புத் தாயாக,சமூகத்தின் நன்மைக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்ட சமூக சேவகியாக பல்வேறு பாத்திரக் கோலங்களை இரசித்தும், இன்புற்றும், இதயத் தூய்மையுடனும், வாழ்ந்து காட்டியவர். நல்வாழ்க்கைக்கு வழிகாட்டியவர்களை நாம் எங்கும் காணலாம் ஆனால் வாழ்ந்து காட்டியவர்களை காண்பது அரிது. அந்த அரிதான காரியத்தை நம் கண் முன்னே நிகழ்த்திக் காட்டியவர் எமது அம்மையார் அவர்கள்.

பெண்கள் உயர்தர பாடசாலையின் உயர்வில் உண்மையான அக்கறையும், அர்ப்பணிப்பும் கொண்டு தன் பதவி நிலையில் நேர்மையையும், தொழில் தர்மத்தையும் கடைப்பிடித்து எந்தப் பணியையும் நேர்த்தியாக நிறைவு செய்ய மாணவர்களுக்கு அன்புடனும், கண்டிப்புடனும் வழிகாட்டி அனைவரையும் அன்போடு அரவணைத்துக் கொண்டு பயணிக்கும் ஆளுமைப் பண்புகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்தும் மொத்தமாய் நிறைந்திருந்த மாட்சிமை மிகுந்த பெண்மணி. இவரது வகித்த இடம் கண்டி பெண்கள் உயர்தர பாடசாலையில் இன்றும் வெற்றிடமாகவே இருப்பதாகத் தோன்றுவது யதார்த்தமானதே ஏனெனில், அத்தனைப் பண்புகளையும் வாழ்க்கையாக வாழ்ந்து காட்டிய அவரது இலட்சணங்களோடு போட்டியிடுவது யாருக்கும் சற்று சிரமம் தான்.

தனது இறுதி மூச்சு வரை சிறந்த தமிழ் சொற்பொழிவாளராக, சைவப்புலவராக, சமூக முன்னேற்றத்திற்கும், சமய வளர்ச்சிக்கும் தன்னை அர்ப்பணித்த சமூக சேவகியாக தன்னை மிளிரச் செய்தவர். சுயநலம் சார்ந்த வாழ்க்கைக்குள் உள்வாங்கப்பட்டுக் கொண்டிருக்கும் இன்றைய தலைமுறையினருக்கு, சமூக வாழ்க்கை வாழ்ந்த இவர், ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. எம்மை வளர்த்தவர், வளப்படுத்தியர், வழிகாட்டியவர், வாழ்வாங்கு வானுயர வாழ வைத்தவர். அவர் புகழ் வையம் அறியச் செய்வதில் அகம் மிக பெருமிதம் கொள்கிறது.

பாரதி இன்றிருந்தால் இத்தகைய பெண் பாத்திரத்தைக் கண்டு வியப்படைந்திருப்பார் என்பது திண்ணம். இக் கல்லூரியின் வளர்ச்சிக்கு அரும் பணியாற்றிய அம்மையார் அவர்கள் அனைவரது அகங்களிலும் அன்றும் இன்றும் என்றும் நீங்கா இடம் பெற்று திகழ்கிறார் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போன்றதாகும்.

செல்வி பழனியப்பன் லிங்கேஸ்வரி
ஆசிரியர்
(பழைய மாணவி 1989-1997)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர்களும் தமிழ்ப்பிரிவு ஆசிரியர்களும்



அமர்ந்திருப்போர் (இடமிருந்து வலம்):-

திருமதி மஹீஷா பாரூக் (தமிழ் இலக்கியமன்றத்தலைவர்), திருமதி பிரபாங்கனி அருட்செல்வம், திருமதி P.M. கார்த்திகேசுலிங்கம், திருமதி மாலதி ஆனந்தவேல், திருமதி சுமதினி மஹின்தன்ராஜ், திரு. A.A. பத்திரனகே (பிரதிஅதிபர்), திருமதி சம்பிக்கா கருணாதாஸ (பிரதிஅதிபர்), திருமதி மல்காந்தி அபேகுணசேகர (அதிபர்), திருமதி சமந்தா தசநாயக்க (பிரதிஅதிபர்), திருமதி சிவாந்தனி நந்தகுமார் (தமிழ்பிரிவு அதிபர்), திருமதி மனோகரி மகிபாலன் (பகுதிதலைவர்), திருமதி மீரா அல்பிரட் (இதழாசிரியர்), திருமதி கௌஷல்யா சத்தியேஸ்வரன், திருமதி சரோஜினி பிரேமநாத்

நிற்போர் (முதல் வரிசை):-

செல்வி வைஷ்னவப்பிரியா தேவசந்திரதேவர், திருமதி ஏ.எஸ்.என். பர்ஹானா, திருமதி மேனகா குணசேகரன், திருமதி பஸ்லினாபாயிஸ், திருமதி நந்தினி பாஸ்கரன், திருமதி பர்ஸானா அஸாம், திருமதி ஷகீலா சரவணகுமார், திருமதி ரிஸ்பாபாரூக், திருமதி நஸீமா அஸ்மில் பாரூக், திருமதி மாலினி சந்திரசேகரம், திருமதி எம்.எஸ் பஸீனா, திருமதி தேவிகா இரவிச்சந்திரன்

நிற்போர் (இடமிருந்து வலம்):-

திரு. தெய்வேந்திரராஜா முரளிதரன், திரு. சணமுகராசா பிரமானந்தன், செல்வி பழனியப்பன் லிங்கேஸ்வரி, செல்விகோபால் நிரோஷா, திருமதி M.Y.F. மஷீனா, திருமதி M.N.N. சஹீராநிஷாம், திருமதி தமயந்தி ஸ்ரீ கர்ணகுமார், திருமதி J.B. ஜுனய்டீன், திருமதி சபீனா முனவ்வர், திரு. கிருஷ்ணசாமிசிவராஜன், திரு. தர்மலிங்கம் பாலகிருஷ்ணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் இலக்கிய மன்ற அங்கத்தவர்கள்



அமர்ந்திருப்போர் (இடமிருந்து வலம்):-
செல்வி V. சயோஜிதா (தமிழ் இலக்கியமன்றதலைவி), திருமதி ஷபீனா முனவ்வர், திருமதி M.S. பஸீனா (தமிழ் இலக்கியமன்ற பொருளாளர்), திருமதி ஷகீலா சரவணகுமார் (தமிழ் இலக்கியமன்ற செயளாளர்) திருமதி சிவாந்தினி நந்தகுமார் (தமிழ் பிரிவுஅதிபர்), திருமதி மல்காந்தி அபேகுணசேகர (அதிபர்), திருமதி மனோகரி மகிபாலன (தமிழ் பிரிவுபகுதி தலைவர்), திருமதி மஹிஷா பாரூக் (தமிழ் இலக்கியமன்ற தலைவர்), திருமதி சரோஜினி ரமேஷ் பிரேமநாத், திருமதி மீரா அல்பிரட் (இதழாசிரியர்), திருமதி தேவிகா இரவிச்சந்திரன் (துணை இதழாசிரியர்), செல்வி T. அக்ஷரா (தமிழ் இலக்கியமன்ற மாணவசெயலாளர்)

நிற்போர் (இடமிருந்து வலம்):-
செல்வி K. சதுர்ஷி, செல்வி R. மதுபாஷினி, செல்வி M. டானியா, செல்வி. P. லக்ஷனா, செல்வி. S. தர்ஷிகா, செல்வி. P. ரேக்ஷனா (இலக்கிய மன்றப் பொருளாளர்) , செல்வி V. சந்தியா, செல்வி A.F இவோன் (மாணவ துணை இதழாசிரியர்), செல்வி V. நர்மதா (மாணவ இதழாசிரியர்), செல்வி K. சதுர்ஷி, செல்வி P. சுகிர்தா, செல்வி M.N.F ஸைனப், செல்வி B. சஞ்சனா, செல்வி R. சாருண்யா, செல்வி M.R.ரீமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை மன்றப் பொறுப்பாசிரியர்களும் மாணவத் தலைவர்களும்



அமர்ந்திருப்போர் (இடமிருந்துவலம்):-
திருமதி சரோஜினி ரமேஷ்பிரேம்நாத் (இந்துமன்ற பொறுப்பாசிரியர்), திருமதி மஹீஷா பாரூக் (தமிழ் இலக்கியமன்ற தலைவர்), திருமதி சிவாந்தினி நந்தகுமார் (தமிழ் பரிவுஅதிபர்), திருமதி மல்காந்தி அபேகுணசேகர (அதிபர்), திருமதி மனோகரி மகிபாலன் (பகுதித்தலைவர்), திருமதி தமயந்தி ஸ்ரீ கருணகுமார் (கிருஸ்தவமன்ற பொறுப்பாசிரியர்), திருமதி பர்ஸானா அஸாம் (இஸ்லாமியமன்ற பொறுப்பாசிரியர்)

நிற்போர் :- (இடமிருந்து வலம்):-
செல்வி M.F.F. அம்னா, செல்வி R. ருகையா மரியம், செல்வி S. ப்ரீத்தா, செல்வி R. ஹரிஷ்ணவீணா, செல்வி V. சயோஜிதா, செல்விT.அக்ஷரா, செல்வி M.S. சைனப், செல்வி T.P. அலோமா, செல்வி S. சுரேகா நித்யஸ்ரீ, செல்வி R. தஸ்னிம், செல்வி M.N. நிப்லா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் தினப்போட்டிகள் 2018 வலயமட்டம் வெற்றி பெற்றவர்



அமர்ந்திருப்போர் (இடமிருந்துவலம்):-

திருமதி Y.G.S.F ரினோஸா, திருமதி ஷபீனா முனவ்வர், திருமதி M.S. பஸினா (இலக்கியமன்ற பொருளாளர்), திருமதி ஷகிலா சரவணகுமார் (தமிழ் இலக்கியமன்ற செயலாளர் ), திருமதி சிவாந்தினி நந்தகுமார் (தமிழ் பிரிவு அதிபர்) திருமதி. மல்காந்தி அபேகுணசேகர (அதிபர்), திருமதி மனோஹரி மகிபாலன் (பகுதிதலைவர்), திருமதி மஹீஷாபாருக், திருமதி சரோஜினி ரமேஷ் பிரேமநாத், திருமதி மீரா அல்பிரட்

நிற்போர் முதலாம் வரிசை (இடமிருந்துவலம்):-

செல்வி S. ஸ்ரீவர்ஷினி, செல்வி B. ஹிமாஷா, செல்வி I. சுதீக்ஷனா, செலவி M.R.F. அதீபா, செல்வி. S.லோஷினி, செல்வி J. அஷ்வதி, செல்வி R. பிரவீணா, செல்வி T. அகஷரா, செல்வி P. கவிஷா, செல்வி S. பிரபோஷினி ,செல்வி T. தெல்மினி உபேக்ஷா

நிற்போர் இரண்டாம் வரிசை (இடமிருந்துவலம்):-

செல்வி S. கவிதா, செல்வி S. அட்சயா, செல்வி S.K. மெத்மாகசுன்தி, செல்வி S. பிருந்தியா, செல்வி S. துளசி தமயலாஷினி, செல்வி A. பிரதிக்ஷா, செல்வி K பிரகன்யா, செல்வி S. கனிஷ்கா, செல்வி S. ஹிமாஷா, செல்வி K. கிருஷ்மிதா, செல்வி S. நிதுஷா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் 13 மாணவிகளும் கற்பிக்கும் ஆசிரியர்களும் 2018



அமர்ந்திருப்போர் (இடமிருந்துவலம்):-

திரு. சண்முகராசா பிரமானந்தன், திரு. தர்மலிங்கம் பாலகிஷ்ணன். திரு. தெய்வேந்திரராஜா முரளிதரன், திருமதி. பர்ஸானா அஸாம், திருமதி திருமதி பஸ்லினா பாயிஸ, திருமதி தேவிகா ரவிச்சந்திரன், எம்.எஸ். பஸினா,திருமதி மாலினி சந்திரசேகரம், திருமதி பர்ஹானா கலீல், திருமதி சிவாந்தினி நந்தகுமார் (தமிழ்பிரிவு அதிபர்), திருமதி மல்காந்தி அபேகுணசேகர (அதிபர்), திருமதி மனோகரி மகிபாலன் (பகுதிதலைவர்), திருமதி மீரா அல்பிரட், திருமதி ரிஸ்பா பாரூக், திருமதி ஷகிலா சரவணகுமார், திருமதி ஷபீனா முனவ்வர், திருமதி தமயந்தி ஸ்ரீ கருணகுமார், திருமதி நஸீமா பாருக், திருமதி சரோஜினி பிரேம்நாத், திருமதி M.Y.F மசீனா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாம் வரிசைநிற்போர்: (இடமிருந்துவலம்)

P.லக்ஷனா, M.R.சாரா, K. தட்சண்யா, P.ரேக்ஷனா, A.F. இவோன், S. தர்ஷிகா, R. ருகையாமரியம், T.P.அலோமா, S.ப்ரீத்தா, S.சுரேகாநித்யாசிரி, R. ஹரிஷ்ணவீணா, V.சயோஜிதா, T. அக்ஷரா, M.S. செய்னப், M.F.F. அம்னா, R.தஸ்னிம், M.N.நிப்லா, Vநர்மதா, P. சுகிர்தா, B.சிந்துஜா

நிற்போர் இரண்டாம் வரிசை: (இடமிருந்துவலம்)

R.ரிஸ்லா, P.ஹஷ்விதா, R.மதுபாஷினி, M.N.F.ஷமிஹா, M.A.F.சஹ்ரா, M.A.F. அமானியா, N.Mஅம்னா, M.முஸீனா, T.மாதவி, M.R.அலெக்ஸ்சென்ரியா, R. பிதுர்ஷிகா, V.சந்தியா, J.ராஜியா, M நுஸ்லா, M.N.F செய்னப், R.கவிதா, G. மதுஷா, M.அஷ்பா, B.ஜனுஷா, M.F. ஷயிலா, M.R.F. அமானா,

நிற்போர் மூன்றாம் வரிசை: (இடமிருந்துவலம்)

M.அனுஷாந்தி, K.சந்தியா, N. தர்ஷிகா, M.R.F. ருகையா, M.S.F சஹ்ரா, M.F.F.ரிஸ்னா, M.சுதர்ஷினி, G.சஜினிலக்ஷிகா, M.லலிதாம்பிகை, U.நயோமி நிவேதா, R.யதுர்ஷிகா, P. பிரியசகி, M. சத்திவானி, B.தனோஷா, M.கிறிஸ்டினாதர்ஷினி, U.கவிஷ்கா, S.நிஷாலினி, F.ஷபா, A.அமினா

நிற்போர் நான்காம் வரிசை(இ.வ)

M.M.F.முஷ்ரிபா, M.A.F.அக்ஷா, D.நிஷாந்தனி, M.கிரிஷாந்தனி, R.ஷர்மிந்திரா, N.ஹரிகாஷினி, V.மதுஷா, M.F.F.பாஸிலா, M.T.F.சுமையா, V.ஜெனிபர் மனீஷா, C.காயத்திரி, A.நிலுக்ஷி, G.சர்மிளா, K. ஜயவதனி, D.தீர்ஷனா,J.துஷாந்தினி, R.ருக்ஷானா, S.தக்ஷனா

நிற்போர் ஐந்தாம் வரிசை (இ.வலம்)

M.ரபிக்ஷினி, S. தஷ்மிதா, Nலாஷினி, Y.யதர்ஷனா, C.I.சொனிஷா, R.நிஷாந்தி, T.கோகிலா, T.லோகாஷினி. J.அஷ்வதி, C.ஹேஸ்ருதி, W.காவ்யாபிரியதர்ஷணி, M.F.ஆகிலாபானு, R.M.Fரிபாஸா, R.யஷ்வந்திநேத்ரா, P.சதுர்ஷகா, S.ரிலக்ஷினி, S.ஷப்னா, N.ரஹ்மா

நிற்போர் ஆறாம் வரிசை (இ.வலம்)

G.தர்ஷிகா, R.கவிவர்ஷினி, M.I.அம்னா, A.அப்ரா, M.S.F.சல்ஹா, R.சைனப், S.ஸீனத் அக்ஷா, M.Z.Z.F.மஹ்தியா, H.ஹப்சா,Sசோபனா, S.சலோமிஅரிஸ்மா, R.மினோலிசப்னா, P. சியமாலா, J.ஷலோமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வச்சிறுமியரின்

செல்லக் கவிதைகள்

பொருள் பொதிந்தனவும்

பொருள் பொதித்தனவும்

கவிதையாய் இங்கே...

சுவைப்பீர்...

மகிழ்வீர்...

வாழ்த்துவீர்!



இதழாசிரியர்

மீரா அல்பிரட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநாயகர்

பஞ்சம் அகற்றும் குணமய்யா
தஞ்சம் அகற்றும் மனமய்யா
வேண்டி நிற்கும் பக்தருக்கு
வினைகளை அகற்றி அருள்வானய்யா

மூர்த்தியாகி தலமாகி அறிவால்
நம்மை ஆட்கொள்பவனே - நம்
உலகையாளும் தலைவனே
போற்றி! போற்றி!

சிவகுமார் ஹிமாஷா
தரம் - 7

## பகவான் சாயி

சீரடி சாய்பாபாவின் பாதம் பட்டதும்
சீரடியே புனிதமானது!

சீரடி மக்களுக்கு வரும் தீமைகளையும்
நோய் நொடிகளையும் தீர்த்தவரே!

அனைவரையும் அன்பால் அரவணைத்தவரே !
மக்களுக்கு மகானாக தோன்றியவரே!

வெண்நிற ஆடையும் வெண்நிற
தலைப்பாகையும் அணிந்தவரே!

நோய்களைத் தீர்த்தவரே
துன்பங்கள் களைந்தவரே

இருளுலகை ஒளியேற்றினாயே
சாய் பாபாவே!
வாழ்க! பாபா சரணம்! சரணம்!

தியாகராஜனி ஜஸ்வதா
தரம் - 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்த பகவான்

புத்தர் எங்கள் பெருமானே!
நல்வழி பலவும் வகுத்தாரே!
அறவழி காட்டிய தர்மபிரான்!
போற்றி போற்றி வணங்கிடுவோம்!

உலகில் சிறந்த ஞானியாய்
மக்கள் துன்பம் தீர்த்திடுவீர்!
என் கவலைகள் அனைத்தையும்
அறிவுரையால் ஒழித்தவர் நீங்கள்!
என் இறைவா!

கார்த்திகேயன் கிருத்திகா
தரம் - 8

## இயேசு

பாரினில் எம்மை மீட்கவே
இயேசு பாலனாக பிறந்தாரே
பாவியாம் என்னை மீட்கவே
பரிசுத்தராய் பூமிக்கு வந்தீரே

சிலுவையை எமக்காய் சுமந்தீரே
ஏழ்மையில் எமக்காய் வாழ்ந்தீரே
மனிதர்கள் பாவம் தீர்த்தவரே
மரியாளின் வயிற்றில் பிறந்தவரே!

வசந்தன் ஷெரின் மேரி
தரம் - 8

## அல்லாஹ்

சர்வ வல்லமை படைத்தவனாய்
உலகை ஆளும் ரஹ்மானே
கருங்கல்லுக்கிடையில் உறங்கிடும்
தேரைக்குக் கூட உணவளிப்பவனே
ஏழ்கடல்களையும் படைத்து பரிபாலிப்பவனே
உன் அருட்கொடைகள்
அகிலத்திற்கு அளித்தவனே என் அல்லாஹ்!

ரிஷ்வான் ஷஹ்ரின்
தரம் 7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத்தில் உன்னதமான ஜீவனொன்றென்றால்
அது நீயே தாயே
உலகத்தில் உயர்வான இடமொன்றென்றால்
அது உன் கருவறையே

நீயின்றி உலகில் பிறந்திருக்க முடியாதே
உன்னையிழந்ததால் திரும்பப்பெற முடியாதே
உன்னைப் போற்றி வீழ்ந்தவனுமில்லை
உன்னைத் தூற்றி வாழ்ந்தவனுமில்லை

நவாஸ்டீன் பர்ஹானா
தரம் - 9

# அம்மா



பத்து மாதம் சுமந்து பெற்று
பணிவுடன் கனிந்து பேசி
என்றும் என் குழந்தை
மேதை என நாமம் பெற
தன் உதிரத்தையும், பாசத்தையும்
ஊட்டிய தேவதை தான் என் அம்மா



சிவகுமார் ஹிமாஷா
தரம் - 7

அம்மா அம்மா என் அன்பு அம்மா
அன்புள்ள எங்களுக்கு தெய்வம் ஆனாய் அம்மா
நீ காட்டும் பாசம் என் கண்களில்
கண்ணீர் பெருகுதே....

காலையிலிருந்து கண்ணுறங்கும் வரை
கணிவுடன் காப்பாய் நீயம்மா

விஸ்வநாதன் பிரதக்ஷா
தரம் - 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பள்ளிக்கூடம்

முதுமையில் மறதி எண்ணமாய்ப் படுத்துகிறது!
நேற்று நடந்தது இன்று நினைவில்லை ஆனால்
"பள்ளிக்கூடம்" என்ற வார்த்தையைக் கேட்டதுமே
மனம் குதூகலிக்கின்றது, தேனுண்ட வண்டாக!

பள்ளிக்கூடத்தை நினைத்த மாத்திரத்தில்
ஒன்றன் மேல் ஒன்றாக
அலை அலையாய் மலரும் எண்ணங்கள்!
அடுக்கடுக்காய் தோன்றும் சிந்தனைகள்!
இக்கணம் நடந்தது போல்
துளிகூட மறக்காமல்
துல்லியமான நினைவலைகள்,



கண்களில் எதிர்காலம் குறித்த
வண்ண வண்ணக் கனவுகளை ஏந்தி
மனக்கவலை சிறிதுமின்றி
பட்டாம் பூச்சிகள் போல்
சிறகடித்த காலமல்லவா அது!

அறியாப் பருவத்தில் மலர்கின்ற நட்பில்
ஆதாயம் தேடும் கள்ளத்தனம் இல்லை
ஆத்மார்த்தமான அன்பு என்றதும்
பட்டென்று நினைவிற்கு வருவது
பள்ளி கூடத் தோழிகள் மட்டுமே!

புஸ்பரட்னம் சதுர்ஷிகா
தரம் - 12
வணிகம்

## இயற்கை

இதமான சூழல் இன்னிசை தென்றல்
சிலிர்க்க வைத்த நதியோரம் சிரித்து நின்ற ஆலமரம்
துள்ளி ஓடும் மானை துரத்தி செல்லும் புலி
மனையை தேடி வந்து மௌனமாய் பேசும் மைனா

கிளைகளிலே அசைந்தாடும் பச்சை வர்ண இலைகள்
ஆங்காங்கே தலை தூக்கும் அழகான மலர்கள்
மாயா ஜாலம் செய்யும் மந்திர பூக்களில்
தேன் குடிக்க போட்டி போடும் தேனிக்கூட்டம்



அன்னநடை போட்டு வரும் வண்ண மயில்களும்
தத்தி தத்தி பாய்ந்து செல்லும் தவளை கூட்டமும்
வட்டமிட்டு பறந்து செல்லும் பருந்துகளும்
இறைவன் இயற்கைக்கு அளிந்த இன்ப பரிசுகளா?

பட்டு பூச்சியை பார்த்திருந்தே பார்வைக்குள் படபடப்பு
தென்றல் காற்றில் கவி பாடும் நீர்வீழ்ச்சி
மரகத முத்துக்களாய் ஜொலிக்கும் நீர்த்துளிகள்
இதயம் மறவாது இந்த இயற்கை காட்சியை

இரத்னவேல் ப்ரிதுர்ஷிகா
தரம் - 12
விஞ்ஞானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நட்பு

யாருமில்லை என எண்ணி
தனிமையில் சென்றேன்
நட்பாக நீ வந்தாய் இறுதி வரை
துணை நின்றாய்
ஆயிரம் உறவு இருந்தாலும்
ஏது பயன்? கவலை என்னோடு
மட்டுமே... அதை பகிர்ந்தவள்
நீயல்லவா?
செல்லும் இடங்களுக்கெல்லாம் கூடவே வந்தாய்
சிந்திக்கும் பொழுதெல்லாம் உன் அன்பின்
அடையாளம் உன் புன்னகையே
பரிசுப் பொருளாகத் தந்தாய்
நாளெல்லாம் இதமாய் பேசினாய்
ஒவ்வொரு நாளும் காலை வணக்கம்
உன் குறுந்தகவலிலே காலை பொழுதை
இனிதாக்கினாய்
மலையோடு வருகின்ற வானவில்லாய்
என் நட்பு தேடி வந்தாய்
நம் நட்பு எனும் அழகிய பூ
இதழ் உதிர்ந்து வாடிப் போகாமல்
மூச்சடங்கும் வரை
நட்பெனும் காவியம் தொடர வேண்டும்
தொடர்கதையாய்.....



இரவிச்சந்திரன் ஷர்மிந்திரா
தரம் - 12
கலை

## அம்மா

பத்துமாதம் என்னை கருவறையில் சுமந்து
வாழ்நாள் முழுவதும் தன் நெஞ்சில் சுமந்த
தன்னுயிரிலும் என்னுயிரை பெரிதென கருதி
ஒருவேளையேனும் என் வயிறை நிரப்பியவளே!
பண்டிகைக் காலம் வரும்போதெல்லாம்
வண்ண வண்ண ஆடை வாங்கித்தந்து
கந்தலாடையுடன் வீட்டை சுற்றிவந்தவளே!
கருநிற நீண்ட கூந்தலுடன் மஞ்சள் பூசி
வெளுத்த முகத்தில் நட்சத்திரம் போல்
மின்னும் குங்குமப்பொட்டுடனும் எந்தவித
ஆடம்பரமும் இன்றி அழகாய் தோன்றுபவளே!
நான் கவலையுடன் வீற்றிருக்கும்
நாட்களிலெல்லாம் என் கண்ணில் படியும்
பனித்துளிப்போன்ற கண்ணீரை தன் இருகரம்
கொண்டு துடைத்து தன் மடியில் ஆற்றியவளே
இத்தனை அன்புக்கும் என்ன கைமாறு
செய்யப்போகிறேன் நான்?



illustrations of.com #1113111

முரளிதரன் ரபிக்ஷினி
தரம் - 12
விஞ்ஞானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பள்ளி வாழ்க்கை

நீரிலே பிறந்த முத்து நீருக்கா சொந்தம்
நிலத்திலே பிறந்த வைரம் நிலத்திற்கா சொந்தம்
களிப்பாகப் பாடம் கற்ற நாங்கள்
காலமெல்லாம் கல்லூரி வானில் பறக்க முடியுமா?



அன்று பால்வடியும் பாலகராய் பள்ளி வாசலில்
காலடி எடுத்து வைத்தோம் அன்று தெரியவில்லை
ஒரு பிரிவைச் சந்திப்போம் என்று
சில காலம் சிறகடிக்கும் பட்டாம் பூச்சியாய்
பாலர் வகுப்புகளில் பறந்து திரிந்தோம்
ஆனால் இன்றோ சிறகொடிந்த பட்டாம் பூச்சியாய்
பறக்க முயலுகிறோம்...

காலையில் சூரியன் எழுவதைப் போல் நாமும்
பாலர் வகுப்புகளிலிருந்து ஆறாம் தரம் என்னும் வகுப்பிலே
காலடி வைத்து பல காலம் கவலையின்றி
சிட்டுக்களாய் சிறகடித்தோம்
தடைக்கல்லை படிக்கல்லாக்கி படிக்கல்லை பாதையாக்க வேண்டுமென
படித்து எல்லா பரீட்சைகளிலும் சித்தியெய்தினோம்



சிகரத்தின் உச்சத்தை தொடவும்
வாழ்க்கையில் உயர உயரப் பறப்பதற்கும்
உயர்தரம் எனும் வகுப்பிலே காலடி வைத்தோம்
புதிய சூழல் புதிய நண்பர்கள் என
எமது பயணத்தை புதிதாகவே தொடங்கினோம்

பல எதிர்கால கனவுகளை சுமந்தபடி
தன்னம்பிக்கையோடு கற்றோம்
சிறு சிறு பனித்துளிகளாய் சந்தோசங்களும் துக்கங்களும்
எமது வாழ்க்கையை அழகுப்படுத்தியது
பல காலம் பட்டுப்போகாமல் பட்டுப்பூச்சியாய் பறப்பது நிரந்தரமாகுமா?

எப்படி வானம், பூமி, காற்று, சூரியன் நிரந்தரமில்லையோ
அது போலவே நீயும் எங்களுக்கு நிரந்தரமில்லை
என உணர வைத்தாய் ஆனால்
எமது பிரிவைத் தேடிய பயணமும் தொடங்கியது
வகுப்புக்கிளியே உன் நினைவுகளோடு பறக்க நினைக்கும் வேளையில்
பிரிவு எங்களை அழைக்கத் தொடங்கியது

கல்வி, சிறந்த ஆசான்கள், நல்ல நண்பர்கள் என
வாழ்வில் மறக்க முடியாத பொக்கிஷங்களைத் தந்த கல்லூரியே
இன்று நாங்கள் கண்ணீரோடு விடைப்பெறவேண்டியாயிற்று...
பெண்கள் உயர்தர பாடசாலையில் நாமும் நிரந்தரம்
முடியாதது என்பது உனக்கு இனி முடியாது
முடியாது அண்டம் முடிந்தாலும் உன் நினைவுகளை
மறக்க முடியாது எனப்பாடி முடிக்க முடியாது முடிக்கின்றேன்.

ராஜா மதுபாஷினி
தரம் - 12
வணிகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண் குருதி

கதிரவன் உதிக்கும் காலைப்பொழுது
கதிர் வீசும் முன்பே ஆங்கொருவன்
செந்தளிர்கள் துளி மெட்டிட
செந்தணலாய் உழைப்போன் ஒருவன்


www.shutterstock.com · 657205285

பசி மறந்து, பயிர் அறுத்து ஈந்தும்
படியளப்பான் ஓரிரண்டு காசு
விழி பிதுங்க வெய்யோன் கீழ் காய்ந்தும்
விடியாத வாழ்க்கை எங்கும்

ஈன்றோனோ இரட்டித்த வேளையில்
ஈன்றெடுக்கப்பட்டவளோ இடி தோய்ந்த மடுவத்தில்
உளமார பால் பருகும் பருவமதில்
ஊட்டும் தாய் பால் வாசம் கானல் நீரே



கால் வயிற்று கஞ்சியில் வாழ்க்கை சக்கரம்
கண்டு கொள்ளாமல் நகரும் எமது சரித்திரம்
வட்டத்திற்குள் வாழ்வோனாய் பெருந்தோட்டதுறை
வாழியஈழம் இதற்கு காணாதோ ஓர் கரை

சுதந்திரமடைந்தும் அடிமை நீங்கா கூட்டம் - நாம்
சுகம் பெறாததில் ஏனையோர் கண்டனர் நாட்டம்
தவிக்காதோனுக்கும் தண்ணீர் வார்த்தனர் சிலர்
தன்னிறைவு அற்றோனுக்கு தளிரினையும் வழங்காதோர் பலர்

பேதைகளென்றெண்ணி போதிக்க மறுத்தனர் - இங்கே
பெண்ணும் சுழன்றெழுவாள் என்பதை மறந்தனர்
கற்கும் ஆவம் கண்ணோடு பரிதவிக்க
கனவாய் மாறிய பள்ளிக்கூட வாழ்க்கைகள் பல

உரிமைகள் பல இருந்தும் உரக்க கேட்போர் சிலரே - ஆங்கே
உரத்தோறும் மண்ணிற்கு உரமாய் மாறினரே
மெழுகு பூசப்பட்ட போர்வை வெளிநாட்டான் பார்வைக்கு
மெல்ல திறந்தால் கிட்டும் மலையகத்தோனின் நிலை

ஆனந்தம் கூடியிருந்த நாட்கள் நினைவில்லை - ஏனெனில்
அடுப்பங்கரையில் அழுத சுவடுகள் மறையவில்லை
மூத்தோன் சிதைக்கு மேல் ஏறிநிற்கும் கதியென்று கவிகூறும் - கூறுவென்
முறியடிக்கும் காலம் வெகு தொலைவில் இல்லையென்று

தொடராமல் நிற்கும் தேயிலையின் நுனியில்
தொடர் காவியமாய் சிந்தும் கண்ணீர் துளிகள்
வெறியோடு தழைத்தெழுவோம் - என்றும்
வெற்றியின் சிகரத்தில் முளைத்தெழுவான் மரத்தமிழன்

பச்சை தளிரென படம் பார்த்து கண்டாய் - பாதகனே
ஆங்கே உறிஞ்சப்படுவது உழைப்பாளியின் உதிரம் - ஆதலால்
மானிடனே நீ ஒன்றறிவாய் - மலையகத்தில்
பறிக்கப்படும் தேயிலையின் நிறம் சிவப்பு

தர்ஷிகா சிவப்பிரகாசம்
தரம் - 12
கலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் தந்தைக்கு சமர்ப்பணம்...

அன்பு தோட்டத்தில் ஆயிரம் ஆயிரம்
அரும்புகள் மலர்ந்தாலும் அதில்
அன்பரசன் என் அப்பா - என்
அன்னையின் பெண்மைக்கு



தாய்மைத் தந்து நாடி
நரம்பெங்கும் உதிரத்தை விதைத்து
மகளென்று உறவை தந்தவர்
என் அப்பா

என் அன்னை ஓர் ஆலயம் என்றால்
அதில் உறையும் தெய்வம்
என் அப்பா - உலகில்
அத்தனையும் தோற்று போகும்

உன் அன்பின் முன்னால் அப்பா
முத்து, மாணிக்கம், வைரம்,
வெள்ளி, தங்கம் இவை
எல்லாம் ஈடாகுமா? - உன்
அன்பிற்கு அப்பா

ஈரைந்து மாதங்கள் எனை
சுமந்து அன்னைக்கு பின்
இதுவரை என் வாழ்வை தோளில்
சுமந்தவர் - என் அப்பா



தோளில் சுமை அதிகமானதா?
அப்பா இல்லை இறைவனின்
சதியா? என்னை இக் காரிருளில்
தவிக்கவிட்டு இறைவனுக்கு மகனாக
சென்றாயே - என் அப்பா!

மீண்டும் என்னை - உன்
மகளாய் தோளில் சுமக்க
போவது எப்போது?
அப்பா - என் அப்பா

உன் வருகைக்காக ஜென்மங்கள் அனைத்தும்
வாசலில் காத்திருக்கும்
என்றும் உன் மகளாக
நான் அப்பா!

புஸ்பராஜ் சுதர்ஷனி
தரம் - 12
வணிகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீண்டும் வருமா இன்னொரு பொழுது

கல்லூரி வாழ்வு
கடுகளவு சிறிது - கவலையின்றி
களித்திருந்தோமே...
ஆட்டமென
பாட்டமென - அழகிய
வகுப்பறையில்
அன்பான நண்பர்களோடு
அமர்ந்திருந்தோமே...

அறிவான ஆசானோடு
ஆர்வமாய் பல - நூல்களை
கற்றறிந்தோமே...
ஆனந்தமாய் துள்ளி
எழுந்து - அங்குமிங்கும்
அலைந்து திரிய
அடம் பிடித்து
விளையாடினோமே...



விடியல் வந்தது கூட
தெரியாமல் - நித்திரையில்
உறங்கி கிடந்தோமே...
பின்பு கடிகாரசத்தத்தில்
கண்விழித்து - அந்த
சூரியனுக்கு முன்னெழுந்துவிட்டேன்
என்று சூரியனையே
வெற்றிக் கொண்டோமே

அன்பான தாயின்
அரவணைப்பில் - அன்று
அடங்கி கிடந்தோமே...
தந்தை அறிவுரை
கேட்டு - ஆசையாய்
பள்ளி சென்று
பாடம் கற்று
மகிழ்ந்திருந்தோமே...

விண்மீன் கூட்டத்தை
கண்டு - அதை விரல்களால்
எட்டிப்பிடிக்க முயன்றோமே...
நண்பனின் நகைச்சுவை
கேட்டு - கைத்தட்டி
சிரித்து மகிழ்ந்து
அந்நாட்களை
கடந்தோமே...



இதே போன்று
மீண்டும் வருமா
இன்னொரு பொழுது....!

மயில்வாகனம் கிறிஸ்டினா
தரம் - 12
வணிகம்

## நெஞ்சத்திற்கு ஓர் ஒத்தடம்

தோல்வியை எதிர்கொண்டுவிட்டாயா?
அது சவாலின் ஒரு ஆரம்பம்தான்
ஆரம்பமே தோல்வி என்று
கலங்கி விடாதே
துணிவுடன் நடக்கப்பார்
தோல்விதான் உன்னை
சாதிக்க வைக்கும் ஊன்று கோல்கள்

தோல்வியின் ஆரம்பம்
சோதனையும் கலங்கமும்தான்
ஆனால் அவைதான் உன்
சாதனைக்கு பறைசாற்றும்
வெற்றி கொடிகள்

இறை நம்பிக்கையும் உன் முயற்சியும்
உன்னில் சேர்ந்திருக்கும் வரை
இறையருளால்
வெற்றிகள் உன்னைத் தேடி
வந்து கொண்டே இருக்கும்

நீ எந்த அளவுக்கு உயர்ந்தவனாக
வேண்டுமென நினைக்கிறாயோ
அந்த அளவுக்கு கடுமையான
சோதனைகளை கடந்து
செல்ல உன்னைத்
தயார்செய்து கொள்

தன் தோல்வியை திரும்பி
பார்க்காத எவர்க்கும் வெற்றி
நிரந்தரம் இல்லை என்பதை
புரிந்துகொள்!

மொஹமட் வஸ்லி பாத்திமா
தரம் - 12
கலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் உயிர் அம்மா

இவ்வுலகில் நான் உதித்தவுடன்
என் விழிகளில் முதலில்
தோன்றிய தெய்வம் நீயே

அன்றுமுதல் இன்று வரை
அணுவளவும் துன்பம் என்னை
நெருங்கிவிடாமல் என்னை
அரவணைத்தவள் நீயே



அம்மா நீ அடிக்கும் போது
வந்த கோபங்களை விட
நீ அரவணைக்கும் போது
வந்த பாசமே அதிகமாக இருந்தன

ஆயிரம் உறவுகள் என்னை
பின்தொடர்ந்தாலும் உன்னைவிட
சிறந்த உறவை நான்
இன்றுவரை காணவில்லை அம்மா

விலைமதிப்பற்ற கட்டிலில்
உறங்கினாலும் உம் மடியில்
உறங்குவது போல் சுகம்
வருமா அம்மா!

பலதேச உணவுகளை
உண்டாலும் நீ நிலாவை
காட்டி எனக்கு ஊட்டிய
அன்னத்தின் சுவைக்கு ஈடாகுமா?

நான் தினமும் போற்றி
வணங்கும் இறைவன் நீயல்லவா?
உன் மேல் நான் வைத்துள்ள அன்பு
வார்த்தைகளால் வரையறுக்க முடியாதது

அடுத்த ஜென்மம் என்று ஒன்று
எனக்கு உண்டெனில்
உனக்கு தாயாக பிறந்து உன்னை
அரவணைக்கும் வரம் கேட்பேன்.

விநாயகமூர்த்தி நர்மதா
தரம் - 12
விஞ்ஞானம்

## முயற்சி

தடைகள் பல தடுத்தாலும்
தாண்டிச் செல்லவே
முயற்சிக்கிறது
ஆற்று நீர்....
தினம் தினம் தேய்ந்தாலும்
ஏதோ ஒரு நாள்
மீண்டும் எழுதுகிறது
திங்கள்.....



வாடி போகிறோம்
என்றாலும் தன்
சிரிப்பைக் காட்ட மறுப்பதில்லை
பூக்கள்.....

முயற்சி என்றுமே
இகழ்ச்சி அடைவதில்லை
முயன்றால் முடியாதது எதுவுமில்லை
நீ மீண்டும் மீண்டும்
சொல்லிப்பார்
முயற்சி திருவினையாக்கும்

தர்மலிங்கம் கோகிலா
தரம் - 12
விஞ்ஞானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நட்பின் புரிந்துணர்வு

காலங்கள் மாறினாலும்
கனவுகள் கலைந்தாலும்
என் நினைவில் மறையா
ஓர் ஓவியம் நீயடி தோழி



எனக்கென்று உறவின்றி
ஆதரவிற்கு வார்த்தைகள் மொழிய
நல் நட்பின்றி
வருந்திய போது
எனக்கெனவே வந்தவள்
நீயடி தோழி

கண்கலங்கி பறிதவித்தேன்
தீர்வுகள் இன்றி தடுமாறினேன்
தோள் கொடுக்க உறவின்றி
மனம் கசந்தேன்
உனக்கென்றே நான் என
துணை நின்றவள் நீயடி தோழி



நான் நேசித்த உறவுகள்
என்னை வஞ்சித்தன
நான் நம்பிய உறவுகள்
எனக்கு துரோகம் இழைத்தன - ஆனால்
நீயோ உன் மனம் நோக நான் நடந்த போதும்
என் மனம் ஆற்றியவள்
நீயடி தோழி

வழிகளில் ஆயிரம் சோதனை
இருந்தாலே வாழ்வென்று அர்த்தம்
விழிகளில் கண்ணீர் கசிந்தாலே
மனித உணர்வு உண்டென உணர்வோம்

அதே போல நட்பென்று
ஒன்றை சுவைத்தாலே
இவ்வுலகிலும் மனிதர்கள் உள்ளனர் என அறிவோம்

இழந்தவை இழந்தவையாகவே மாறலாம்
அழிக்கப்பட்டவை அழிக்கப்பட்டவையாகவே மாறலாம்
ஆனால் என்றும் நிலையானது
உன்னால் எனக்கு கிடைத்த உன் நட்பு

எந்தனி பிலிக்ஸ் இவோன் ட்றிப்பேஷா
தரம் - 12 கலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்தினிய கட்டுரைகள்

கனிவித்தனவும்...

களிப்பித்தனவும்...

கருதியனவும்...

கருத்து பதித்தனவும்...

கண் முன்னே...

கண்ணுறுவீர்...

களிப்பீர்...

கருத்திருத்துவீர்!

மனச்சிதறல் தரும்

மாயச் சிறுகதைகள்

மனம் பதிப்பீர்...

மகிழ்வீர்...

மாறுவீர்!

சிலிர்ப்புத் தரும்

சித்திரங்கள்...

சிந்தை இருத்துவீர்...

சிருஷ்டிப்பீர்!

இதழாசிரியர்

மீரா அல்பிரட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாகவி பாரதி



தமிழ் கூறும் நல்லுலகம் போற்றும் இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்து மறைந்த ஈடு இணையற்ற கவிஞன் மகாகவி பாரதியார். சிறுவயது முதல் தமிழ் மீது கொண்ட பற்றால் கவிபாடு திறமையால் பாரதி என்ற பட்டம் சூடி அழைக்கப்பட்டார். தமிழ் இலக்கிய வரலாற்றில் மாபெரும் திருப்பு முனையாய் அமைந்தவர். மகாகவி பாரதி விடுதலை போராட்டக் காலத்தில் இந்தியாவின் தேசியக் கவியாய் முன்னின்று ஜெயபேரிகை முழக்கியவர் பாரதி.

மகாகவி பாரதி 1882 ம் ஆண்டு டிசம்பர்11 இல் இந்தியாவில் தமிழ் நாட்டில் திருநெல்வேலியிலுள்ள எட்டியபுரத்தில் பிறந்தார். இவர் சின்னசாமிஐயர் இலக்குமி அம்மாளின் மைந்தனாவார். தனது இளம் வயதிலேயே கணணம்மாவை மணந்தார். பாரதியார் குயிற்பாட்டு, பாஞ்சாலி சபதம், கண்ணன் பாட்டு, தேசிய கீதங்கள், புதுமைப் பெண் போன்ற பாடல்களினூடாக நாட்டின் மீதான பற்றை காட்டியுள்ளார். பராசக்தியைப் பற்றி புனைந்த பாடல்கள், ஆன்மிக உணர்வுடன், உலக நடப்புக்களை எடுத்துகாட்டுக்கின்றன.

சகல பாடல்களையும், புதிய ஆத்திசூடியையும் புனைந்தார். பாரதி தன் தாய் நாட்டின் மீது கொண்ட பற்றினை தன்கவிதையின் ஊடாக வெளிப்படுத்திக் காட்டினார்.தேசிய ஒருமைப்பாட்டினை வெளிப்படுத்தித் தமிழ் நாட்டின் ஒற்றுமையின் தேவையையும் தன் கவிதை வாயிலாக வெளிப்படுத்தினார்.

"செந்தமிழ் நடெனும் போதினிலே - இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே - எங்கள்
தந்தையர் நாடென்ற பொதினிலே - ஒரு
சக்தி பிறக்குது முச்சினிலே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் கவிவரிகளை உதாரணமாக கூறலாம். தமிழ் மொழி இனிய மொழி, தொண்மையானது. இலக்கிய, இலக்கண சிறப்புடையது. இத்தகைய தமிழ் மொழியின் சிறப்பை வெளிப்படுத்த வேண்டுமானால்,

"பிறநாட்டு நல்லறிஞர் சாஸ்திரங்கள்
தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புது நூல்கள் தமிழ்மொழியில்
இயற்றல் வேண்டும்"

என்றார். அதோடு

"கன்னத்தில் முத்தமிட்டால் - உள்ளந்தான்
கள்வெறி கொள்ளுதடி
உன்னை தழுவிடலோ - கண்ணம்மா
உன்மத்தமாகுதடி"

என்று கண்ணம்மாவிற்காக பாடியுள்ளார். தமிழை உச்சரிக்கும் போதெல்லாம் பாரதியின் நினைவுகள் நம் நெஞ்சங்களிலே என்றும் நிழலாடுகிறது. அந்த பாரதி என்றும் நம்மோடு தமிழாய் வாழ்கிறார்.

திவாஷினி கார்த்திகேசுலிங்கம்
தரம் - 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காப்பியங்கள் கற்போம்

அமிழ்தினும் இனிய நம் தமிழ் மொழி உலகின் பழமை வாய்ந்த மொழிகளுள் ஒன்றாகும். அது மட்டுமல்ல, உலகில் மூத்த மொழியென்றும், உயர்தனிச் செம்மொழி என்றும் போற்றப்படுவதாகும்.

ஆதி, இலக்கண நூலாம் 'பேரகத்தியம்' என்ற நூலையாத்த அகத்தியர் கூறுவார்.

"வையம் ஈன்ற தொன்மக்கள் உளத்தினைக்
கையினால் உரைசெய் காலம் இருந்திடப்
பைய நாவை அசைத்த பசுந்தமிழ்
ஐயைதான் தலைக் கொண்ட திருந்தொண்டு பரவுவாம்"

என்று மக்கள் கற்கால மனிதர்களாக வாழ்ந்த காலகட்டத்தில், கையினால் சாடை காட்டி வாழ்ந்த காலம் மறைய, மெல்ல நாவை அசைத்துப் பேச்சு வந்த காலத்தில் தோன்றிய தமிழ் மொழி அன்னையின் தாளை வணங்கித் தொண்டு புரிவோம் என்கிறார்.

உலகில் பலமொழிகள் தோன்றின. சீனம், இலத்தீன், கிரேக்கம், எபிரேயம், சமஸ்கிருதம் போன்ற மொழிகளில் இன்றும் பேச்சு வழக்கில் உயர்ந்து நிற்பவை நம் செந்தமிழ் மொழியும், சீன மொழியும் ஆகும்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறக்குறைய இரண்டாயிரம் மொழிகளாகப் பெருகிய மொழிக் கூட்டத்தில், காலவெள்ளத்தால் கரைந்தவை போக எஞ்சி நின்று பெயர் சொல்பவைச் சிலநூறு மொழிகளே ஆகும். அன்று முதல் இன்று வரை நம் தமிழ் மொழி உலகின் முதல்மொழி என்று அழைக்கப்படுகிறது.

நம் இனிய தமிழ்மொழியின் சிறப்பினை உலகுக்கு எடுத்துக் காட்டிக் கொண்டிருக்கும் ஒப்பற்ற இலக்கிய நூல்களில், ஐம்பெரும் காப்பியங்கள் முதலிடம் வகிக்கின்றன.

காப்பியங்கள் நமது நாகரிகத்தின் சின்னம். பண்பாட்டின் நிலைக்களன், வரலாற்றுப் பெட்டகம் அனுபவ ரீதியாக நமக்கு அறிவு புகட்டுபவை. 'பிறர்க்கு இன்னா முற்பகல் செய்யின் தமக்கு இன்னா பிற்பகல் தாமே வரும்' என்றார் வள்ளுவர் பெருமான். அது போல பிறருக்குத் துன்பம் நினைத்தால் அதன் பலனை நிச்சயம் அவர்கள் அடைந்தே தீருவார்கள். இது காப்பியங்கள் நமக்கு கூறும் முதன்மைப் பாடம்.

நம் வாழ்வில் காப்பியம் கூறுகின்ற நன்மைகளை ஆராய்ந்து, தர்ம நெறிகளின்படி வாழ்ந்து வந்தால் உலகம் போற்ற வாழலாம். இது காப்பியங்கள் நமக்கு கூறும் சிறப்பான செய்தி.

தமிழ் அன்னையின் திருமுடியில் துலங்கும் சிந்தாமணி கைகளில் வளையாபதி, இடுப்பில் மணிமேகலை, காதுகளில் குண்டலகேசி, கழுத்திலும் நெஞ்சிலும் பன்னிரு திருமுறைகள் பதினான்கு சாத்திரங்கள், கையில் திருக்குறள் செங்கோல் எனப் பலபடியாக அணி செய்தனர் நம்புலவர் பெருமக்கள்.

எனவே தமிழ்மொழியினை கற்கும் நாம் காப்பியம் கூறும் நல்வழிகளில் வாழ்ந்து காட்டுவதற்கு முதலில் காப்பியங்களை வாசித்து அறிந்து கொள்ளல் சிறந்தது ஆகும். அதனால் தமிழ் மொழியும் நம் வாழ்வும் வளம் பெரும்.

தியாகராஜா சஜித்திரா
தரம் 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தோல்விகள் தடையல்ல...

"தோல்வியே வெற்றியின்" முதற்படி என்பது அறிஞர்களின் கூற்று. தோல்வியைக் கண்டு சோர்வடையும் எவராலும் வாழ்க்கையின் அடுத்தக் கட்டத்திற்குத் துணிவோடு நகர முடிவதில்லை. தொடர்ந்து முயற்சி செய்தால் கடினமானதையும் சாதிக்கலாம். வாழ்விலே வெற்றிகளை ஈட்டலாம். தோல்விகளைக் கண்டு சோர்வடையாது இந்தியாவுக்குச் சுதந்திரம் பெற்றுக் கொடுத்தவர் காந்தி மகான் ஆவார்.

வெற்றிக்கனியைப் பறிக்க வேண்டுமானால் எத்தனையோ முட்பாதைகளில் பயணிக்க வேண்டும் என்ற உண்மையை நாம் மாணவப் பருவத்தில் உணர்ந்து எம் முயற்சியில் கண்ணுங் கருத்துமாக இருக்க வேண்டும். தோல்வியை ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கைப் பாடசாலை விளையாட்டுப் போட்டிகளிலே அறிந்து கொள்ளலாம். பல பந்தயங்களில், சவால்களில் இதை நாம் உணர முடியும்.

சகிப்புத்தன்மை எம் வெற்றிக்கு வழிகாட்ட வல்லது. மாணவப் பருவத்தினராகிய நாம், தோல்விகளால் துவண்டு விடக் கூடாது. முயன்றால் எதிலும் வெற்றிகளை ஈட்டிக்கொள்ள முடியும். வெயில் இல்லையெனில் நமக்கு நிழலின் அருமை தெரியாது. அது போல தோல்விகள்தான் எமக்கு வெற்றியின் அருமையை உணர்த்தும் பாடங்கள். மேலும், தோல்வி எமக்கு வெற்றியை விட சிறந்த பாடம் கற்றுதரும் ஆசானாகும்.



தோல்வியை வெகுவாக அலட்டிக்கொள்ளல் மனித முன்னேற்றத்திற்குத் தடைக்கல்லாக அமையும். அது எம்மில் தாழ்வுச் சிக்கலையும், விரக்தியையும் ஏற்படுத்தும். அவை உள்ளத்தை மாத்திரமின்றி உடலையும் நலிவாக்கும். "தோல்வி நிலையென நினைத்தால் மனிதன் வாழ்வை நினைக்கலாமா?" என்ற சினிமா பாடல்வரிகள் தெம்பு தரக்கூடியவையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகை படிந்து விட்ட கண்ணாடி போல எமது உள்ளமானது தற்காலிகமாக இருளடைந்து விடலாம். எனினும் அதைத் துடைத்து விட்டால் அது மீண்டும் ஒளிரும். தற்காலிகமான தோல்விகள் எம்மைப் வீழ்ந்து விட வைக்கமாட்டா.

நாமறிந்த நில வீரர்களும், சாதனையாளர்களும் கூடத் தோல்விகள் என்ற படிக்கட்டுகளில் ஏறி, விழுந்து முன்னேறியவர்கள் என்பதை அறியும் போது எம்மில் புத்துணர்வு பிறக்கிறது. காலமும் நேரமும் கூட முயற்சிக்குத் தடைகளல்ல. ஆகவே தொடர்ந்து முயல்வது தான் தோல்வியை துரத்துவதற்கான வழி என்பதை விளங்கிக் கொள்வோம்.

மாணவர்களாகிய எம்மிடம் நம்பிக்கையும், விடாமுயற்சியும், திறமையும் இருப்பின் தோல்விகளை வெற்றிகளாக்குவது சுலபம்.

விஜயகுமார் டிலானி
தரம் 12
வணிகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னேறுவதற்குத் தேவை விடாமுயற்சியும் தன்னம்பிக்கையும்

"வாழ்க்கையின் யதார்த்த நிலைகளைக் கண்டு உன் பயணத்தை நிறுத்தி விடாதே. விடா முயற்சியே வெற்றிக்கு வழியாகும்." என்கிறது ஒரு பொன்மொழி.

நாம் இவ்வுலகில் சாதிக்கப் பிறந்தவர்கள். அத்தகைய ஆற்றல்களுடனான இறைவன் எம்மை மனிதனாக படைத்துள்ளான். ஒரு கனம் சிந்தித்து பார்த்தோமென்றால் கணினியைக் கண்டு பிடித்ததாலே இன்று உலகமே எம் கையில் தவழ்கிறது. தோமஸ் அல்வா எடிசன் மின் குமிழைக் கண்டு பிடித்ததால், இன்று எமது இரவுப் பொழுதுகள் பகலாய் ஜொலிக்கின்றன. இவை போல் உலகில் உருவான சாதனைகள் அனைத்தும் நினைத்த மாத்திரத்தில் உருவானவை அல்ல. குறிப்பிட்ட சாதனை வீரர்களின் திடமான நம்பிக்கையுடன் கூடிய விடா முயற்சியின் விளைவாகும்.

"வெற்றிபெற வேண்டும் என்று நினைத்து போராடாதே. தோல்வி அடையக் கூடாது என்று நினைத்துப் போராடு. வெற்றி உன் கையில்.." எனவே வெற்றியை நோக்கிச் செல்லும் பாதையில் பல வகையான தடைகளை சந்திக்க நேரிடலாம்.

"தோல்வியே இல்லாமல் இருப்பதற்கு பெயர் வெற்றி அல்ல. நம்பிக்கையைக் கைவிடாதே. அது தான் வெற்றியின் முதல் படி. தோல்வி அடைவது துன்பம் தான். ஆனால், வெற்றிக்கு முயற்சிக்காது இருப்பது அதை விடத் துன்பமாகும்.

"ஆட்டின் வேடத்தில் ஓநாய்களும் வரலாம். ஆதலால் நீயோ எச்சரிக்கையாய் இரு..." இத்தகைய நிலைமைகளை சகித்துக் கொள்ள தைரியத்தை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும். எமது வெற்றிப் பாதையில் சிரமங்களுக்கு மத்தியிலும் திடமான நம்பிக்கையை ஏற்படுத்தும்.

நாம் இறை நம்பிக்கையை விட்டு விடக்கூடாது. அது தான் எமது வெற்றியின் முழு வடிவம். என்றும் இறைவன் எம்முடன் இருக்கிறான் என்ற உறுதியை ஏற்படுத்தினால் இலட்சியத்தை நோக்கி திடமான நம்பிக்கையுடன் தொடர்ந்து முயற்சி செய்யுங்கள் வெற்றி வாகை சூடுங்கள்.




ரியாஸ் மொஹமட் பாத்திமா ரிபாஸா
தரம் 12
வணிகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவியல் உலகின் வளர்ச்சி..

இன்று நாம் இருபத்தோராம் நூற்றாண்டில் மகுடம் சூடியுள்ளோம். காலங்கள் கழிவது போலே இன்று பல துறைகள் உயர்நிலைக் கோபுரங்களாக அண்ணார்ந்து பார்க்கும் அளவு உயர்ந்துள்ளது என்றால் அது மிகையாகாது. உதாரணமாக போக்குவரத்து, கல்வி, விஞ்ஞானம், அரசியல், விளையாட்டு போன்ற பலவற்றை எடுத்துக் கூறலாம்.

முதலில் அறிவியல் என்றால் என்ன? ஆம், விஞ்ஞான வளர்ச்சியே அறிவியல் எனலாம். கல்வி, மருத்துவம், விண்வெளி, போக்குவரத்து என அனைத்து துறைகளிலும் விஞ்ஞானம் தன் தடத்தை பதித்துள்ளது.

இராமர் காலத்தில் குருகுலக் கல்வி முறை காணப்பட்டது. ஆனால் இன்று, எவ்வளவு வளர்ந்துள்ளது நம் கல்வித் தரம். இன்றைய காலக்கட்டத்தில் பாடசாலைக்குச் செல்லாமலே கல்வி பயிலும் வசதிகள் வந்துள்ளன. இலங்கையில் கூட பல பிரபல்யமான பாடசாலைகளின் ஸ்மார்ட் கிளாஸ் (Smart Class) கல்வி முறை நடைமுறையிலுள்ளது. அதாவது, வீட்டில் இருந்தபடியே பாடசாலையில் ஆசிரியர்கள் கற்பிக்கும் பாடங்களை அவதானிக்க கூடியதாய் உள்ளது. பல்வேறு நூலகங்களில் தற்போது இணையதள வசதிகள் கூட காணப்படுகின்றது.

அது மட்டுமா, கல்வி கற்கும் இடங்களில் தனது அடையாள அட்டைகளில் கூட நவீன தொழில்நுட்பமே காணப்படுகின்றது. இதனால் தான் இலங்கையின் கல்வி தரம் பல நாடுகளை விட உயர்வாக உள்ளது. உலகத் தரப் பட்டியலில் இலங்கை முதல் ஐந்து இடங்களுக்குள் உள்ளது.

மருத்துவத் துறையை கருதுவோமானால், அக் காலங்களில் பெண்களுக்கு குழந்தைப் பேறு இல்லாவிடின் சுற்றத்தார் மலடி என பட்டம் கட்டி அவர்களை ஒதுக்கியே விடுவார்கள். மகப்பேறுக்காக கோயில், குலம் என்று அலைந்துத் திரிவதன் மூலம் காலம் கழிந்தன. ஆனால் இன்று அவ்வாறு இல்லை, டெஸ்ட் டியுப் (Test Tube) மூலம் குழந்தை இல்லாதவர் கூட மகப் பேற்றை அடைய முடியும். அதுவும், நாம் விரும்பியவாறு இரட்டைக் குழந்தைகளைக் கூட பெற்றுக் கொள்ள முடியும். மேலும் எமது ஒரு கலத்தில் (செல்லில்) இருந்து குளோனிங் மூலம் எம்மைப் போன்றே இன்னொரு உயிரையும் இன்று உருவாக்கி உள்ளனர் விஞ்ஞானிகள்.

புற்றுநோய் என்பது உயிர்க்கொல்லி நோயாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதப்படுகிறது ஆனால், இந்நோயை ஆரம்பத்திலேயே கண்டுபிடித்து விட்டால் அக்கலங்களை லேசர் ஒளி மூலம் அழித்து விட முடியும். அதுமட்டுமா? கடந்த சில மாதங்களுக்கு முன் பத்திரிக்கைகளிலும், தொலைகாட்சியிலும் பரபரப்பாக பேசப்பட்ட விடயம், கண்டியில் இதய மாற்று சிகிச்சையை வைத்தியர்கள் வெற்றிகரமாக செய்துள்ளனர். இவ்வாறு பல்வேறுபட்ட நோய்களை சோதிக்க பல கருவிகளை விஞ்ஞானிகள் கண்டுபிடித்த வண்ணமே உள்ளனர். இதனை விஞ்ஞானத்தின் வளர்ச்சி என்றே கூற வேண்டும்.



போக்குவரத்துத் துறையை கூட விடவில்லை. இந்த விஞ்ஞானம், அதிலும் தன் தடம் பதித்துள்ளது. மனிதன் பறவையை கண்டான், விமானம் படைத்தான். அந்த விமானம் இன்று பல வளர்ச்சி பெற்று வேறொரு உருவெடுத்துள்ளது. ஜப்பான், அமெரிக்கா போன்று வளர்ச்சியடைந்த நாடுகளில் பாதசாரிகள் கடவையில் வாகனங்கள் செல்லும் போது ஒலி, ஒளி எழுப்பக் கூடியவாறு அமைத்துள்ளனர். இன்று பல நாடுகளில் நவீன தொழில்நுட்பங்களுடன் கூடிய சொகுசு ரயில் சேவை முறை நடைமுறையில் உள்ளது. மேலும் சில கார்களில் கூட ஓட்டுனர் இல்லாமலே வாகனங்களை செலுத்தக் கூடிய வசதி உள்ளது.

இந்தியாவில், சென்னை மாநகரில் ஒரு உணவகத்தில் வேலைக்காக ரோபோக்களைப் பயன்படுத்தி வருகின்றனர். அதுமட்டுமா, இன்றைய காலகட்டத்தில் விண்வெளி ஓடங்கள், செய்மதிகளை அனுப்பி விண்வெளியை அலசி ஆராய்ந்துள்ளனர். இன்று செவ்வாய் கிரகத்தில் நீர் இருக்கின்றது. அங்கு மனிதன் வாழக்கூடிய சாத்தியக்கூறு உள்ளது என்பது வரை கண்டுபிடித்துள்ளனர்.

உண்ணும் உணவில் கூட தொழில்நுட்பங்களை பயன்படுத்துகின்றனர் சீனர்கள். இதிலிருந்து விஞ்ஞானத்தின் வளர்ச்சி அப்பட்டமாக தெரிகிறது. மெஞ்ஞானத்தை அலசி ஆராய்வது விஞ்ஞானம். விஞ்ஞானத்தின் ஆழத்தைப் பதம் பார்ப்பது அறிவியல். ஆகவே, மனிதனால் நுழைய முடியாத இடங்களில் கூட விஞ்ஞானம் நுழைந்து விடுகிறது. இது மனிதர்களோடு பிண்ணிப் பிணைந்துள்ளது. மனித வாழ்க்கைக்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ விஞ்ஞானம் அத்தியவசியமாகின்றது.

ஜெயப்பிரகாஷ் அஷ்வதி
தரம் 12 விஞ்ஞானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்ந்நன்றி அறிதல்

மனித விழுமியங்களில் தலையாயது நன்றி மறவாமை எனலாம். தமிழ் நீதி நூல்கள் யாவும் செய்நன்றியறிதலை விளக்கிக் கூறுகின்றன. தென்னைத் தண்ணீரை தன் வேரினால் உறிஞ்சி மரமானதும் இனிய இளநீராகத் தந்து நன்றி செய்கின்றது. நாய் நன்றியறிதலுக்கு உதாரணமாகக் கூறப்படுகின்றது. நன்றி ஓம்பும் பழக்கம் எம்மால் சிறுவயதிலிருந்தே கடைப்பிடிக்கப்பட வேண்டும். அது எம் உயர்வுக்கு வழி சமைக்கும் உயரிய பழக்கமாகும்.

உயர்ந்த பண்பும், ஒழுக்கமும் கொண்ட ஒருவரை உலகம் உயர்த்துகிறது. மனிதனின் நற்பண்புகளும், நன்னடைத்தகளும் ஒருங்கிணைந்ததே 'விழுமியம்' ஆகும். எமது விழுமியங்களுள் நன்றி பாராட்டுதல் முக்கியமானதாகும். காலமறிந்து, இடமறிந்து ஒருவர் எமக்கு செய்த உதவியானது மிகப் பெறுமதி வாய்ந்ததாகும். ஒருவர் துன்பமுற்று வருந்தும் காலத்தில் ஆறுதல் சொல்லி அன்பு காட்டுதலும், அவ்வேளையில் அவருக்கு உடனிருந்து உதவுவதும் உன்னத பண்புகளாகும்.



ஒருவர் எமக்கு உதவிய சந்தர்ப்பத்தை மனதில் நிறுத்தி அவருடைய உதவியை மேலாக மதிக்கும் பண்பினை நாம் நன்றி பாராட்டுதல் என்கின்றோம். "கொன்று அன்ன இன்னா செயினும் அவர் செய்த ஒன்று நன்று உள்ளக் கெடும்" இது வள்ளுவர் எமக்குத் தரும் நல்ல அறிவுரையாகும். அதாவது ஒருவர் கொலைக் குற்றத்தை செய்து இருந்தாலும் அவர் முன்னர் செய்த நன்மையை மீள நினைத்து மனதைச் சாந்தப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது அறிவுறுத்தலாகும்.

"நன்றியின் பிரதிபலனாக, எதனையும் எதிர்பார்க்கலாகாது" என்றும் நூல்கள் கூறுகின்றன.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது மற்றுமொரு குறள். நன்றி மறவாமையின் பெருமையைக் கூறும் தமிழ் நூல்கள் மறத்தலின் சிறுமையையும் கூறுகின்றன. நன்றி மறவாமை என்ற பண்பு எம்மிடத்தில் மேம்பட வேண்டும். மாணவர்கள் கடைப்பிடித்தொழுக வேண்டிய நற்குணங்களில் தலையாயது நன்றி மறவாமையாகும். வீட்டிலே பெற்றோர்க்கும், மூத்தோர்க்கும் நன்றி பாராட்டல் நல்லொழுக்கமாகும். பாடசாலையில் ஆசிரியர்களுக்கும், அதிபர் மற்றும் அனைவருக்கும் நன்றி காட்டும் பண்பை கடைப்பிடிப்போம். நன்றியுணர்வு எம்மால் கடைப்பிடிக்க வேண்டிய பண்பாகும். நாம் செய்த உதவிக்கு செய்ந்நன்றி எதிர்பார்த்தல் நாகரீகமானதல்ல.

ஆயினும் எமக்கு எவரேனும் உதவி செய்த சந்தர்ப்பத்தில் நாம் அவருக்கு "நன்றி" என்ற வார்த்தையால் எம் துலங்களை காட்டுதல் அவசியம். அதுவே நாகரீகம்.

தர்மராஜ் தீர்ஷனா
தரம் 12
வணிகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கையடக்கத்தொலைபேசியும், இளைஞர்களின் பயன்பாடும்

21ம் நூற்றாண்டுக் காலத்தில் மனித வாழ்க்கையில் தம்மையும் ஒரு அங்கமாக புகுத்திக் கொண்ட கையடக்கத்தொலைபேசி எனும் மிகவும் நுட்பமான கருவி, மனிதர்களிடையே பரவிக்காணப்படும் ஒரு முக்கிய தேவையான அம்சமாகக் கருதப்படுகிறது. அவ்வாறே, மனிதனின் மூன்றாம் கையெனவும் வைத்துக்கொள்ளலாம். இவ்வாறு பிரபல்யமடைந்தக் கையடக்கத்தொலைபேசியின் வரலாறு மிகவும் பழமையானது. முன்னைய காலங்களில் தொலைவிலிருந்து ஒருவருடன் ஒருவர் தொடர்புக்கொள்ள ஒரு சாதனமாக அலெக்ஸாண்டர் கிரஹம்பெல் என்பவர் கண்டுபிடித்தார். அதன் பின்னர் காலத்தின் மாற்றத்திற்கு அமைய இவ் தொலைபேசி படிப்படியாக நுட்பமான முறையாக, கையடக்க தொலைபேசியாக வளர்ச்சியடைந்தது. அதன் பின்னர் தொழினுட்ப வளர்ச்சிக்கமைய அதன் பயன்பாடுகள் அதிகரித்தது. இவ்வாறான பல காரணங்களால் மனிதர்களிடையே பெரும் தேவையாக மாறியது. அதிலும் இளைஞர்கள் மத்தியில் பெரும் ஈர்ப்பைக் கொண்டதாக இருந்தது.

இவ்வாறு பெரும் ஈர்ப்பைக் கொண்டதற்கான காரணங்கள் என்னவென்று நோக்குகையில், இவ் கையடக்கத்தொலைபேசியினுள், புகைப்படம் எடுக்கக்கூடிய வசதிகள், தொடர்பாடல் வசதிகள், குறுஞ்செய்தி வசதிகள் என பலதரப்பட்ட வசதிகளை கொண்டமைந்த ஒரு சிறிய சாதனமாகவும், கவர்ச்சியானதாகவும் காணப்பட்டமை, இளைஞர்களிடையே பெரும் விருப்பை பெற்றுக் கொண்டது. அவ்வாறே கையடக்கத்தொலைபேசியினுள் இணையத்தள வசதிகள் காணப்படுவதனால் அதனை எங்கும், எப்பொழுதும் பயன்படுத்தக்கூடிய வசதிகளும் காணப்படுகிறது. இவ் கையடக்கத்தொலைபேசி இளைஞர்களுக்குப் பலதரப்பட்ட நன்மைகளை கொடுத்தாலும் அதற்கு சமனான வகையில் தீமைகளையும் பெற்றுக்கொடுக்கிறது. முதலாவதாக நன்மைகள் சிலவற்றை நோக்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ் கையடக்கத்தொலைபேசி மாணவர்களுக்குக் கல்வியில் பெரும் உதவியை ஆற்றுகிறது. தமக்குத் தேவையான தகவல்களை உடனுக்கு உடன், சில நொடியினுள் அதற்கான புகைப்படங்களுடன் தனக்குத் தேவையான மொழி வளத்துடன், அதனை பெற்றுக்கொள்ளும் வசதிகளை கொண்டமைந்துள்ளது. அத்துடன் கையடக்கத்தொலைபேசி என்பது மாணவர்களுக்கு கல்வி கற்கும் ஒரு சிறிய நிறுவனமாகவும் மாறியுள்ளது. தனக்குத் தேவையான அனைத்து வகையான கல்வியுடன் தொடர்புடைய தகவல்களையும், புகைப்படங்களையும், வீடியோக்களையும் தெளிவாக பெற்றுக்-கொள்ளலாம். அத்துடன் தொலைவிலிருக்கும் ஒருவரை உடனுக்குடன் தொடர்புகொள்ளும் வசதிகளும், அவர்களை கையடக்கத்தொலைபேசியினூடாக பார்க்கக் கூடிய தொழினுட்பமும் பெருமளவு வளர்ச்சியைக் கண்டுள்ளது. அத்துடன் உலகெங்கும் நடைபெறுகின்ற அனைத்து வகையான செய்திகளையும் நேரத் தாமதமின்றி கையடக்கத்தொலைபேசியினூடாக அறிந்துக் கொள்ளலாம். முன்னய காலங்களில், பயன்படுத்தப்பட்ட கணினி, இணையதளம், தொலைபேசி, புகைப்படக்கருவி, தொலைக் காட்சி போன்ற வெவ்வேறான சாதனங்கள் ஒன்றுடன் ஒன்று இணைந்த ஒரு பதிலீடாகவும், விளைவாகவும், கையடக்கத்தொலைபேசி அமைந்துள்ளது. இவ்வாறான பலக் காரணங்கள் இளைஞர்கள் மத்தியில் பெரும் கவர்ச்சியையும், தேவையையும் உணர்த்தியுள்ளது.

இவ்வாறான பல அம்சங்கள் தமது மனதை உச்சிக் குளிர்வடையச் செய்தாலும், அதற்குப் பாதகமாக பெரும் விளைவுகளைக் கொண்டமைந்துள்ளது. இக் கையடக்கத் தொலைபேசியின் பாவனையின் காரணமாக இளைஞர்கள் பெருமளவு ஆர்வத்தினை அதில் செலுத்துவதினால், தமது அன்றாட வாழ்வின் முக்கிய செயற்பாடுகளைத் தவற விடுகின்றனர். அத்துடன் இதில் காணப்படும் ஆபாச காட்சிகளுக்கும், போதை பொருட்களுக்கும் அடிமையாகின்றனர். அத்துடன் அதிகளவான கையடக்கத்தொலைபேசியின் பாவனையின் காரணமாக இளம் வயதிலேயே பலதரப்பட்ட அபாய நோய்களும், மேலும் புதிய நோய்களும் ஏற்படுகிறது. அத்துடன் கடந்த சில வருட காலத்தினுள் கையடக்கத் தொலைபேசியின் பாவனையினால் ஏற்பட்ட கொலைகளும், தற்கொலைகளின் வீதமும் பெருமளவாக பதிவாகியுள்ளது. அத்துடன் இளைஞர்களுக்குக் கல்வியில் உள்ள ஆர்வம் மிகவும் குறைவடைந்து கையடக்கத் தொலைபேசியினூடாக அறிமுகப்படுத்தப்பட்ட சிறு சிறு விளையாட்டுக்கள் மாணவர்களை கட்டுப்படுத்தியுள்ளது. அதற்கு உதாரணமாக கடந்த நாட்களில் "பிலூ வேல்" (BLUE WHALE) எனும் இணையத்தள விளையாட்டு பல தற்கொலை முயற்சிகளை ஏற்படுத்தி பல உயிர்களை பறித்துள்ளது. அவ் விளையாட்டு மக்களிடையே பெரும் பீதியை ஏற்படுத்தியப்

போதிலும் சில நாட்களின் பின்னர் மீண்டும் அவ்வாறான சிக்கல்களில் சிக்கிக்கொள்கின்றனர். இவ்வாறான கையடக்கத் தொலைபேசியின் பாவனையின் ஊடாக மாணவர்களும், இளைஞர்களும் தமது கலாசாரத்தினை சீரழித்துக் கொள்கின்றதோடு சமூகத்தில் ஒரு இழிவான தன்மைக்கும் தள்ளப்படுகின்றனர்.

இவ்வாறான பல தீமைகளை பெற்றுக்கொடுக்கின்ற கையடக்கத் தொலைபேசி ஒரு நுட்ப மாயவித்தையாக காணப்படுகிறது. கையடக்கத் தொலைப்பேசியினால் ஒரு நபர் பாதிக்கப்படுவார் எனின், அவரைச் சூழவுள்ள சமூகமும் பெரும் அவமானத்தை அடைகின்றது. பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு தேவைக்கருதியும், பாதுகாப்புக்கருதியும் அதனை பெற்றுக் கொடுத்த போதிலும் முறையான கட்டுப்பாடு இன்றியும், முறையான பாவனை இன்றியும் தவறான பாதையை இளைஞர்கள் தெரிவு செய்கின்றனர். இவ்வாறான தவறான பாதைக்குள் இளைஞர்கள், மாணவர்கள் நுழைவதை தடுக்கும் பெரும் பொறுப்பு பெற்றோருக்கும், சமூகத்திலிலுள்ள மூத்தோருக்குமே பெரும் சவாலாக அமைந்துள்ளது.

"கடுகு சிறிதாயினும் காரம் பெரிது" என்ற வகையில், கையடக்கத்தொலைபேசி மிக நுட்பமான அளவாக இருந்த போதிலும் அதனால் செய்யக்கூடிய காரியம் மிகவும் உன்னதமானது. எனவே, எதனை நோக்குகையிலும் அதிலுள்ள நன்மைத் தீமைகள் சமமாகவே அமைந்துள்ளது. அதிலுள்ள சாதகமான பக்கத்தையும், விடயத்தினையும் மாத்திரமே நாம் பெற்றுக்கொள்ள வேண்டும். எனவே, உலகத்தினை அனுபவிக்கும் காலக்கட்டத்தில் உயிர்களை முடித்துக்கொள்ளாமல் நன்மையை நாடித் தீமையை தவிர்ப்போம்.

அஸ்ஹர் மொஹமட் பாத்திமா சஹீரா
தரம் 12
கலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வியின் சிறப்பு



கல்வியென்பது கற்க வேண்டிய நூல்களை தக்கவரிடத்தில் கற்றுத்தெளிதலாகும். நாம் தானாக முயற்சித்து கற்பவைகளும், பிறர் கூறக்கேட்டு பெற்றவைகளும், அனுபவத்தினூடாக கற்றுக் கொண்டவைகளுமாகிய அறிவுத்திறன் அனைத்தும் கல்வியே. கல்வியொன்றுதான் விலைமதிப்பற்ற செல்வம். இதனாலேயே வள்ளுவர் "கேடில் விழுச்செல்வம் கல்வி" என்றார். கல்வியினது நோக்கம் நல்வாழ்வாகும். கல்வியானது ஒரு மனிதனின் நலனையும், தேவையையும் கண்டு அவற்றை செம்மையான முறையில் வளரச் செய்வதன் மூலம் அவனை சிறந்த மனிதனாகவும் நற்பிரஜையாகவும் மாற்றுகின்றது.

எமது உடலில் மிகவும் இன்றியமையாத உறுப்பு கண்களாகும். கல்வியும் கண்ணைப் போன்று உயர்ந்தது, சிறப்பானது. கல்வியறிவு உடையவர்களே கண்ணுடையர். ஏனையோர் கண்ணிருந்தும் கண்ணில்லாதவராக கருதப்படுவர். நாம் நம் கூந்தலை பல்வேறு முறைகளில் ஒப்பனை செய்கிறோம், சிறந்த ஆடைகளை தேர்ந்தெடுத்து அணிகிறோம், அரிய வேலைப்பாடுக-ளுடன் கூடிய விலைமதிப்பற்ற ஆபரணங்களை அணிகிறோம். இவையெல்லாம் உண்மையான அழகன்று. கல்வி அழகு ஒன்றே சிறந்தது, நிலையானது.

செல்வப்பொருள் சிறந்ததாயினும் அது பிறருக்குக் கொடுக்கக் கொடுக்க குறையக்கூடியது. கள்வர்களால் கொள்ளைய-டிக்கப்படக்கூடியது. நெருப்பினால் வேகக் கூடியது. ஆனால் கல்விச் செல்வத்தை கள்வர்களால் கொள்ளையடிக்க முடியாது, நெருப்பினால் அழிக்க முடியாது. கல்வியானது கொடுக்கக் கொடுக்க கூடுமே ஒழிய குறையாது. கல்வி வற்றாத பெருஞ்செல்வமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விக்கு கரை இல்லை. கல்வியை கற்பவர்களுடைய வயதோ சிறிதாகும். ஆதலால் அன்னமானது எப்படி நீரோடு கலக்கப்பட்ட பாலை பிரித்தறிந்து அருந்துகிறதோ அது போன்று நாமும் ஆராய்ந்தறிந்து நமக்கு மிகமிக அவசியமானவைகளை தேர்ந்தெடுத்து கற்றல் அவசியமாகும்.

"கல்வியென்னும் பயிருக்கு கண்ணீர் என்னும் மழை வேண்டும்" கல்வியை சிரமமின்றி கற்றல் இயலாது. நன்கு கற்றறிந்து பெரியோர்களிடத்தே ஏங்கித் தாழ்ந்து நின்று கற்றல் வேண்டும். மணற்கேணி இறைக்க இறைக்க ஊறுவதை போன்று கல்வியும் கற்க கற்க வளர்ச்சி அடையும். மன்னனுக்கு தன் தேசத்தில் மட்டுமே சிறப்பு ஆனால் கற்றோனுக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு.

கல்வி கல்லாதவர்களை விலங்கிற்கு சமமாக கூறுவார்கள். பொதுவாக கூறின் கல்வியானது மனிதனை விலங்கு நிலையிலிருந்து உயர்த்துகின்றது எனலாம். நாம் ஒரு பிறப்பில் கற்ற கல்வியானது ஏழு பிறப்பும் தொடரும் என்பது நூல்களில் கூறப்பட்ட உண்மையாகும்.

"இளமையிற் கல்வி சிலையில் எழுத்து". நாம் கல்வி கற்க ஏற்றக்காலம் இளமைப்பருவமாகும் ஆகவே மாணவர்களாகிய நாம் நம் சிறு பிராயத்திலேயே கற்க வேண்டிய நூல்களை கற்று தெளிதல் வேண்டும். பாடங்களில் ஏற்படும் சந்தேகங்களை ஆசிரியர்களிடமோ அல்லது உடன் கற்போரிடமோ கேட்டறிந்து அவற்றை தீர்த்துக் கொள்ள வேண்டும்.

திருவள்ளுவர் பெருமான் "ஒருவர் கல்வி கற்றதன் பெரும் பயன் கடவுளுடைய திருவடிகளை தொழுதலேயாகும்" என்கிறார். ஆகவே நாமும் இளமையிலிருந்தே கல்வியை குற்றமற்ற முறையில் சரியாகக்கற்று, கற்றபடி நடந்து இறைவன் திருவடியை வணங்கி இன்புற்றிருப்போமாக!



விநாயகமூர்த்தி நர்மதா
தரம் 12
விஞ்ஞானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலப்பதிகாரமும் நடனமும்

"திருநிலைச் சேவடி சிலம்புவாய் புலம்பவும்
பரிதரு செங்கையில் படுபறை ஆர்ப்பவும்
செங்கண் ஆயிரம் திருக்குறிப்பு அருளவும்
செஞ்சடை சென்று திசைமுகம் அலம்பவும்
பாடகம் பறையாது சூடகம் முழங்காது மேகலை அசையாது
வார் குழை ஆடாது மணிகுழ் அவிழாது
உமையவன் ஒரு திறனாக இமையவள் ஆடிய கொட்டிச் சேதம்"

என இளங்கோவடிகளின் பாடலிற்கு அமைவாக ஐம்பெருங் காப்பியங்களுள் சிலப்பதிகாரமே சிறந்த காவியமாகத் திகழ்கிறது. நாட்டியம் பற்றிய விளக்கங்களைத் தரும் இந்நூல் தித்திக்கும் தீந்தமிழில் எழுதப்பட்டுள்ளது. இந்நூல் தமிழ் இலக்கியங்களுள், உரைநடையில் எழுதப்பட்டவற்றுள் முதன்மை வாய்ந்ததாகவும் காணப்படுகிறது. சீரான இசை, நடனம் பற்றிய தகவல்களைத் தரும் ஓர் கையேடாகவும் விளங்குகிறது. மேலும், அக்காலத்தில் அந்த நாட்டில் நிலவிய பழந்தமிழ் கலாசாரம், சமயம், கலைகள், நாகரீகம் இவை அனைத்தையும் வெளிப்படுத்தும் ஓர் உண்மைக் காவியமாகவும் இருக்கிறது. சிலப்பதிகாரக் கதையில் இரண்டு கதாநாயகிகள் வலம் வருகின்றனர். இவ்விருவருள் ஒருவர் குடும்பப் பெண்ணாகிய கண்ணகி என்பவர் மற்றவர் கணிகையர் குலத்தைச் சேர்ந்தவரான மாதவி என்பவர். கதாநாயகன் வணிகச் செல்வனான கோவலன். சிலப்பதிகாரக் கதை இம்மூவரையும் சுற்றி வலம் வருகிறது. மேலும், இளங்கோவடிகள் நடனங்கள், இசை கருவிகள், அவற்றை வாசிக்கும் முறை, அரங்கு பற்றிய விளக்கம் முதலியவற்றை அழகாக எடுத்துரைத்துள்ளார். மற்றும் நடனம், இசை ஆகிய கலைகளை சாஸ்திர பூர்வமாக ஆராய்ந்து எழுதியுள்ளார்.

பதினொரு வகைக் கூத்து

தென்னிந்தியாவில் பதினொரு வகைக் கூத்து மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. இன்றைய தென்னிந்திய நடன வகையை ஒருவர் அறிந்து கொள்ள வேண்டுமாயின் இப்பதினொரு வகைக் கூத்துக்களை முதலில் அறிதல் வேண்டும். ஆரம்ப கால நடனங்கள் பற்றிய தகவல்கள் பழைய நூலான தொல்காப்பியத்தி-லிருந்து எமக்கு கிடைக்கின்றன. தமிழ் மாநிலத்தின் ஆரம்பகால நாட்டியம் மிகவும் எளிமையானதாகவும், கிராமியப் பண்பாடுகளு-டனும் காணப்பட்டது. அவற்றை சாஸ்திரிய நடன வகைகள் என அழைக்க முடியாமலிருந்தது. ஆனால், அதே சமயத்தில் இந்நடன வகைகளை மரபுவழி நடன வகைகளாகக் கொள்கிறோம். மேலும் மாதவி ஆடிய பதினொரு வகை கூத்துக்களும் பின்வருமாறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. அல்லியம்
2. கொடு கொட்டி
3. குடக் கூத்து
4. குடைக் கூத்து
5. மற்கூத்து (மல்லாடல்)
6. பாண்டரங்கக் கூத்து
7. துடிக் கூத்து
8. பேடிக் கூத்து
9. மரக்கால் கூத்து
10. பாவைக் கூத்து
11. கடையக் கூத்து



மேலும், இப் பதினொரு கூத்துக்களையும் தவிர, ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை, வரிக்கூத்து, வெறியாடல் என்னும் கூத்துக்களும் சிலப்பதிகாரத்திற் கூறப்பட்டுள்ளன.

"குழல் வழி நின்றது யாழே யாழ்வழித்
தண்ணுமை நின்றது தகவே தண்ணுமைப்
பின்வழி நின்றது முழவே முழவோடு
கூடி நின்று இசைத்தது ஆழந்திரிகை"

இவ்வாறு சிலப்பதிகார அரங்கேற்று கதையில் லாவண்ய சிருங்கார நாட்டியமும், பண்ணோடு மதிமயங்கும் சங்கீதமும் மற்றும் இயல், இசை, நாட்டியம் எனும் மூத்தமிழும் ததும்பும் இளங்கோவடியின் காப்பியத்தில் நடனச் செய்திகளை சித்தரித்து மேன்மை படுத்தியுள்ளார். கல்தோன்றா காலத்தே முன்தோன்றிய தமிழர் இனத்தின் கலாசாரம் வளர்க்கும் அதன் மகோனதத்திற்கும் ஆடல் வல்லானின் அத்வைத நாட்டியத்திற்கும் மணிமகுடமாய் இக் காப்பியம் திகழ்கிறது என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை.

"தீக்கெட்டும் புகழ்எட்டும் தமிழர் மரபு
பாரெங்கும் இனி ஓங்கும் செந்தமிழே"

சேகர் சுரேகா நித்யஸ்ரீ
தரம் 12
கலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமய தத்துவத்தோடு கலந்த விஞ்ஞானம்

கல் தோன்றி மண் தோன்றா காலத்தில் முன் தோன்றிய மூத்தக் குடி நம் தமிழ்குடி என்றெல்லாம் தமிழர் பெருமையை கூறி வந்தார்கள் நம் முன்னோர்கள். அந்த வகையில் அக்காலம் முதல் இக்காலம் வரை தமிழ்க் கலாசாரமும் தமிழ்ப் பண்பாடும் ஒன்றோடு ஒன்று பிண்ணிப் பிணைந்துள்ளது எனலாம்.

இந்து சமயத்தின் தொடக்கம் எது? எனக்குத் தெரியாது. ஆம் ஆதி அந்தம் இல்லாத மதம் எமது சமயம். இன்று எமது சமயமானது உயர் நிலைக் கோபுரங்களாக தலை நிமிர்ந்து நிற்கின்றது. இதற்கு ஆணிவேராக உள்ளது எம்மவர்களின் பண்பாடும் கலாசாரமுமே ஆகும்.

பல்லாயிரம் வருடங்களுக்கு முன் தோன்றிய இப்பண்பாடு இன்று விஞ்ஞானமாக உருவெடுத்துள்ளது என்றால் அது மிகையாகாது. ஆம், இன்றைய விஞ்ஞான வளர்ச்சியில் எமது கலாசாரங்கள் முக்கிய பங்கு வகித்துள்ளது என்றே கூற வேண்டும்.

இந்து மதம் என்ன கூறுகிறது? வீட்டிற்கு முன் வேப்பிலை, துளசி போன்ற மரஞ்செடிகளை வளருங்கள் என்கின்றது. அன்று வழிபாட்டுக்காக அவற்றை வளர்த்தனர். ஆனால் இன்று விஞ்ஞானம் வேப்பிலை, துளசி போன்றவை வீட்டு முற்றத்தில் காணப்பட்டால் வீட்டிற்குள் வரும் வளியை தூய்மைப் படுத்தும் எனவும் வளியிலுள்ள கிருமிகளை அழித்து நோய் நொடிகளில் இருந்து எம்மை பாதுகாக்கும் என்கிறது.



அதுமட்டுமா! தியானம், சூரிய வழிபாட்டிற்கு எம்மதத்தில் தனி இடமே உள்ளது. அதனையே இன்று தியானம் (மெடிடேஷன்), சூரிய நமஸ்காரம் என்று விஞ்ஞான மொழியில் கூறுகின்றனர். உணவு உட்கொண்ட பின் வெற்றிலை உண்பது தமிழர்களின் மரபு வெற்றிலை போடுவதால் வாயும் மணக்கும் வாய் சம்பந்தமான நோய்களும் தீரும் என்று விஞ்ஞானிகள் விஞ்ஞானப்பூர்வமாக கண்டுபிடித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஞ்ஞானிகள் ஞாயிற்று தொகுதியில் ஒன்பது கோள்கள் என்று கண்டுபிடிக்க முன்னரே எம்மூதாதையர் நவக்கிரகங்களை வழிபட்டு சோதிடம் கணித்துள்ளனர். அது மட்டுமா! பிற்காலத்தில் வரக்கூடிய சூரிய கிரகணம் சந்திர கிரகணத்தை கூட எம் மூதாதையர் அன்றே கணித்துப் புத்தங்களில், ஓலைச்சுவடிகளில் எழுதியுள்ளனர்.

இந்துக்கள் வீட்டின் முன் கோலம் போடுவது வழக்கம். கோலம் போடும் போது பெருவிரல் அழுத்தப் படும் போது நரம்பின் செயற்பாடு விரைவுபடுத்தப்படும். மேலும் கொலுசு போடும் போது பின்னங்காலில் உள்ள எலும்பு அழுத்தப்படுவதால் மூளை நன்கு வேலை செய்யும் என்கின்றனர் விஞ்ஞானிகள்.



விநாயகருக்காக தோப்புக்கரணம் நாம் இடுவோம். எம் காதுகளை பிடித்து உட்கார்ந்து எழும்பும் போது மூளையும் நன்கு விருத்தி அடையும். உடற்பயிற்சியாகவும் இது அமைகின்றது.

இவ்வாறு இந்து சமயமும் விஞ்ஞானமும் ஒன்றிணைந்துள்ளது. எமது பாரம்பரியங்களை காப்போமானால் நாம் உடல் நலத்துடனும் இருக்கலாம். கலாசாரத்தையும் காக்கலாம். இதற்கு மாணவ சமுதாயமாகிய நாமும் விஞ்ஞான வளர்ச்சியோடு, எமது சமயம் சார்ந்த கலாசார பண்பாட்டு வளர்ச்சிக்கும் துணை நிற்க வேண்டும்.

ஜெயப்பிரகாஷ் அஷ்வதி
தரம் 12
விஞ்ஞானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணையம் உணர்ந்து பயன்பெறுவோம்

தொடர்பாடல் எனப்படுவது இருவருக்கிடையேயான கருத்துப் பரிமாற்றமாகும். அன்று முதல் இன்று வரை தொடர்பாடல் என்பது மனித வாழ்வுடன் இரண்டறக் கலந்ததாகும். ஆரம்ப கால கட்டங்களில் தொடர்பாடலுக்காக வாய்மொழி, பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி ஆகிய சாதனங்களே முன்னணி வகித்தன. ஆனால் இன்றைய 21ம் நூற்றாண்டிலே நம் அனைவரையும் தொடர்பாடல் துறையில் ஆட்டிப்படைகிறது இணையத்தளம்.



இணையத்தளம் எனப்படுவது ஓர் உலகளாவிய சமூக வலைத்தளமாகும். மக்கள் அனைவரும் இன்று பயன்படுத்தும் ஓர் முக்கிய தொடர்பாடல் ஊடகமே இணையத்தளம். இவ் இணையத்தளம் இன்று பரவலாகப் பயன்படுத்தப்படுவதற்கான காரணம் இதில் பயன்படுத்துவதில் இலகுத்தன்மையும் விரைவுத் தன்மையுமாகும். இணையத்தளத்தை கணினி, தொலைபேசி ஆகிய ஊடகங்களில் பயன்படுத்தலாம். இணையத்தளத்தின் மூலம் எமக்கு தேவையான தகவல்களை உடனுக்குடன் அறிந்து கொள்ளலாம். உலகளாவிய ரீதியில் எவ் இடத்திலும் எந்நேரமும் நடைபெறும் விடயங்களை அறிந்து கொள்ளக்கூடிய வாய்ப்பு எமக்கு இணையத்தளம் மூலம் எட்டியுள்ளது.

இணையத்தளத்தின் முக்கிய பங்காளர்களாக சமூக வலைத்தளங்கள் காணப்படுகின்றன. உதாரணமாக முகநூல், வாட்ஸ் அப், வைபர், மெசென்ஜர், இன்ஸ்டகிராம் என்பனவாகும். இவற்றின் மூலம் மிக விரைவாக தகவல்கள், குறுஞ்செய்திகள், புகைப்படங்கள், வீடியோக்கள் என்பவற்றை பரிமாற்றிக் கொள்ளலாம். இன்றைய போட்டி உலகில் கற்றுக்கொண்டிருக்கும் மாணாக்கருக்கு இவ் இணையத்தள, சமூக வளைத்தளங்களாவன மிகப் பெருமளவு உறுதுணையாய் நிற்கின்றன. கற்றலுக்குத் தேவையான பாட அம்சங்கள், புகைப்படங்கள், வீடியோக்களை பரிமாற்றிக்கொள்ளலாம். அத்துடன் e-library மூலம் எமக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவையான புத்தகங்களை பதிவிறக்கம் செய்து வாசிக்கலாம். ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பாடங்களை இலகுவான முறையில் விளக்கப்படுத்துவதற்காக வீடியோக்களை பயன்படுத்தலாம். இன்று நமக்கு எதனையும் கற்பனை உலகில் கற்கத் தேவையில்லை. கற்பனையில் யோசித்து விளங்க வேண்டிய விடயங்களும் இன்று இணையத்தளத்தில் வீடியோக்களாக பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. இன்று ஆசிரியர் மாணவர்களுக்கிடையில் தொலைவு எனும் நிலையைத் தாண்டி உடனுக்குடன் எழும் சந்தேகங்களை தீர்க்கக் கூடியளவு சமூக வலைத்தளங்கள் நம் கைகளில் தவழுகின்றன.

கற்றல் துறையில் மட்டுமன்றி வைத்தியம், பாதுகாப்பு, சமையல், போக்குவரத்து ஆகிய அனைத்து துறைகளிலும் இணையத்தளம் முக்கிய பங்கு வகிக்கின்றது. வைத்தியத் துறையில் உலகளாவிய ஆராய்ச்சியாளர்கள் நேரடி தொடர்பு இன்றி video conference மூலம் ஒன்று கூடி பல நோய்களுக்கான காரணங்களையும், அவற்றுக்கான மருந்துகளையும் கண்டு பிடிக்கின்றனர். பாதுகாப்பு துறையில் பல்வேறு புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதன் மூலம் குற்றச் செயல்கள், வன்முறைகள் குறைக்கப்படுகின்றன. சமையல் துறையில் நமக்கு வேண்டிய புதுப்புது உணவுகளின் செய்முறைகளை youtube இல் பார்ப்பதன் மூலம் தெரிந்து கொள்ளலாம். போக்குவரத்துத் துறையை நோக்கு - வோமானால், நமக்குத் தெரியாத எவ் இடத்திற்குச் செல்வதற்கும் இணையத்தைப் பயன்படுத்துவதன் மூலம் நமக்கு செல்லலாம். விவசாயத் துறையில், மண்ணின் தன்மை, காலநிலை, அறுவடைக் காலம் ஆகிய நிலைகளை அறிந்து கொள்வதற்காக புதிய கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

எந்தவொரு நவீன கண்டுபிடிப்பிலும் நன்மையும் இருக்கும். தீமையும் இருக்கும். அதே போன்றதே இணையத்தளமும். இன்று அநேகமான பெற்றோர்களின் கவலைக் குரலாக இருப்பது பிள்ளைகள் தம் அதிகமான நேரத்தை கைத் தொலைபேசியிலும், கணினியிலுமே கழிக்கின்றனர் என்பதாகும். மாணவர்கள் வாட்ஸ்அப் இல் நண்பர்களுடன் பல குழுக்களை உருவாக்கிக்கொண்டு தேவையற்ற விடயங்களில் தம் காலத்தைக் கழிப்பர். அத்துடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல் கேட்டல், கணினி விளையாட்டுக்களை விளையாடுதல் போன்றவற்றில் நேரம் வீணடிக்கின்றனர். ஆபாசக் காட்சிகள், சினிமா திரைப்படங்கள் ஆகியவற்றைப் பார்ப்பதன் மூலம் மாணவர்களின் ஒழுக்கத்தில் சீர்கேடு ஏற்படுகின்றது. அத்துடன் முகநூலில் ஒவ்வொருவரும் இது ஒரு உலகளாவிய சமூக வலைத் தளம் என்பதை மறந்து தத்தம் அன்றைய செயற்பாடுகளை பகிர்ந்து கொள்கின்றனர். முகநூலில் முகமே தெரியாத எத்தனையோ பேருடன் தொடர்பு வைத்திருப்பதால் ஏமாற்றம், முறையற்ற தொடர்பு போன்றன நிகழ்கின்றன.

இவ்வாறான செயற்பாடுகளால் முதலாவதாக நேரம் வீணடிக்கப்படுகின்றது. அத்துடன் ஞாபக சக்தி, கற்கும் ஆற்றல் குறைகிறது. கற்றலில் விருப்பமின்மை ஏற்படுவதுடன் மன அழுத்தமும் ஏற்படுகிறது. நீண்ட நேரம் தொலைபேசி அல்லது கணினியின் திரையை நோக்குவதால் கண்பார்வை பிரச்சினை, மன அழுத்தம், தலைவலி, நரம்புத்தொகுதி சம்பந்தமான நோய்கள், உடற்பருமன் அதிகரித்தல் போன்ற நோய்களும், சுகாதாரப் பிரச்சினைகளும் ஏற்படுகின்றன.

எனவே நாம் இயன்றவரை இணையத்தளத்தின் தீமைகளைத் தவிர்த்து நன்மைகளை மாத்திரம் பெற முயற்சி செய்வோம்.

அமானுல்லாஹ் அப்ரா
தரம் 12
விஞ்ஞானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நனோ தொழில்நுட்பத்தின் முன்னோடி இயற்கையே!



நவீன வளர்ச்சிக்கேற்ப பல்வேறு துறைகளிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. அதே போன்று தான், விஞ்ஞான துறையில் நனோ தொழிநுட்பமானது வளர்ச்சியடைந்து வருகின்றது. முதலில் 'நனோ' என்பது என்ன என்பதை அறிந்து வைத்திருத்தல் அவசியமானதாகும். 'நனோ' (நன்னாஸ்) என்ற சொல் 'குள்ள' அல்லது 'சிறிய' என பொருள்படும். உதாரணமாக :- கிலோ மீற்றரை, மீற்றருடன் ஒப்பிடும் போது மீட்டர் சிறிய அளவாகும். இதே போன்று மீட்டரை, சென்றி மீற்றருடன் ஒப்பிடும் போது சென்றிமீற்றரே சிறிய அளவாகும். எனவே 'சிறிய' அல்லது 'நனோ' பொருள் என்றால் எந்த அளவிற்கு சிறியது? என்ற வினாவுடன் ஏற்படும் குழப்பத்தை தவிர்க்க சில விஞ்ஞானிகள் 'நனோ' விற்கு சரியான அளவை கொடுத்தனர். அது தான் மீற்றரில் $10^{-9}$ அதாவது ஒரு பொருள் நனோ மீற்றர் அளவில் இருக்கும் என்றால் அதன் அளவு $10^{-9}$ m ஆகும்.

நனோ என்றால் என்ன என்பதை அறிந்து கொண்டது போல அதன் வளர்ச்சி மற்றும் பயன் என்பவற்றை பற்றி அறிந்து வைத்திருத்தல் அவசியமானதாகும். தற்காலத்தில் நனோ தொழினுட்பத்தின் வளர்ச்சி அளப்பரியது. விஞ்ஞான துறையில் மட்டுமல்லாது, பல்வேறு துறைகளிலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. உடுத்தும் உடைகளிலும், வீட்டில் பயன்படுத்தும் மின்சார பொருட்களிலும், சில மருந்துகளிலும், உணவு பொருட்களிலும், நோயினை கண்டறியும் கருவிகளிலும், நீர் சுத்திகரிப்பு சாதனங்களிலும் மின் உற்பத்தி மற்றும் சேமிப்பு கலனிலும் நனோ தொழில்னுட்பமானது செயற்கை ரீதியாக பயன்படுத்தப்பட்டு வருகின்றது. ஏறத்தாழ எல்லா துறைகளிலும் உள்ள ஆராய்ச்சியாளர்களால் அதிகம் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நனோ தொழில்நுட்பத்தின் மீதான மோகத்திற்கு என்ன காரணம்? நனோ பொருட்களின் அதீத பயன்களும், வித்தியாசமான பண்புகளும் தான். ஒரு பொருளின் அளவு குறைந்து நனோ மீற்றர் அளவிற்கு சென்றால் என்ன நன்மை? அப்பொருளின் பண்புகள் பெருமளவு மாறுபடும். அதனால் தான் பயன்களும் அதிகரிக்கும். எல்லா துறைகளிலும் பயன்படுத்தப்படும் நனோ தொழில்நுட்பத்தை உண்மையில் மனிதர்கள் உருவாக்கினார்களா? என்றால், இல்லை என்ற பதில் தான் கிடைக்கும். மேலும் நனோ தொழினுட்பத்தின் முன்னோடி இயற்கை தான் என்பதை பின்வரும் செய்திகள் மூலம் ஊர்ஜிதப்படுத்த முடியும்.

'பல்லியின் ஒட்டும் தன்மை' எனும் செயற்பாட்டினை நாம் நோக்கினால், நம் வீட்டின் சுவற்றின் மீது ஒட்டிக்கொண்டிருக்கும் பல்லியை பாருங்கள். புவியீர்ப்பு விசையையும் எதிர்த்து பல்லி உறுதியாக ஒட்டிக்கொண்டிருப்பதற்கான காரணம் என்ன? அதன் கால்கள் தான் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அதாவது பல்லியின் ஒவ்வொரு காலிலும் இலட்சக்கணக்கான இழைகள் உள்ளதாகவும். ஒவ்வொரு இழைகளிலும் என்னற்ற 'ஸ்பேட்சுலே' எனப்படும். நனோ இழைகள் உள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் மனிதர்களால் கண்டுபிடிக்கப்பட்டது தான் 'நனோ பசைகள்'.

இதே போன்று இயற்கைக்கும், நனோவிற்கும் இடையிலான தொடர்பை கூறிக்கொண்டே செல்லலாம். பறவைகளின் இறகுகளில் நீர் ஒட்டா தன்மை, சிலந்தி வலையின் உறுதி, நீரின் மேற்பரப்பின் மீது நடக்கும் பூச்சிகள், நீரை உறிஞ்சும் களிமண், நீரை விலக்கும் தாமரை இலைகள், வண்ணத்து பூச்சியின் நிறங்கள் போன்ற நாம் காணும் பல காட்சிகள் நனோ தொழினுட்பத்துடன் ஒத்துப் போகின்றன. இவற்றின் மூலமாகவே நனோவிற்கும் இயற்கைக்கும் இடையிலான தொடர்பை அறிந்து கொள்ள முடிந்தது.

ரவீந்திரன் மினோலி சப்னா
தரம் 12
விஞ்ஞானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிரை காவுகொள்ளும் எபோலா வைரஸ்

எபோலா வைரஸ் நோய் அல்லது எபோலா குருதி ஒழுக்கு காய்ச்சல் என்று எபோலா வைரஸின் நான்கு வகைகளால் மனிதனுக்கு ஏற்படும் நோய்கள் பெயரிடப்பட்டுள்ளன. இது ஓர் ஆட்கொல்லி நோயாகும். கடுமையான குருதி இழப்பு ஏற்பட்டு நோய் வாய்ப்படும் பத்து பேரில் சராசரியாக ஐந்து - ஒன்பது பேர் வரை உயிரிழக்கின்றனர்.

1976ம் ஆண்டு ஆபிரிக்காவின் சையர் நாட்டில், எபோலா ஆற்றங்கரையில் இவ்வைரஸ் முதலில் கண்டுபிடிக்கப்பட்டமையால் இதற்கு "எபோலா வைரஸ்" என்று பெயரிட்டனர். சையர், கோட்டிவார், சூடான் ஆகிய நாடுகளை இவ்வைரஸ் ஆட்கொண்டுள்ளது.

இந்த வைரஸ் நோய் ஏற்பட்ட நோயாளியின் நீர்மலங்களுடன் தொடர்பு கொண்டவர்களுக்கு, அவற்றின் மூலமாக வைரஸ் உட்செல்கிறது. எனினும், இது காற்றினால் பரவுவதில்லை. எபோலா வைரஸால் பாதிக்கப்பட்டவர்கள் அதிகளவு குருதியை இழப்பர், அவர்களது வயிற்றுப் போக்கிலும், வாந்தியிலும் குருதி வெளியாகும். மேலும் கடுமையான நோயுற்றோரின் மூக்கு, காது, யோனிவழி என்பவற்றிலிருந்து குருதி வெளியேறும். இந்த நீர்மலங்களே மற்றவர்கள் நோய்க்குள்ளாக காரணமாக அமைகிறது.

ஒருவருக்கு எபோலா வைரஸ் நோய் பற்றும் போது முதல் அறிகுறிகள் ஏனைய நோய்களின் அறிகுறிகளை ஒத்திருக்கும். காய்ச்சல், உடல் தளர்ச்சி, தலைவலி, வயிற்று வலி, மூட்டுவலி மற்றும் தொண்டை வலி என்பனவாகும். இவ்வறிகுறிகளை கொண்டு இது மலேரியா, குடற்காய்ச்சல் நோயென தவறாக எண்ணுவதுண்டு. எனினும் பின் நோய் தீவிரமாகி குருதி இழக்க தொடங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலையில் அதிர்ச்சி குறைந்த குருதி அழுத்தம், விரைவான நாடி துடிப்பு மற்றும் உறுப்புகளுக்கு குறைந்த குருதி வழங்கல் என்பன ஏற்படும். இதனால் உறுப்புகள் செயலிழக்க தொடங்குகின்றன. மேலும் உடல் இறுக்கமடைந்து படுக்கையிலேயே இருக்க வேண்டியும் ஏற்படும்.



இந்நோயானது வைரஸ் நோய் என்பதால், மருந்துகள் இல்லை. எனினும் நோயாளியின் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்க மருந்துகள் வழங்குவதன் மூலம் பல உயிர் பிழைக்கின்றனர். மேலும் வாந்திபேதி, வயிற்றுப்போக்கின் மூலம் அதிகளவு குருதி இழக்கப்படுவதால் மருத்துவ மனைகளில் சேலைன், குருதி ஆகியவற்றை வழங்குவதுடன் குருதி அழுத்தம், சுற்றோட்டத் தொகுதி ஆகியவற்றை சீராக்கி மருந்துகளும் வழங்கப்படுகிறது.

ஒரே சமயத்தில் பலர் எபோலா தொற்றுக்கு உள்ளாகி இருப்பின், அதனை தடுக்க நோயுற்ற மக்களை தனிமைப்படுத்தி மற்றவர்களுக்கு பரவாமல் வழிவகுக்கின்றனர். மேலும் நோயாளிகள் வெளியேற்றும் நீர்மலங்கள் நோய் பரவாதவாறு கழிக்கப்படுவதன் மூலம் எபோலா நோய்க்கான சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன.

எவ்வாறு இருப்பினும் எபோலா வைரசுக்கான தடுப்பு மருந்தினை கண்டறிய அறிவியலாளர்கள் முயன்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

புவனேந்திரன் ரேக்ஷனா
தரம் 12
விஞ்ஞானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணித விளையாட்டுக்கள்

கணிதத்தின் தனிச்சிறப்புகளில் கணித விளையாட்டுக்களும் ஒன்று. பொதுவாக மற்றப்பாடங்களில் இதற்கொப்பான ஒரு பகுதியைக் காணுவது அரிது. மாணவர்களை மென்மேலும் கணித விளையாட்டுக்களில் ஊக்கமாக ஈடுபடச்செய்வதால் அவர்களுடைய கணித ஆர்வம் பெருகுவதற்கு வாய்ப்புண்டு. இவ்விளையாட்டுக்கள் மாணவர்களின் கணித அறிவின் அடிப்படையைக் கொடுத்தலாகும்.

இவ் விளையாட்டுக்களில் மாயச்சதுரங்கள் ஒன்றாகும். இவை கிறிஸ்தவ சகாப்தத்திற்கு முந்திய காலத்திலேயே சைனாவில் கண்டுபிடிக்கப்பட்டதாக வரலாறு கூறுகிறது. ஆயினும், ஏறத்தாழ கி.பி. 15 ஆம் நூற்றாண்டில் மாஸ்கோ பூலஸ் என்பவர் இவற்றைப் பற்றிய விவரங்களை ஐரோப்பாவிற்கு எடுத்துக்கொண்டதன் மூலமே இவை ஐரோப்பிய நாடுகளில் பிரபல்யமாயின. உரோம நாட்டு மன்னரான "அகிரிப்பா" என்பவர், மூன்று முதல் ஒன்பது படிகள் வரையுள்ள மாயச் சதுரங்களை அமைத்து அவற்றை வான்கோள்களின் பெயரால் வழங்கியதாகத் தெரிகின்றது. வெள்ளித்தட்டுகளில் பொறிக்கப்பட்ட மாயச்சதுரங்கள் தாயத்துப்போல் பயன்படுத்தப்பட்டதாக தெரிகின்றது. ஒரு வேலை இதனாலேயே இவற்றை மாயச் சதுரங்கள் என்று அமைத்திருக்கலாம். முழு எண்கள் பலவற்றைப் பின்வருமாறு ஒரு செவ்வக வடிவில் அமைத்தல் அதை மாயச் சதுரம் எனலாம். அதாவது, இதில் சதுரத்திலுள்ள எண்களை இடமிருந்து வலமாகவோ மேலிருந்து கீழாகவோ அல்லது மூலைவிட்டம் வழியாகவோ கூட்டும் போது கிடைக்கும் கூட்டுத் தொகைகள் சமமாயிருக்க வேண்டும். சாதாரணமாக இதில் இயல் முழு எண்களே பயன்படுகின்றன. $\eta^2$ எண்களைச் சதுரவடிவில் அமைத்தால் ஒவ்வொரு வரிசையிலும், மத்தியிலும் '$\eta$' எண்கள் இருக்கும். இதற்கு $\eta$ படி 'மாயச்சதுரம்' என்று பெயர். இதில் வரிசை எண்களின் கூட்டுத்தொகை $\frac{\eta(\eta^2+1)}{2}$ கீழே கொடுக்கப்பட்ட மாய சதுரங்களை கவனிக்க,

| | | |
|---|---|---|
| 8 | 1 | 6 |
| 3 | 5 | 7 |
| 4 | 9 | 2 |

| | | | | |
|---|---|---|---|---|
| 17 | 24 | 1 | 8 | 15 |
| 23 | 5 | 7 | 14 | 16 |
| 4 | 6 | 13 | 20 | 22 |
| 10 | 12 | 19 | 21 | 3 |
| 11 | 18 | 25 | 2 | 9 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது எவ்வாறு எழுதப்பட்டிருக்கும் என்பது ஒரு கேள்விக்குறி இங்கு ஒற்றை எண் பெட்டிகளில் சரி மேல் நடுப்பெட்டியில் ஒன்று எனும் இலக்கத்தையும் பின்னர் சரிவாக மூலை விட்டம் வழியாக "⟶" தொடர்ந்து இலக்கங்களை விட்டுச் செல்தல் அதனிடையில் இலக்கம் மூலை விட்டம் வழியே இருக்குமாயின் அவ் இலக்கத்தை முதல் இட்ட அவ்விலக்கத்தின் கீழே உள்ள பெட்டியில் இடல் ஆனாலும் மூலை விட்டம் வழியே பெட்டி இல்லை எனின் அக் கோட்டின் வழியே மறு புற பெட்டியில் அவ்விலக்கத்தை இடுவதே மாயப்பெட்டியை அமைக்கும் முறையாகும்.

சிவகுமார் சலோமி அரிஸ்மா
தரம் 12
விஞ்ஞானம்



# நவீன வாழ்க்கையோடு இணைந்த விஞ்ஞான வளர்ச்சி

உலகம் மிகவும் வேகமாக இயங்கிக் கொண்டிருக்கின்றது என்பதை உலகில் நாளுக்கு நாள் நடைபெறும் நிகழ்வுகள் நிரூபித்துக்கொண்டே இருக்கின்றன. இன்று கணினி, இணையம் எனப்பல புரட்சிமிகு நிலைகள் ஏற்பட்டதன் விளைவாகவே உலகம் ஒரு சிறிய கிராமமாக உருவெடுத்துள்ளது என்பது யாம் அறிந்ததே.

ஆரம்பக்காலங்களில் மனிதன் காடுகளிலும், குகைளிலும் தன்னுடைய குடியிருப்புக்களை அமைத்துக் கொண்டான். இவ்வாறு வாழ்ந்தவன் படிப்படியாக தன்னுடைய அறிவுக்கூர்மையைக் கொண்டு அதாவது, அவனது சிந்தனா சக்தியை பயன்படுத்தி சிந்திக்கத் தொடங்கினான். அதன் பின்னர் மனிதன் காலப்போக்கில் விவசாயம், கைத்தொழில் என தன்னுடைய சிந்தனையை செயற்படுத்தத் தொடங்கியதோடு, குகைளில் வாழ்ந்த மனிதன் தொடர்மாடிக் கட்டடங்களை அமைத்தும், விவசாயம், கைத்தொழில் என்ற புரட்சிகளுடனும் செயற்படுகின்றான்.

மனிதனுடைய நாகரீக வளர்ச்சிக்கு விஞ்ஞானவிருத்தியே அத்தியாவசியமானதாக விளங்குகின்றது. மனிதனுடைய வாழ்வு இன்று விஞ்ஞானத்தோடு பிண்ணிப் பிணைந்ததாக காணப்படுகின்றது. "விஞ்ஞானம் இன்றி மனிதனுடைய வாழ்க்கை என்பது இல்லை" என்ற அளவுக்கு உலகம் இயங்கிக் கொண்டிருக்கின்றது.



மருத்துவ துறையானது இன்று பாரிய அளவில் முன்னேற்றமடைந்துள்ளது என்றால் அது மிகையாகாது. மனிதன் செய்ய முடியாத பல வேலைகளை இயந்திரத்தின் உதவியோடு மனிதன் சாதித்துக் கொண்டிருக்கின்றான். இதய மாற்றுச் சிகிச்சைகள், கண் மாற்றுச் சிகிச்சைகள், கால் கைகளை பொருத்துதல் போன்றனவாகும். இவ்வாறு மனிதனது மூளையிலிருந்து உள்ளங்கால் வரை விஞ்ஞானம் கையாளப்படுகின்றது. உலகத்தில் விஞ்ஞானத்தின் வளர்ச்சியால் பல நிகழ்வுகள் இடம் பெற்றாலும், அழிவை நோக்கி செல்கின்ற நிகழ்வுகளும் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. மாபெரும் விஞ்ஞான வளர்ச்சியை நோக்கி இன்று உலகம் செயற்பட்டாலும், பாரிய அழிவுகளை தடுக்கவும் முடியாமல் இருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஞ்ஞான மறுமலர்ச்சி முதன்முதலில் ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்டதன் விளைவாக பல அறிஞர்களும், விஞ்ஞானிகளும் தோன்றி பல ஆராய்ச்சிகளை மேற்கொண்டு கண்டுபிடிப்புக்களை கண்டறிந்தனர். இதன் பயனாக தொலைத்தொடர்புசாதனங்கள், போக்குவரத்து ஊடகங்கள், கைத்தொழிற்சாலைகள், வைத்தியசாலைகள், எரிப்பொருட்கள் போன்ற எண்ணற்ற சாதனங்களும் கைத்தொழில்களும் கண்டுபிடிக்கப்பட்டன.

மனிதனுக்கு அன்றாட வாழ்வில் கூட விஞ்ஞானம் தன்னுடைய அரிய பங்களிப்பை ஆற்றுகிறது. தொலைத் தொடர்பு சாதனங்கள் முதல் போக்குவரத்து ஊடகங்கள் வரை விஞ்ஞான வளர்ச்சியானது மனிதனது அதிகமாக நல்ல விடயங்களையே தருகின்றன என்றால் இதில் எந்த வித ஐயமும் இல்லை. தொலைத் தொடர்பு சாதனங்களைப் பொறுத்த வரையில் இன்று உலகின் எந்த மூலையில் என்ன விடயங்கள் இடம்பெற்றாலும் அதனை உடனுக்குடன் அறியக்கூடியதாக உள்ளது.

மனிதனுடைய விஞ்ஞான வளர்ச்சியில் மிக முக்கியம் வகிப்பது கணினி ஆகும். இந்த கணினி மூலம் இன்று பல விடயங்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. அவற்றில் நல்ல பல விடயங்கள் இடம் பெற்றாலும் நீக்கப்படக்கூடிய சில விடயங்களும் இடம் பெறுவதை காண முடிகிறது. இணையத்தினை எடுத்து நோக்குகின்ற பொழுது இணையத்தளங்கள் வாயிலாக தகவல்களைப் பெறவும் வர்த்தகம் செய்யவும், தகவல்களை பரிமாற்றிக் கொள்ளவும் முடிகிறது. இதை தாண்டி மரணங்களும் சிலவேளை இணையத்தளங்கள் ஊடாக இடம்பெறுகின்றன.

இணையத்தளங்களின் மூலம் பல அழிவுகரமான விடயங்களும் இடம்பெறுகின்றன. குறிப்பாக இன்றைய காலகட்டத்திலே மாணவர்களை அதிகமாக தன் பக்கம் தீய விடயங்களுக்காக இழுக்கும் விடயங்கள் ஆங்காங்கே காணப்படுகின்றன. இதனால் மாணவர்களின் கல்வி நிலை பாதிக்கப்பட்டு அவர்களது சமூக நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டு வாழ்க்கையே திசைமாறிச் செல்கின்ற ஒரு நிலைப்பாடு காணப்படுகின்றது. இவ்வாறு விஞ்ஞான வியப்பில் அமிழ்ந்து ஆனந்தம் கொள்ள வழியின்றி விழிப்பதையும் பல சந்தர்ப்பங்களில் காண முடிகின்றது.

விஞ்ஞானத்தின் விருத்தி என்பன ஏற்படாவிட்டால் மனிதனால் பல விடயங்களையும் சாதித்திருக்க முடியாது. ரைட் சகோதரர்களால் விமானம் கண்டுபிடிக்காவிடில் வெளியூர் பயணங்கள், வெளிநாட்டுத்தொடர்புகள் என்பவை கட்டுப்பட்டே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்திருக்கும். குதிரை, மாட்டுவண்டி என்ற மனிதனுடைய போக்குவரத்துக்கள் இன்று பில்லியன் கணக்கில் கார்களை சௌகரியமான முறையில் உற்பத்தி செய்ய விஞ்ஞானமும் வளர்ந்து விட்டது. மனிதனும் முன்னேறிவிட்டான். இது மட்டுமின்றி போர் ஆயுதங்களின் உற்பத்தியும் அதிகரித்துச் செல்லும் ஒன்றாகவே காணப்படுகின்றது. இது மட்டுமல்ல தொலைக்காட்சி, தொலைபேசி, வானொலி போன்ற பல கருவிகள் மூலம் நல்ல செயற்பாடுகள் இடம் பெற்றாலும், சில மனிதர்கள் இதனை தவறான விடயங்களுக்காக செயற்படுத்துகின்றனர். தொலைக்காட்சிகளிலும் இவ்வாறான தவறான சில விடயங்களை கைக்கொள்ளவும் முயற்சிக்கின்றனர்.

எனவே மனிதனுடைய வாழ்வானது விஞ்ஞானத்தின் விருத்தியோடு பிண்ணிப் பிணைந்த ஒன்றாகக் காணப்படுகின்றது. அவற்றை நல்ல முறையில் பயன்படுத்தி நன்மைகளை பெற்றுக் கொள்வது தத்தம் கரங்களிலேயே உள்ளது.

மகேந்திரன் கிருஷாந்தினி
தரம் 12
கலை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய தொழினுட்ப முன்னேற்றத்துக்கு அடித்தளமிட்ட மாமனிதர்

உலகின் வல்லரசு நாடுகளான அமெரிக்கா போன்ற நாடுகளை போல இந்தியாவும் இன்று ஏவுகணைகளை பரிசோதித்துப் பார்க்கும் அளவுக்கு ஆயுதப் போட்டியிலும், நவீன தொழினுட்பத்திலும் முன்னணி வகிக்கின்றது. உலகில் தொழில் நுட்பத்தில் வளர்ச்சி கண்டுள்ள நாடுகளில் இந்தியா நான்காவது இடத்தை வகிக்கின்றது.

நவீன தொழிநுட்பத்துறையில் இத்தகைய முன்னேற்றங்களை கண்டுள்ள இந்நாடு முதலில் விண்ணிற்கு செய்மதியை தான் அனுப்பியது. நவீன தொழில்நுட்பம் மாத்திரமின்றி பல்வேறு தொழிற்துறைகளிலும் அபிவிருத்தி அடைவதற்கான அடித்தளம் இந்தியா சுதந்திரம் அடைந்த பதினான்கு வருடங்களுக்குள் இடப்பட்டது. இத்தகைய அபரமிதமான வளர்ச்சிக்கு அடிதளமிட்டவர் உலக நாடுகளில் இன்றும் புகழப்படும் ஜவஹர்லால் நேரு என்பவராவார்.



இவர் அலகபாத்தில் 1899 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் பதினான்காம் திகதி பிறந்தார். மேற்கத்தைய நாட்டில் கல்வி பயின்று, இந்தியாவுக்கு வந்த நேரு இந்தியாவை இடதுசாரி கண்ணோட்டத்திலேயே பார்த்தார். நேருவின் இத்தகைய பார்வைக்கு காரணம் அக்காலத்தில் இங்கிலாந்து போன்ற செல்வந்த நாடுகளில் கல்வி பயின்றோர் தனவந்தருக்கு எதிராக இடதுசாரிக்கொள்கையை கட்டி எழுப்பியிருந்தமை ஆகும்.

இவரின் மனைவி கமலா. இவர்களின் திருமணம் 1916.02.08 அன்று நிகழ்ந்தது. இவரின் திருமணம் இந்திய சம்பிரதாய முறைகளுக்கு அமைவாக நிகழ்ந்தது. ஆனால் நேருவினால் இந்து சம்பிரதாய, கலாசார பண்புகளில் சில காலம் மட்டுமே கழிக்க முடிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1ம் உலக யுத்தத்தின் முடிவின் போது இந்திய மக்களிடையே சுதந்திரம் பற்றிய எண்ணக்கரு மேலோங்கி இருந்தது. சுதந்திரம் வேண்டி நேருவின் தந்தை மோதிலால் நேரு சென்ற பாதையை பின்தொடர்ந்த இவர் காங்கிரஸ் அரசியலுடன் ஒன்றிணைந்தார். இதன் மூலம் 1920 ம் ஆண்டு இந்திய காங்கிரஸ் தலைவராக நியமனம் பெற்றார். பின்னர் 1926 ம் ஆண்டுகளில் இங்கிலாந்து, சுவிட்சர்லாந்து, பிரான்ஸ் மற்றும் ஜேர்மன் முதலான நாடுகளிற்கு சுற்று பயணம் மேற்கொண்டார்.

அஹிம்சை வாதியான மகாத்மா காந்தியுடன் நாடு முழுவதும் வலம் வந்து மக்களுடன் உரையாடினார். வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளினால் துயருற்ற மக்களுக்கு தலைமைத்துவம் வழங்கினார். இறுதியில் அலகபாத் நகர நிர்வாக திணைக்களத்தின் தலைவராக தெரிவு செய்யப்பட்டார்.

இதனையடுத்து சோவியத்யூனியன் மற்றும் மேற்கிந்திய நாடுகளுக்குச் சென்றார். நேரு மீண்டும் இந்தியாவுக்கு திரும்பிய போது அவரின் தந்தை டொமினிக் அந்தஸ்துடனான நிர்வாக பொறுப்பை ஏற்றுக்கொள்ள விருப்பம் தெரிவித்திருந்தார். இதனை விரும்பாத நேரு முழுமையான சுதந்திரத்தை வேண்டிய சுதந்திர போராட்டத்தில் ஈடுபட தொடங்கினார்.

இத்தகைய போராட்டங்களின் பின் 2ம் உலக யுத்தத்திற்கு பின்னரும் இந்தியாவிற்கான சுதந்திரத்தை தட்டிக்கழிக்க முடியாது என பிரித்தானிய அரசு எண்ணியது. இதன் காரணமாக சுதந்திரத்திற்கான அரசியல் யாப்பு உருவானது. இதன் பின்னர் நேரு அந்நாட்டில் முதலாவது பிரதமராக தெரிவானார்.

இந்தியாவில் மறுமலர்ச்சிக்கான அரசாங்க தீர்மானங்களை நேரு மேற்கொண்டார். காணி சீர்த்திருத்தம், உட்கட்டமைப்பு வசதிகள், மின்சார அபிவிருத்தி முதலான விடயத்தில் முக்கிய தீர்மானங்களை மேற்கொண்டு நாட்டைக் கட்டியெழுப்பினார்.

இந்தியாவின் தொழினுட்ப முன்னேற்றத்திற்காக அயராது பாடுபட்ட இம் மாமனிதர் ஆயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்து நான்காம் ஆண்டு வைகாசி மாதம் இருபத்து ஏழாம் திகதி டில்லி நகரில் இறைவன் அடி சேர்ந்தார்.

சுரேஷ்குமார் சோபனா
தரம் 12
விஞ்ஞானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய மாணவர்கள் எதிர்நோக்கும் சவால்கள்

இன்றைய மாணவர்கள் எதிர்நோக்கும் சவால்கள் யுகத்தில் வாழ்ந்துக் கொண்டிருக்கின்றோம். இந்த யுகமானது ஏராளமான சவால்களையும், பிரச்சினைகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இச்சவால்களுக்கும், பிரச்சினைகளுக்கும் முகங்கொடுக்க முடியாமல் திணறுவது பெரிதும் மாணவர்களே ஆவர். தற்கால மாணவ சமூகமானது உடல் ரீதியான, உளரீதியான பல சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது என்றால் அது மிகையல்ல. இந்நாட்டின் எதிர்கால தலைவர்களே இன்றைய மாணவச் செல்வங்களே, எனவே இனி நாம் மாணவர்கள் எதிநோக்கும் சவால்களைவ விரிவாகப் பார்ப்போம்.

மாணவர்கள் எதிர்நோக்கும் சவால்களுள் முதன்மையானது பாதுகாப்பு இன்மையாகும். இன்றைய உலகத்தை பொறுத்தவரையில் யாரை நம்புவது? யாரை நம்பாமல் இருப்பது? என்பதே தெரியாது, ஏனெனில் ஏமாற்றுபவர்கள் கூட நல்லவர் போல வேடம் தரித்தே ஏமாற்றுகின்றார்கள். மட்டுமின்றி இவற்றிக்கு எடுத்துக்காட்டாக தினந்தோறும் பத்திரிக்கையில் வெளிவரும் செய்திகளைக் கூறலாம். அந்த ஒவ்வொறு செய்தியும் நம்மை நிலைக்குலைய வைக்கின்றது. பாதுகாப்பு இன்மைக்கு முக்கிய காரணம் பெற்றோர் வெளிநாடுகளுக்கு செல்வதனால் பிள்ளைகளுக்கு பாதுகாப்பு வழங்க உறவினர்கள் இல்லாத விடத்து வெளிநபர்களிடம் ஒப்படைத்து விட்டு செல்லும் போது பிள்ளைகளுக்கான பாதுகாப்பு முழுமையாக கிடைக்கும் என்று நம்பமுடியாது. இந்த பாதுகாப்பு இன்மையே மாணவர்களின் சவால்களுக்கு அடித்தளமாக அமைகின்றது. இது பிறரால் மாணவர்கள் எதிர்நோக்கும் சவால்களாகும்.

சில சந்தர்ப்பங்களில் மாணவர்களே சவால்களையும், பிரச்சினைகளையும் உருவாக்கிக் கொள்கின்றார்கள். எவ்வாறெனின் மாணவர்களுடைய பொறுப்பும் கடமையும் எதுவெனில் கல்விக் கற்பதாகும். ஆனால் இந்நவீனக் காலத்தில் இந்நிலை மாற்றமடைந்து அவர்களுடைய பொறுப்பும் கடமையுமாக கருதுவது பொழுதுப்போக்கு சாதனங்களையும். களியாட்டங்களையும், விளையாட்டுக்களையுமே என்ற நிலை உருவாகிவிட்டது. எவ்வாறெனின எடுத்துக்காட்டாக ஒரு மாணவன் நன்றாகப் படிப்பான் ஆனால் அவன் ஏழை ஆகும். அதே வகுப்பைச் சேர்ந்த ஒருவன் பணக்காரன் ஆனால் அவனைப்போல் படிக்கமாட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் இவர்கள் இருவரும் நெருங்கிய நண்பர்களாவர். பணக்காரப் பையன் பொழுதுப் போக்கு சாதனங்களை பயன்படுத்துவதோடு மட்டுமல்லாமல் அதைப் பற்றியும் மற்ற மாணவரிடம் கூறுவான். இதனால் அவனுக்கு கல்வியின் மீதிருந்த நாட்டம் குறைந்து பொழுதுப்போக்கு சாதனம் பக்கம் நாட்டத்தை செலுத்துவான். எனவே மாணவர்களின் கல்விக்கு இவ்வாறான சாதனங்களும், செயல்களும் பெரும் சவாலாக அமைகின்றது இது மாணவர்களுக்கு மட்டுமல்ல, பெரியோர்களுக்கும் ஒரு சவாலான விடயம் தான். இருப்பினும் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகுபவர்கள் மாணவர்களே.

கட்டிளமைப் பருவத்தைச் சேர்ந்த மாணவர்களே பெரிதும் சவாலுக்கு உட்படுகின்றனர். அந்த பருவத்தில் நிறைய சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்படுகின்றனர். இது அவர்களுடைய கல்விக்கு மட்டுமல்ல எதிர்கால வாழ்கைக்கும் மாபெரும் சவாலாக அமைகின்றது.

நாளைய தலைவர்கள் என்பதை உணர்ந்து மாணவர்கள் சவால்களுக்கு எவ்வாறு முகங்கொடுக்கலாம் என்பதை பழக்கப்படுத்திக் கொள்வது மிக முக்கியமாகும். பெற்றோர்கள் மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியது அவசியமாகும்.

அனுஷாந்தினி
தரம் - 12
கலை




illustrations of.com #1257854



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாறாத வடு

"இன்று எத்தனை மணிக்கு என்னைச் சந்திப்பாள்?" அவன் கேட்டான். "பள்ளி முடிந்ததும் வழமையான மரத்தடிக்கு வருகிறேன்" என்று கூறியபடியே கைத்தொலைபேசியை வைத்துவிட்டுப் புத்தகப்பையை தோளில் போட்டு கொண்டு பாடசாலைக்கு புறப்பட்டாள். பாடசாலை விட்டுவர நான்கு மணியாகும் என்று அன்னைக்குப் பொய்யுரைத்து காதலனுடன் சுற்றித்திரியும் பதினோராம் வகுப்பு மாணவி அவள்.

தினமும் இப்படித் தான் பெற்றோரை ஏமாற்றி "படிக்கிறேன்", "வகுப்பிற்குச் செல்கிறேன்" என்று கூறிவிட்டு அவனுடன் திரிவாள். அவள் மனதில் அவன் தான் உயிர். அவனே உலகம். அவனும் இவளுக்குப் பொருட்களை வாங்கிக் கொடுத்து மகிழ்வித்தான்.

இது எப்படி ஆரம்பித்தது? இவள் பிறந்தநாளுக்குப் பெற்றோர் ஒரு கையடக்கத்தொலைபேசியை வாங்கிக் கொடுத்தனர். இது தான் அழிவின் ஆரம்பம். இளம்பராயத்தவளான அவளது மனம் அவ்வயதிற்கே உரிய முறையில் சமூக வலைத்தளங்களில் நாட்டம் கொண்டது. இதனால் அவள் instagram ஐப் பயன்படுத்தத் தொடங்கினாள். அன்றொரு நாள், தன் தொடர்புகள் பட்டியலையும், அவர்கள் மேற்பதிவு செய்திருந்த படங்களையும், பார்த்துக் கொண்டிருந்த போது தான் இவனது படத்தைக் கண்டாள்.

அவனது அழகில் மயங்கினாள். அவனுடன் குறுந்தகவல் மூலம் தொடர்பு கொண்டது தான் இப்போது இந்தளவுக்கு வளர்ச்சி பெற்றுள்ளது. அவனுக்கும், அவளுக்கும் இடையில் நிலவிய இந்த உறவைத்தான் இவள் "காதல்" என்று நம்பினாள். பெற்றோர் வழங்கிய சுதந்திரதை அவனுக்காக அர்ப்பணித்தாள்.

எதிர்காலத்தில் அவன் தான் தன்னைக் கட்டிக்காப்பான் என்ற நம்பிக்கை அவளுக்கு. அவனும் அவளுடன் இனிமையாக காலத்தை கடத்தினான். சாதாரண தர பரீட்சையும் வந்தது. படிக்க வேண்டிய காலத்தையெல்லாம் குறுந்தகவல் அனுப்புவதில் வீணே கழித்தாள். காலம் உருண்டோடியது. சாதாரண தர பரீட்சையில் ஓரிரண்டு பாடங்களில் சித்தி பெற்று உயர்தரத்தில் கால்பதித்தாள். ஒரு நாள் இருவரின் சந்திப்பின் போது, அவளின் நீண்ட நாள் கனவுகள் நனவாகத் தொடங்கின. வழமை போல் மரத்தடிக்கு வந்த அவன் "நாம் இருவரும் திருமணம் புரிவோமா?" என்று கேட்டான். அவளும் உடனடியாகவே சம்மதம் தெரிவிக்க. இருவரும் பெற்றோர்களுக்குத் தெரியாமல் புறப்படுவதாய் முடிவெடுத்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பத்தில் இனிமையாய் இருந்தது இல்வாழ்வு. பதிக்குப் பத்தினி, பத்தினிக்குப் பதி என்று அன்னியோன்யமாய் வாழ்ந்தனர். ஆனால் காலம் செல்லச் செல்ல அவனது உண்மையான சொரூபம் வெளிச்சத்திற்கு வரத்தொடங்கியது. அவன் போதைப் பொருள் பயன்படுத்துவதும், வேறு பெண்களுடன் தொடர்பு கொண்டிருப்பதும் அவளுக்கு தெரிய வந்தது. இது பற்றி அவள் வினவத் தொடங்க அவளை அவன் துன்புறுத்தத் தொடங்கினான். அவனது அராஜகம் நாளுக்கு நாள் அதிகரித்தது.

ஒரு நாள் அவள் காலையில் உறக்கம் கலைந்து எழும் போது அவனைக் காணவில்லை. காவற்றுறையினரிடம் முறையிட்டும் எப்பயனும் கிடைக்கவில்லை. போனவன் திரும்பவில்லை. அவளோ இருபதாம் அகவையில் கணவனை இழந்தாள். அன்றொரு நாள் வரமாய் கழுத்தில் ஏறிய மாங்கல்யம் இன்று கருங்கல்லாய் கழுத்தில் கனத்தது.

ஊரில் அனைவரும் தூற்றினர். தவறிழைத்தவன் கணவன். ஆனால் அவப்பெயர் பெற்றது அவள். வேறு வழியின்றி பெற்றோரிடம் சென்றாள். தந்தை தலையில் கை வைத்த படியும், தாய் தலைவிரி கோலமாகவும் இருந்தனர். ஒரே புதல்வியை இழந்து அவமானப்பட்ட துன்பம் அவர்கட்கு. பெற்றோரை இத்தகு நிலைக்கு ஆளாக்கிய குற்ற உணர்வும், சுற்றத்தாரின் பழிச் சொல்லும் அவளை வாழ்வைத் துறக்கத் தூண்டின.

பலமுறை தற்கொலை முயற்சியில் ஈடுபட்ட பின்னர் உளவள ஆலோசனை பெற்று, வாழ்வில் இனியும் சாதிக்க இயலும் என்று உணர்ந்தாள். கல்வி கற்று, மானத்தோடு சிறப்பாக வாழவேண்டும் என்ற அவளது கனவுகள் சிதைந்தன. பெற்றோரின் மகளாய் அவர்கட்கு சிறப்பைப் பெற்றுக் கொடுப்பது வெறும் கனவாகவே போயிற்று.

இருப்பினும், முடிந்தது முடிந்ததே. அது பற்றி எண்ணி வாழ்வை சிதைப்பதில் அர்த்தமில்லை என்பதையும் அவள் உணர்ந்தாள்.

இன்று அவள் ஒரு தொழில்நுட்பவியலாளராக பணி புரிகிறாள். எவ்வளவு தான் வளர்ந்தாலும் இளமையில் இழைத்த தவறு ஒரு மாறாத வடுவாக அவள் வாழ்வில் நிலைத்திருக்கும்.

சிவதாசன் கவிதா
தரம் 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருடிய பணம்

அந்த அபார்ட்மென்டில் மொத்தம் 32 வீடுகள் அந்த வீடுகளில் இருக்கும் குழந்தைகள் கீழே உள்ள இடத்தில் விளையாடுவார்கள். அதிகம் சண்டை போடாமல் சமத்தாக விளையாடுவார்கள். அந்தக் குடும்பங்களிலுள்ள பெற்றோர்களில் சிலர், அம்மா அப்பா இருவருமே வேலைக்குச் செல்பவர்கள். சில அம்மாமார்கள் வீடுகளில் இருந்தனர்.

அன்று ஞாயிற்றுக்கிழமை மாலை மணி ஆறாகி விட்டதால் அங்கு விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகள் தங்கள் வீட்டை நோக்கிச் சென்றார்கள். 'கௌதம்', அந்த அபார்ட்மண்டில் 2வது மாடியில் 3ம் நம்பர் வீட்டில் இருந்தான். அவன் பக்கத்து வீட்டில் அவனுடன் பள்ளியில் படிக்கும் 'தனுஷ்' இருந்தான். இருவரும் இணை பிரியாத தோழர்கள்.

அந்த ஞாயிற்றுக்கிழமை கௌதம் "டேய் தனுஷ் எங்க வீட்டு கம்ப்யூட்டரில் ஏதாவது விளையாடுவோமா?" என்று கேட்டான். சிறிது நேரம் யோசித்த தனுஷ் "உங்க வீட்டிலே உங்க அம்மா, அப்பா, தாத்தா, பாட்டி, தங்கை எல்லோரும் இருப்பாங்களே, ஒண்ணும் சொல்ல மாட்டாங்களா?" என்றான். "அம்மா, அப்பா, தாத்தா, பாட்டி யாரும் வீட்டில் இல்லை. யாரும் ஒண்ணும் சொல்ல மாட்டாங்க. வாடா ப்ளீஸ்" என்று கூப்பிட்டான் கௌதம். "உன் தங்கை சொல்லிக் கொடுத்துட்டா", "அவ எப்ப பார்த்தாலும் ஏதாவது படிச்சிக்கிட்டே இருப்பா பயப்படாம வா" என்று கௌதம் தைரியம் கொடுக்க, தனுஷ் அடி மேல் அடி வைத்து மெதுவாக வந்தான்.

அங்கே கௌதமின் தங்கை சுதா "ஹாய் தனுஷ் அண்ணா! வாங்க" என்று பெரிய மனுஷி போலக் கூப்பிட்டாள். தனுஷும், கௌதமும் 8ம் வகுப்பு படிக்கிறார்கள். சுதா 5ம் வகுப்பு படிக்கிறாள். அவள் படிப்பில் படுசுட்டி. பள்ளியில் இருந்து வந்தவுடன் வீட்டு வேலையை செய்வாள். பின்னர் தான், வேறு வேலை செய்வாள். ஆனால் கௌதம் அவளுக்கு நேரெதிர். "மாலை முழுவதும் விளையாட்டு" னு பாரதியார் சொல்லியிருக்கிறார் என்பான். அதே பாரதியார் "காலை எழுந்தவுடன் படிப்பு" னு சொல்லியிருப்பதை மறந்துவிடுவான். தனக்கு எது சாதகமாக இருக்கிறதோ அதை மட்டும் தவறாமல் எடுத்துக் கொள்வான். அவனுடைய அப்பா, அம்மா எவ்வளவோ சொல்லி பார்த்தார்கள் சில சமயம் கேட்டான். பிறகு தன் விருப்பப்படியே நடப்பான். அவன் புத்தகத்தை எடுத்து படிக்காமலே 80 புள்ளிகள் வாங்கி விடுவான். அதனால் அவனுடைய பெற்றோரும் எப்படியோ புள்ளிகள் வாங்கி விடுகிறான் என விட்டு விட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதா டி.வி.யில் வேறு எந்த நிகழ்ச்சியும் பிடிக்காததால் கார்ட்டூன் பார்த்துக் கொண்டு இருந்தாள். மற்றோர் அறையில் கௌதமும், தனுஷும் கம்ப்யூட்டரில் கேம் விளையாடிக் கொண்டிருந்தனர். "டேய் தனுஷ் நம் பள்ளியின் பக்கத்திலே ஒரு பொம்மை கடை இருக்கே, அதிலே ஒரு பைனாகுலர் பார்த்தேன். அதை வாங்கனும்டா" என கௌதம் சொல்ல "ஆமாம்டா, எனக்கும் ஆசையா இருக்கு ஆனா, அதன் விலை நூறு ரூபாய் இருக்குமே. பணத்துக்கு என்ன செய்றது? என அப்பாவியாக கேட்டான் தனுஷ். "அம்மா கிட்ட ஏதாவது பொய் சொல்லி காசு கேட்கலாம்", "என்ன பொய் சொல்றதா? நான் மாட்டேன்" பயந்தான் தனுஷ்.

"பின்னே என்ன செய்வது?" என்று கேட்டவன் சிறிது நேரத்திற்கு பிறகு "ஆ... அது தான் நல்ல ஐடியா" என்றான். "என்ன ஐடியா? சொல்லேன்", "எங்க அப்பா மார்க்கெட்டிலிருந்து வந்தவுடன் சட்டையைக் கழற்றி மாட்டுவார். அப்போ அவர் சட்டைப் பையிலிருந்து யாருக்கும் தெரியாமல் 100 ரூபாய் எடுக்க போறேன்." என்று திட்டத்தை சொன்னான். "டேய் திருடப் போறியா? யாராவது பார்த்துட்டா....", "யாரும் பார்க்க மாட்டாங்க அதோட எங்க அப்பாவுக்குக் கணக்கும் தெரியாது." என்று தான் திருடப் போவதை தீர்மானமாகச் சொன்னான்.



மறுநாள் பள்ளி முடிந்ததும் கௌதம் அந்த பொம்மைக் கடையில் இருந்தான். அங்கு ஒரே கூட்டம். கடைக்காரரும், மற்றவர்களும் கௌதமை ஏதோ திட்டிக் கொண்டிருந்தனர். "என்னப்பா தம்பி, யாரை ஏமாத்தப்பாக்கிறே? மரியாதையா காசை எடு" என்று கௌதமை அடிக்கக் கையை ஓங்கிக் கொண்டு இருந்தான். அப்போது அங்கு சுதா தன் தாத்தாவுடன் வந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாத்தாவயும் தங்கை சுதாவயும் பார்த்தவுடன் கௌதம் "ஓ" என்று அழத் தொடங்கினான். "தாத்தா, நான் இந்த பைனாக்குலரை வாங்க கையில் எடுத்தேன். அது கீழே விழுந்து உடைந்து விட்டது. நான் கொடுத்த பணமும் விளையாட்டுக்கான பணமாம். அதனால் இதற்கான பணத்தை கொடு என அடிக்க வாறார்." என்றான். "கௌதம் எனக்கு எல்லா விஷயமும் தெரியும்" என்று தாத்தா சொன்னார். "ஆமாம் கௌதம் நேத்து நீயும், தனுஷும் பேசியதைக் கேட்டு உன் தங்கை எல்லா விஷயமும் சொன்னாள். நான் தான் அந்த விளையாட்டுப் பணத்தை உன் அப்பாவின் பையில் வைத்தேன். நீ பதற்றத்தில் அந்த பணத்தை கொண்டு வந்து விட்டாய். இது எல்லாம் உன்னை திருத்துவதற்கான நாடகம் தான்." என்றார்.

பின்னர் அவன் தன் தவறை உணர்ந்து மன்னிப்பு கேட்டான். "சே, நான் ஏன் இப்படி நடந்து கொண்டேன்? நமக்கு எந்த நேரத்தில் என்ன தேவை என்று அப்பா, அம்மாக்கு தெரியாதா? நம் தங்கைக்கு நல் வழிகாட்டியாக, நல்லவனாக நடக்க வேண்டும்" என மனம் திருந்திய கௌதம் தன் உள்ளத்தினுள் உறுதி கொண்டான்.



சந்திரகுமார் ஹேஸ்ருதி
தரம் 12
விஞ்ஞானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனிதநேயம்

பனிமூட்டம் சூழ்ந்திருந்த அவ்வொற்றையடி பாதையின், ஒரு தூரத்திலிருந்து, அக்காரிருளினில் பிரகாசமான ஒளியொன்று தென்பட்டது. கையில் 'டோர்ச்லைட்'டுடன் ஒரு உருவம் குடுகுடு வென விரைந்தது. ஐந்து மணி பஸ்ஸை நெருங்கும் வீறுடன் நடந்தது. அது வேறு யாருமல்ல அவ்வொற்றையடிப் பாதையின் முடிவில் ஒரு ஓட்டை வீட்டில் வாழும் கணேஷனே அவன். பழைய உடையாயினும், கசக்கி அணிந்து, அவ்வுடலை விறைக்கும் குளிர்ந்த நீரில் சோம்பல் பாராது குளித்து, கையில் ஒரு பழைய குடையை ஏந்திய வண்ணம் கணேஷனின் பயணம் தொடர்ந்தது. அவன் வேலைக்குச் செல்லும் அந்த தனியார் கம்பனிக்கு ஒரு நாளாயினும் நேரம் தவறி தாமதமாக சென்றதாக சரித்திரமே இல்லை.

எவ்வாறோ ஐந்து மணி பஸ்ஸும் வந்துவிட்டது. கணேஷனின் கண்களோடு பேரூந்தின் ஆசனங்களை நோக்கியவாறு, மனதில் இன்றைக்கும் நின்றுக் கொண்டு தான் போகணுமோ? என எண்ணிய வண்ணமே, பேரூந்தினில் ஏறினான். நல்லவேளை, பேரூந்தின் இடப் பக்கத்தில் கடைசி ஆசனத்துக்கு முன்னுள்ள ஆசனம் கணேஷனை வாவென்று இருகைகளையும் அசைத்தவண்ணம் கூப்பிட்டது. கொஞ்சநஞ்ச தூரம் இல்லை. 2 மணித்தியாலங்கள் பயணிக்க வேண்டும். நின்றுக்கொண்டு எவ்வாறு போகமுடியும்? விரைந்து சென்று இருக்கைகளில் அமர்ந்தான் அவன். கணேஷனின் வீட்டிலிருந்து, பிரதான வீதிக்கு வரும் குறுக்குப்பாதைக்கு பதினைந்து நிமிடங்களே போதுமானது. ஆனால் அந்தக் குறுக்குப் பாதையில் வந்தால், எங்கு ஆசனம் கிடைக்காது போய் விடுமோ என்ற பயத்தில், அவன் ஐந்து மணி பஸ்ஸிற்காக நான்கே கால் மணியிலிருந்து ரோட்டில் நிற்பான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் தொழில்புரிவது நகரிலுள்ள ஒரு பிரபல பிஸ்கட் கம்பனியிலாகும். பஸ்ஸிலிருந்து இறங்கிய உடனே, ஒரு 10 நிமிட குறுகிய நடையின் பின்னர் முதலில் தென்படுவது ஏதோ ஆங்கில பெயர் பொறித்த கட்டடத்தின் உயரம் வானத்தை எட்டுமளவு உயர்ந்த அந்த ஏழடுக்கு மாளிகையே, நாட்டிலேயே உயர்ந்த கட்டடம் இதுவாகத்தான் இருக்க முடியும் என்பது கணேஷனின் எண்ணம். இந்த நகரைத் தவிர வேறெந்த ஊரையும் அறியாத பேதை அவன். பஸ்ஸிலிருந்து, இறங்கி கணேஷன் நிற்க ஆரம்பித்தா-னெனின், நின்றுக்கொண்டே இருக்க வேண்டியது தான். உட்காருவதற்கு நேரமும் கிடைக்காது, உட்கார்ந்து செல்லும் வேலையையும் அவன் செய்யவில்லை. என்ன! சாப்பிடும் நேரத்தில் மாத்திரம் உட்காருவதற்கு பதினைந்து நிமிடம் போல் நேரம் கிடைக்கும். ஆகவே, உட்காருவதற்கு பஸ்ஸில் ஆசனம் கிடைத்தால் மட்டுமே சாத்தியம்.

கணேஷன் பஸ்ஸில் இருக்கின்றானேத் தவிர அவனது, எண்ணங்களை சுமந்த மனமோ, இங்கில்லை. சினிமாப் படங்களில் வரும் காட்சிகளைப் போல், அவன் பஸ்ஸில் பயணித்த பாதையினூடாக இவனது நினைவலைகள் பின்னோக்கி பயணித்தது. அப்பயணம் அவன் நடந்துவந்த அந்த குறுகிய செம்மண் பாதையிலும் தொடர்ந்தது, இறுதியில் தன் குடிலை அடைந்தது, அங்கு செவ்வனே, பிண்ணிய பாயில் படுத்துறங்கும் தன் மகளின் முகத்தில் முடிந்தது. கவிதா நேற்று செய்தக் காரியமே, கணேஷனை இன்று திரும்பி நினைக்க வைத்தது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை. கணேஷன் வாரம் முழுவதும் எதிர்பார்த்து காத்திருப்பது இந்நாளுக்காகவே ஆகும். ஞாயிற்றுக் கிழமையானால் போதும் தன் ஒரு கையில் தன் மகளைத் தூக்கிய வண்ணம், மற்றக் கையில் பையொன்றையும் எடுத்த வண்ணம் சந்தைக்கு புறப்பட்டுவிடுவான். கணேஷன் சம்பாதிக்கும் பணத்தின் அரைவாசி தன் கடனைக் கட்டவே அவனுக்கு சரியாகிவிடுகிறது. மிச்சப்படும் கொஞ்சநஞ்சப் பணத்தை வைத்தே முழு மாதத்தையும் அவன் ஓட்டவேண்டும். ஆனால் தன் ஆசை மகள், ஆசைப்பட்டுக் கேட்ட பொருளை மாத்திரம், மறு கணம் யோசிக்காது உடனே வாங்கித் தந்துவிடுவான் நேற்றும் அப்படித்தான். எவ்வாறோ தன் தந்தையை பூசி மெழுகி, தனக்கு பிடித்த ரோஸ் நிறத்தில் ஒரு அழகிய சற்று விலையுயர்ந்த ஆடையொன்றையும் வாங்கிக் கொண்டாள்.

"இவளுக்கு வாங்கிக் கொடுக்காம வேறு யாருக்கு வாங்கிக் கொடுக்கப் போறே" என மனதில் எண்ணிக்கொண்டு வாங்கிக் கொடுத்து விட்டான். தன் மகளைத் தன் தோலிலிருந்து கீழே இறக்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்துவிட்டு, காய்கறி வாங்குவதில் கவனம் செலுத்தி விட்டான் கணேஷன். சிறிது நேரத்தில் தன் மகளின் நினைவுகள் வரவே, சுற்றிலும் தேடிப்பார்த்தான். தூரத்தில் ஒரு சிறிய தன் வயதுச் சிறுமியுடன் கதைத்துக் கொண்டிருப்பதை பார்த்தான். அச்சிறுமியின் உடம்பில் கிழிந்த ஒருத் துணித்துண்டொன்றே சுற்றப்பட்டுக் கிடந்தது. தன் மகளோ அவள் வாங்கிய புது ஆடையை அவளுக்கு கொடுத்திருந்தாள். அவ்வுடையை கையில் ஏந்திய வண்ணம், நன்றி சொல்லும் விதமாக புன்முறுவலை வெளிக்காட்டினாள் அச்சிறுமி. மற்றைய பெற்றோரைப் போல் அவள் மீது கோபம் கொள்ளாது, தன் மகளின் உயர்ந்த குணத்தை எண்ணி அவன் பெரிதும் ஆனந்தம் கொண்டான். தன் மகளைத் தன் தோலில் தூக்கி வைத்து முதுகைத்தட்டிக்கொடுத்தான்.



தன் மகளைப் பற்றிய சிந்தனையில் அவன் தன்னையும் மறந்துத் தூங்கிவிட்டான். பாதி வழியில், திடுக்கிட்டு எழுந்த அவன், வழமைப்போல் நெரிசலுடன் இருந்த பஸ்ஸை நோக்கினான். அதன் மத்தியில் சிக்கித்தவித்த அந்தக் கிழவியையும் உற்று நோக்கினான் அவன். எங்கு தான் எழுந்து இடம் கொடுத்தால், கடைசிவரை நின்றுக் கொண்டுத்தான் வரவேண்டுமே என்று தன்னை பற்றி சிறுத்துளியேனும் யோசிக்காது, பஸ்ஸில் அனைவரும் நமக்கென்ன என இருந்த நேரத்தில் அக்கிழவிக்கு எழுந்து இடம் கொடுத்தான். ஒரே இரத்தம் தானே ஓடும் தந்தைக்கும் மகளுக்கும்!

ரபிக்ஷினி முரளிதரன்
தரம் 12
விஞ்ஞானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாதிமா சஹாரா ராஸிக்
தரம் - 7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தர்மலிங்கம் கோகிலா
தரம் - 12
விஞ்ஞானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சஹிலா பரீட்
தரம் - 7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாத்திமா சுஹா டீன்
தரம் - 7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனைச் சிற்பிகளின்
சீரிய ஆக்கங்கள்
படிப்பீர்...
பயனுறுவீர்!

கல்விப் பணிப்பாளரின்
கருத்துரைக் கட்டுரை
காண்பீர்...
கவனம் செலுத்துவீர்!

அன்பிற்கினிய ஆசான்...
அருள்மிகு நெஞ்சர்...
அறிவுசார் ஆக்கம்
அவாவுவீர்...
ஆனந்திப்பீர்!

இதழாசிரியர்
மீரா அல்பிரட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிந்துக் கொள்வோம் தடங்காட்டியை தமிழில்

## GPS (Global Positioning System)

GPS இன்று அனைத்து தொழினுட்பத்திலும் பயன்படுத்தப்படுகிறது. இது ஒரு புவியியம் காட்டும் அமைப்பு இதன் மூலம் நாம் இருக்கும் இடத்தை அறிந்து கொள்வதற்கு மற்றும், நாம் செல்ல வேண்டிய இடத்தின் வழி, நாம் செல்ல வேண்டிய இடத்தின் தூரம் என்பவற்றை கணக்கிட்டு காட்டுகிறது. GPS தொழினுட்பத்தை கப்பல், கார், மொபைல், டெப்லெட் மற்றும் பிறவாகனங்கள் என்பவற்றுடன் பொருத்தி பயன்படுத்தலாம்.



செயற்படும் முறை :

GPS என்பது செயற்கைக்கோள் அடிப்படையில் வழிநடத்தும் (Navigation) அமைப்பு. GPS அமைப்பு 24 செயற்கை கோள்களை கொண்டு இயங்குகிறது. 24 செயற்கைக் கோள்களும் புவியின் பாதையில் ஒரு நாளில், இரண்டு முறை சுற்றி வருகிறது. GPS ஐக்கிய நாடுகளில் பாதுகாப்பு துறைக்காக மற்றும், இராணுவத்திற்காக பயன்படுத்தும் நோக்கிலேயே உருவாக்கப்பட்டு, அதன் பிறகு 1980 இல் மக்களின் பயன்பாட்டிற்காக அனுமதி அளிக்கப்பட்டது. அதற்கு எந்த கட்டணமும் இல்லை. GPS எந்த சூழ்நிலையிலும் எந்த இடத்திலும் 24 மணிநேரம் இயங்கிக்கொண்டிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரிசீவர் Receiver

செயற்கைக் கோள்களில் இருந்து வரும் சிக்னல், அனுப்பப்பட்ட நேரம் மற்றும், வந்தடைந்த நேரம் ஆகியவற்றை கணக்கிட்டு ரிசீவர் உள்ள இடத்தை அறிந்து, ரிசீவர் நகர்வதற்கு ஏற்ப செயற்கைக்கோளால் பெறப்பட்டு இடம் கணக்கிடப்படுகிறது, 2 D அளவைப் பெற, குறைந்தது 3 செயற்கைக் கோள்களின் சிக்னல்களைப் பெற வேண்டும். இதன் மூலம் வேகம், வழி, சென்றடைய தேவையான காலம், செல்ல உள்ள இடத்தின் தூரம் ஆகியவற்றை அறியலாம். நாம் இருக்கும் இடத்தை 15 மீற்றர் தூரம் வரை துல்லியமாக அளவிடுகிறது. பிறகு Wide Area Augmentation System (WAAS) மூலமாக, 3 மீற்றர் வரை துல்லியமாக அளவைப் பெற முடியும். இது 2000 இறாத்தல் நிறையுடையது. இது சூரியச் சக்தியில் செயற்படுகிறது. சூரியச் சக்தி இல்லாத நேரத்தில் செயல்பட, சூரியச் சக்தியை சேமிக்கும் மின்கலங்கள் பொருத்தப்பட்டுள்ளன. இது 50 வாட்ஸ்களுக்கும் குறைவாகவே பயன்படுத்துகிறது. GPS ஆரம்பித்தில் 2 சிக்னல்களைப் பயன்படுத்தியது. அது L1 மற்றும் L2 ஆகும்.
L2- 1227.60 MH2 மற்றும் L1 – 1575.42 MHZம் ஆகும்.

மக்களுக்காக L1 சிக்னல்கள் பயன்படுத்தப்படுகிறது. இது மேகம், கண்ணாடி, பிளாஸ்டிக் போன்றவற்றை ஊடுருவிச் செல்லக்கூடியது திடப்பொருட்களில் ஊடுருவ முடியாது. இந்த GPS சிக்னல் ஆனது 3 Code களை உள்ளடக்கியது

Codes {
1. Pseudorandom Code
2. Ephemeris data
3. Alumnae data

1. Pseudorandom Code

Pseudorandom Code:- எந்த செயற்கைக் கோள் சிக்னல்களை அனுப்புகிறது என்று அறியப்படுகிறது. ஒவ்வொரு செயற்கைக் கோள்களுக்கும் தனித்தனி Code உள்ளது.

2. Ephemeris data

Ephemeris Data :- அனுப்புச் செயற்கைக் கோளின் ஆரோக்கியநிலை, திகதி, நேரம் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. Alumnae data

Alumnae data செயற்கைக் கோள்கள் எந்தெந்த நேரங்களில் எந்தெந்த இடங்களில் இருக்க வேண்டும் என்பதை குறிக்கிறது.

Differential GPS (DGPS) L5 ஐயும் பயன்படுத்துகிறது.
L5 -1176.45 MHZ

(DGPS) ல் ஏனையவற்றை விட தவறுகள் குறைவாக நடைபெற வாய்ப்புகள் உள்ளன. இதன் 5 மீற்றர் அளவில் இடத்தை அறியலாம். இது செயற்திறனைப் பொருத்து அமைகிறது.

**தீமைகள் :-**

Vertical Position எப்பொழுதும் 1/2 இல் இருந்து 3 மடங்கு. Horizontal Accuracy யை விட தவறு நடக்க வாய்ப்பு உள்ளது. நீங்கள் உயரமானக் கட்டடங்கள், பாதைகளில் பயன்படுத்தும் போது, சிக்னல்கள் பல வழிகளில் திடப்பொருட்களால் எதிரொளிக்கப்பட்டு வந்தடையும் போது, தவறுகள் நடக்க வாய்ப்புகள் உள்ளன.

GPS System ரியல் டைம் (Real Time) களில் Update செய்யப்படுவதில்லை என்பதால், புதிய வழிகள் மற்றும் மாற்றங்களை அறிவதில்லை. GPS போலவே ரஷ்யாவில் GLONASS (Global Navigation Satellite System). இது ஓரளவு மேம்படுத்தப்பட்டு இருந்தாலும், இன்னும் முழுமையாக பூமியைக் கண்காணிக்கவில்லை ஐரோப்பாவில் Galileo Positioning System, இந்தியாவின் (Indian Regional Navigational Satellite), மற்றும் சீனாவின் Compass Navigation System போன்றவை மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

இவ்வாறான வியத்தகு புதியத் தொழினுட்ப விடயங்களைத் தேடி, ஆராய்ந்து இத்துறையில் நீங்களும் வெற்றி பெற முயற்சிப்பீர்களாக!



திருமதி சுமிதினி மஹிந்தன்ராஜ்
ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழிசைக் கருவிகள்

தினமும் புதிதாய் வந்துக் கொண்டிருக்கும் நவீன இசையைக் கேட்டு ரசித்து நாம் மறந்து போன தமிழனின் பாரம்பரிய இசை பற்றியும், தமிழிசைக் கருவிகள் பற்றியும் இந்த பதிவு காட்டுகிறது.

மும்மூர்த்திகள் இசைகளிலேயே பழமையான இசை. "கல்தோன்றி மண் தோன்றா காலத்தே தோன்றிய தமிழுடன் பிறந்தது நம் தமிழிசை"



உயிரும், உடம்பும் போன்றது நம் தமிழர்களுக்கும், இசைக்கும் உள்ள தொடர்பு. தமிழர்களின் வாழ்க்கையில் ஒரு தாய் கருவுற்றால் நலுங்குபாட்டு, குழந்தை பிறந்ததும் தாலாட்டுப் பாடல், சிறுவயதில் நிலாப்பாடல், இளம்வயதில் காதல் பாடல், திருமணத்திற்கு திருமணப்பாடல், மரணமடைந்தால் ஒப்பாரிப்பாடல் என்று தமிழனின் வாழ்வு பிறப்பு முதல் இறப்பு வரை இசையோடு ஒன்றியிருக்கிறது. (தற்போதைய காலகட்டத்தில் நலுங்குப் பாடல், தாலாட்டு பாடல், நிலாப்பாடல், திருமணப்பாடல், ஒப்பாரிப் பாடல் என்று எதுவும் வழக்கத்தில் இருப்பதாக தெரியவில்லை, பழையத் தமிழ் படங்களைத் தவிர வேறெங்கும் இவற்றை நாம் பார்க்கவில்லை. இவற்றில் இன்று வழக்கத்தில் இருப்பது காதல் பாடல்கள் மட்டும் தான், திரைப்படங்களில் மட்டும்)

இலக்கியங்கள் படைத்த தமிழும், இசையும் இன்று இல்லாமல் போகும் நிலையில்....

**தமிழிசைக் கருவி - வீணை**

வீணை ஒரு நரம்பு இசைக்கருவி. மிக அழகிய இசைக்கருவியான இது மிகவும் பிரபல்யம் வாய்ந்தது. இந்திய இசையின் பல நுட்பங்களையும், தத்துவங்களையும் இந்தக் கருவியின் மூலம் தெளிவாக வெளிப்படுத்தலாம். வலது கையின் ஆள்காட்டி விரலும், நடுவிரலும் கம்பிகளை மீட்டுவதற்கும், இடது கையின் ஆள்காட்டி விரலும், நடுவிரலும் வாசிப்பதற்கும் பயன் படுத்தப்படுகின்றன. தரையில் அமர்ந்து மடியில் வைத்து வலதுத் தொடையால் தாங்கிக் கொண்டு வீணை மீட்டப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தமிழிசைக் கருவி - யாழ்**

யாழ் என்பது பண்டைய இசைக் கருவிகளில் மிகச் சிறப்பு வாய்ந்தது. யாழ் மீட்டி வாசிக்கக்கூடிய நரம்புக் கருவி. இந்த இசைக்கருவி "தனக்கு" எனும் மரத்தால் செய்யப்பட்டது. இது படகு வடிவமாய் இருக்கும். மேலே தோலால் மூடப்பட்டிருக்கும். இந்தத் தோலுக்குப் போர்வைத்தோல் என்று பெயர். போர்வைத் தோலின் நடுவிலுள்ள மெல்லியக் குச்சியின் வழியாக நரம்புகள் கிளம்பி மேலே உள்ள தண்டியுடன் பிணைக்கப்பட்டிருக்கும். சில யாழ்களில் மாடகம் அல்லது முறுக்காணிகள் இருந்தன. அத்தகைய யாழ்களில், நரம்புகள் தண்டியின் துவாரங்களின் வழியாகச் சென்று முறுக்காணிகளில் சுற்றப்பட்டிருக்கும். சிலவற்றில் நரம்புக்கட்டு அல்லது வார்க்கட்டு தண்டியில் வரிசையாகக் காணப்படும். வார்க்கட்டுகளை மேலும் கீழுமாக நகர்த்தி நரம்புகளைச் சுருதிக் கூட்டினர். பல்லவர் காலக் கோயில்களான காஞ்சிகைலாசநாதர் கோயில் (இராஜசிம்மன் மற்றும் சோழர்) காலக் கோயில்களான பொன்செய் நல்துணையீஸ்வரம் கோயில் (பராந்தகன்), திருமங்கலம் கோயில் (உத்தம சோழன்) ஆகியவற்றில் யாழ்ச் சிற்பங்கள் காணப்படுகின்றன. யாழ் தற்போது செல்வாக்கிழந்தும், வழக்கொழிந்தும் விட்டது. வீணையின் வரவே யாழின் செல்வாக்கையழித்தது என்று அறிஞர்கள் கருதுகிறார்கள்.

**தமழிசைக் கருவி - பறை**

பறை ஒரு தமிழிசைக் கருவியாகும். இது தோலால் ஆன மேளமாகும். 'பறை' என்ற சொல் பேச்சைக் குறிப்பதாகும். பேசுவதை இசைக்கவல்ல தாளக் கருவி 'பறை' எனப்பட்டது. பன்னெடுங்கால வரலாற்றைத் தன்னகத்தே கொண்டுள்ள பறை. ஓர் இசைக் கருவி மட்டுமல்ல தொல்குடித் தமிழ்ச் சமூகத்தின் சொத்து. தோலிசைக் கருவிகளின் தாய், தமிழினத்தின் தொன்மையான அடையாளம். உழைக்கும் மக்களின் இசைக் களஞ்சியம். பறை முற்காலத்தில் முதல் தகவல் தொடர்பு சாதனம். பறையடித்துத் தகவல் சொல்லுதல் பழங்காலத்தில் ஒரு முக்கிய தகவல் பரப்பு முறையாகவும், பண்டைய காலத்தில் வாழ்ந்த தொல்குடி தமிழர்களின் நிலவியல் பாகுபாட்டின் அடிப்படையிலும் 'பறை' பயன்படுத்தப்பட்ட வரலாறு உண்டு. 'பறை' என்ற சொல்லே இசைக் கருவியையும், செய்தி அறிவிக்கும் முறையையும் குறிக்கின்றது என தொல்காப்பியம் கூறுகிறது.



திருமதி சரோஜினி ரமேஷ் பிரேமநாத்
சங்கீத ஆசிரியை

# திண்மக்கழிவு முகாமைத்துவம்
## (Solid waste Management)

மனிதன் பயன்படுத்திய பின்னர் ஒதுக்கப்பட்டு. சூழலுக்கு விடுவிக்கப்படும் எந்தவொரு அசேதன, சேதன திண்மப் பொருட்களும் " திண்மக் கழிவுகள்" எனப்படும் தாவர, விலங்குப் பொருட்கள், உணவுத்துகள்கள், கடதாசி, பொலித்தீன் மற்றும் கண்ணாடிப் பொருட்கள் நாம் அன்றாடம் பயன்படுத்தி ஒதுக்கும் கழிவுப்பொருட்களாகும். இவை இரு வகைக்குள் அடக்கப்படும். உலர் திண்மக் கழிவுகள்,(dry solid waste) ஈர திண்மக்கழிவுகளில் (wet solid waste) உலர் திண்மக் கழிவுகள் நீண்ட நாட்களான பின்னரும் எவ்வித துர்நாற்றமும் வீசுவதில்லை. எனினும் ஈர திண்மக்கழிவுகளில் (wet solid waste) உடனடியாக துர்நாற்றம் வீசும்.

பார உலோகங்கள் (heavy metals) :- சார்பளவில் உயர், அடர்த்தியையும், உயர் மூலக்கூற்றுத்திணிவையும் கொண்ட உலோகங்கள் "பாரவுலோகங்கள்" எனப்படும் உலோகத் துண்டுகள், உபகரணங்கள், வாகனங்களில் உள்ள சில உலோகங்கள், சில இடங்களில் மண்ணுடன் இயற்கையில் செறிந்தும் காணப்படுகின்றன. இரசம் (Hg), ஆசனிக் (As), குரோமியம் (Cr), கட்மியம் (Cd), ஈயம் (pb), செப்பு (Cu), மங்கனீசு (Mn), நாகம் (Zn) என்பன இவற்றுள் சிலவாகும்.

இவை சூழலுக்கு வெவ்வேறு சந்தர்ப்பங்களில் விடப்படுகின்றன.

- கையடக்கத் தொலைபேசி, மின்கலம் போன்றவையும், செம்மஞ்சள் நிற உற்பத்தியில் - cd விடுவிக்கப்படல்
- மின் முலாமிடல், தொழிற்சாலை கழிவுகள், உலோக சுரங்கங்களில் இருந்து வெளியேறும் கழிவுகள் மூலம்
- விவசாய இரசாயன பதார்த்தங்கள், LED அதிகளவு பயன்படுத்தப்படுவதால் As விடுவிக்கப்படுகிறது.
- தொலைக்காட்சி, கணினிகளின் கதோட்டுக் குழாய்கள், பெற்றோல் தகனமடையும் போதும் ஈயத்துணிக்கைகள் சூழலில் சேருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நிலக்கரியை பயன்படுத்தல், ஆய்வு கூடங்களில், வீடுகளில் பயன்படும் வெப்பமானிகள், பாரமானிகள், CFL மின்குமிழ்கள் உடைவதனால் Hg விடுவிக்கப்படல்
- சீமெந்து, கடதாசி, இறப்பர், தீந்தை ஆகியவற்றில் வர்ணங்களாக பயன்படுத்துவதால் cr விடுவிக்கப்-படுகின்றது.
- இலத்திரனியல் கழிவுகள் மூலம் பெருமளவு பாரஉலோகங்கள் சூழலுக்கு விடுவிக்கப்படும்.

துணிக்கை கழிவுகள் (Particulate Matter)

துணிக்கைக் கழிவுகள் பிரதானமாக இரு முறைகளில் சூழலுக்கு விடுவிக்கப்படுகின்றன.

I. திண்மத் துணிக்கைகள் - காபன் துணிக்கைகள், பாரவுலோகங்கள், சாம்பல், தூசு, கன்னார்.
II. திரவத்துணிக்கைகள் - நீராவி, திரவ சேதன துணிக்கைகள், இரச ஆவி

சனத்தொகை அதிகரிப்புடன் வெளியேற்றப்படும் கழிவுகளின் தொகை அளவுக்கு அதிகமாகும். இயற்கைக் கழிவுகள் பிரிந்தழியக்கூடியன. எனினும் பிரிந்தழியும் காலத்தைவிட வேகமாகவும், தொடர்ச்சியாகவும் கழிவுகள் சேர்கின்றன. இலங்கையில் நாளொன்றிற்கு 7000 Mt திண்மக் கழிவுகள் சேர்கின்றன. நபர் ஒருவர் நாளொன்றிற்கு 1 – 4 kg வரையிலான திண்மக்கழிவுகளை சூழலுக்கு விடுவிக்கக்கூடும். இன்று நாம் உருவாக்கும் இக்கழிவுகள் நம்மை விட்டு நீங்க எடுக்கும் காலத்தைக் கருதினால்,

காய்கறிவகை - 2 மாதங்கள்
கடதாசி - 2 மாதங்கள்
வெப்பக்குடுவைகள் - 50 – 1000 வருடங்கள்
போத்தல் - 1 மில்லியன் வருடங்கள் ஆகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்திண்மக் கழிவுகள் சூழலில் விடப்படுவதால்,

- கழிவுகள் மீது பற்றீரியாக்கள் காற்றின்றிய பிரிகையின் காரணமாக மெதேன் $CH_4$ வாயு வெளியேறும் இது தீப்பற்றி எரியக்கூடிய வாயு
- நுளம்புகளின் பெருக்கத்திற்கு இடங்களை உருவாக்கும்
- காற்றின்றிய பிரிகையினால் துர்நாற்றம் வீசும் அத்துடன் நச்சு வாயுக்களும் வெளியேற்றப்படும்.
- கழிவுகள் மீது பூச்சியினங்கள், எலிகள் போன்ற பிராணிகள் பெருகும்
- மாசுக்கள் நீரில் கரைந்து நிலக்கீழ் நீர் மாசடைதல்
- உயிரின சுழற்சி தடைப்படல்
- மீள்சுழற்யின் தரம் குறைவடைதல்
- கையாளுதல் சிரமம், மனித வலு அதிகளவு தேவைப்படல்
- கையாளும் ஊழியர்கள் நோய்வாய்படல் போன்ற பாதிப்புகள் ஏற்பட வாய்ப்புண்டு. அதிகளவு துர்நாற்றம் காரணமாக ஆயுள் குறைவடைதல், நோய்கள் பரவுதல் போன்ற பல பிரச்சினைகளை கிராமங்களை விட நகர மக்கள் எதிர் நோக்குகின்றனர். சூழலுக்குப் பிரிந்தழியும், பிரிந்தழியாத பொருட்கள் விரைவாகவும், தொடர்ச்சியாகவும் சேர்கின்றன. மின்கலங்கள், இலத்திரனியல் கழிவுகள் (e-wast), கடதாசிகள் போன்ற பொருட்கள் மூலம் பார உலோகங்கள் மண்ணுடன் சேர்க்கப்பட்டு நஞ்சூட்டல் நடைபெறுக்கூடும் என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

எனவே இப்பிரச்சினைகளில் இருந்து தீர்வுக் காண கூடியவரை மீள்சுழற்சி செய்தல் வேண்டும். மீள்சுழற்சி என்பது மறுபடியும் உருமாற்றம் செய்து அப்பொருளை பயன்படுத்தக்கூடிய நிலைக்கு மாற்றுதல். மீள் சுழற்சிக்கு திண்மக்கழிவுகள் பிரிந்தழியக்கூடியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- திண்மக்கழிவுகள்
  - → பிரிந்தழியக்கூடியது
  - → பிரிந்தழிய முடியாதவை
    - → மீள்சுழற்சிக்கு உட்படும் பொருள்
    - → மீள்சுழற்சிக்கு உட்படாத பொருள்

மீள்சுழற்சிக்கு உட்படுபவை – கண்ணாடி, இரும்புக்கழிவுகள்
மீள்சுழற்சிக்கு உட்படாதவை – பிளாஸ்டிக், வெப்பக்குடுவை, போன்றன. இதன் மூலம் கழிவுகள் மறுபடியும் பயன்படுத்தக்கூடிய நிலைக்கு மாற்றப்படுகின்றது.

அடுத்ததாக திண்மக்கழிவு முகாமைத்துவத்தில் முக்கியமானது 4R /3R அடிப்படை அறிவைப் பயன்படுத்தல்.



Re use → மீள்பாவனை
Re duce → பாவனையைக் குறைத்தல்
Re place → மாற்றீடு செய்தல்
Re cycle → மீள் சுழற்சி செய்தல்

மீள்பாவனை – பிரிகையடையாத பதார்த்தங்களான பொருட்களை மீளப்பயன்படுத்தல்
பாவனையைக் குறைத்தல் - வீணாகப் பதார்த்தங்கள் பயன்படுத்தப்படுவதைக் குறைத்தல்

மாற்றீடு செய்தல் - மீள் சுழற்சிக்கு தீங்கிழைக்கும் பொருட்களைப் பயன்படுத்தல்
மீள்சுழற்சி செய்தல் - மீள் சுழற்சி செய்வதன் மூலம் பயன்பாட்டிற்குரிய பொருளாக மாற்றுதல் (உ+ம்) பொலித்தீன், RDF உரிபொருள்

எனவே இவ்வாறான கழிவுகளை வெவ்வேறாக தரம் பிரித்தலும், சேகரித்தலும் மிக முக்கிய அம்சமாகும். மீள்சுழற்சி செய்யக் கூடிய பொருட்களை மீள்சுழற்சி செய்தும், பிரியும் சேதனப் பொருட்களில் கூட்டெரு செய்து பயன்படுத்தலும், கழிவுகள் மூலம் வெளியேறும் உயிர்வாயு எரிபொருளாகவும் பயன்படுத்தப்படுகிறது.

எனவே ஒவ்வொரு நபரும் தரம் பிரித்தல் தொடர்பான அறிவைக் கொண்டு வெவ்வேறாக சேமித்து, மீள்சுழற்சிக்கு உட்படுத்தியும் எமது சூழலையும், எதிர்கால சந்ததியினரையும் பாதுகாப்பது எமது கடமையாகும்.

திருமதி கௌசல்யா சத்தியேஸ்வரன்
ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றிணைந்த ஆளுமைக்கு இன்றியமையாத சிந்தனைத் திறன்கள்

நல்ல பொதுக்கல்வியை வழங்குவதே பாடசாலையின் குறிக்கோளாகும். இந்நோக்கத்தை நிறைவு செய்யும் பாடசாலைகள் ஒன்றிணைந்த, பூரணமான ஆளுமையைக் கொண்ட பிரஜைகளையே நாட்டுக்கு வழங்கும். நாட்டுக்குப் பயனுடைய நல்லறிவும், நற்பண்புகளும் நிரம்பப் பெற்ற பிரஜைகளை உருவாக்குவதே பாடசாலையின் பிரதான பணியாகும். அவ்வாறான பிரஜைகளை உருவாக்குவதற்கு இன்றியமையாத சிந்தனைத் திறன்களைப் பாடசாலை மாணவரிடத்தே விருத்திச் செய்வது தொடர்பாக இக்கட்டுரையில் நோக்குவோம்.

ஒன்றிணைந்த பூரணமான ஆளுமையைப் பெறுவதற்காக நாம் சிறுபராயம் தொடக்கம் விருத்தி செய்து கொள்ள வேண்டிய திறன்கள் மூன்று வகைப்படும் சிந்தனைத்திறன்கள், சமூகத்திறன்கள், சுயதிறன்கள் என்பனவே அவையாகும் சிந்தனைத் திறன்கள் எனப்படுபவை தனியாள் திறன்களாயினும் அத்திறன்கள் அதிமுக்கியத் துவமுடையவையாகையால் இங்கு சிந்தனைத் திறன்கள் பற்றி நோக்குவோம்.



சிந்தனைத் திறனில் (Thinking Skills) அடங்கும் சிறப்பான திறன்கள் இவை

- ஆக்கச் சிந்தனை / தீர்க்கமான சிந்தனை
- பகுப்பாய்வுச் சிந்தனை / தருக்கச் சிந்தனை
- தொகுத்தறி சிந்தனை / உய்த்தறி சிந்தனை
- தீர்மான மெடுத்தல்
- பிரச்சினை தீர்த்தல்
- முரண்பாடு முகாமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர் வெவ்வேறு விதமாகச் சிந்திப்பதில் திறமை காட்டுவாராயின், அவர் சிந்தனைத்திறன்களை விருத்தி செய்து கொண்ட ஒருவராவார். ஒருவர் சிந்தனையில் ஈடுபடத்தக்க விதங்களை நோக்குவோமாயின், அடிப்படையான ஆக்கச் சிந்தனைகளை எந்தவொரு பாடத்தினூடாகவும் வளர்க்கலாம் எனினும், பரீட்சை மையக்கல்வி முறையினுள் அறிவை மையமாகக் கொண்ட கற்றல், கற்பித்தல் செயன்முறையினூடாக போதுமான அளவில் விருத்தி செய்துவிட முடியாது.

கலைத்திட்டத்தின் எந்தவொரு பாடத்திற்கும் இச்சிந்தனைத் திறனை விருத்தி செய்ய முடியுமெனினும், அந்தந்தச் சிந்தனைப் பேதத்தை விருத்தி செய்யத்தக்க பாடங்கள் பாடசாலைக் கலைத்திட்டத்தில் அடங்கியுள்ளன. சித்திரம், நடனம், சங்கீதம், நாடகமும் அரங்கியலும் என்பன உட்பட அழகியற் பாடங்கள், தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளுடன் தொடர்புடைய இலக்கிய நயம்சார்ந்த பாடல்கள் வடிவமைப்பும், தொழினுட்பவியலும், கைத்திறன் கலைகள் போன்ற தொழினுட்பப் பாடங்கள், கணிதம் போன்றவை ஆக்கச் சிந்தனைத் திறன்களை விருத்தி செய்வதில் பங்களிப்புச் செய்கின்றன.

தீர்க்கமான சிந்தனை தொடர்பாக கவனஞ் செலுத்துவோமாயின் அன்றாடம் அனுபவிப்பவற்றிலிருந்து யாதேனும் அர்த்தத்தை, உண்மையை வெளிக்கொணர்வதில் தீர்க்கச் சிந்தனையாளர்கள் வல்லவர்களாவர். எமது சூழலில் வித்துக்களிலிருந்து தாவரங்கள் முளைப்பதையும், காலப்போக்கில் அவை வளர்ந்து பாரிய மரங்களாவதையும், பூத்துக் காய்த்துக் கனியாவதையும், ஈற்றில் பட்டுப் போவதையும் நாம் காண்கின்றோம் எனினும் ஐசெக் நியூட்டன் போன்ற ஒரு சில விஞ்ஞானிகளே, இவ்வாறான நிகழ்வுகள் குறித்துத் தீர்க்கமாகச் சிந்தித்துள்ளனர். அதன் விளைவாகவே அப்பிள் பழம் பூமியில் விழுவதைக் கண்ட அவரால் புவியீர்ப்பு விசைப்பற்றிய கருத்தை வெளியிட முடிந்தது ஒரு களி ஈரலிப்பாக இருக்கும் போது நாம் விரும்பியவாறு உருட்டிப்புரட்டி உருவங்களை அமைக்கலாம் எனினும், அது உலர்ந்த பின்னர் அத்தன்மை அற்றுப் போகும். அவ்வாறே தீர்க்கமான சிந்தனையை வளர்க்கத்தக்க ஒரு பருவம் உண்டு. எனின், அது பிள்ளைப் பருவமே ஆகும். ஆட்களின் வயது அதிகரித்து அவர்கள் முதிர்ச்சியடைந்த பின்னர் இச்சிந்தனை ஆற்றலை வளர்த்துக் கொள்வதற்காக வாய்ப்புக்கள் குறைவடையும். எனவே, பாடசாலைப் பருவத்தில் இவ்வாற்றல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருத்தியடையும் கலைத்திட்டங்களை கற்றல் - கற்பித்தல் செயன்முறையை நெறிப்படுத்துவது இன்றியமையாததாகும்.

தீர்க்கமான சிந்தனைத்திறன்களை விருத்தி செய்வதில் பங்களிப்புச் செய்யும் இருவகையான சிந்தனைப் போகங்கள் உள்ளன.

1. பகுப்பாய்வுச் சிந்தனை
2. தருக்கச் சிந்தனை

விஞ்ஞானம் போன்ற பாடங்களைக் கற்பதால் பகுப்பாய்வுச் சிந்தனையும், கணிதம், கேத்திரகணிதம், அளவையியல் போன்ற பாடங்களைக் கற்பதால் தருக்கச்சிந்தனையும் விருத்தியடையும். இன்று பெரும்பாலானோர் சரியானவற்றை தவறானவற்றிலிருந்து பிரித்தறிய முடியாத நிலையில் உள்ளனர். அவ்வாறே நல்லவற்றை அல்லாதவற்றிலிருந்து தெரிவு செய்ய முடியாத நிலையிலும் உள்ளனர். துடுப்பற்ற ஓடம் போல ஏனையோரை அனுசரித்து பெரும்பாலானோர் அதன் பாதாளத்தின் பால் செல்வதைக் காண முடிகின்றது. தருக்கச் சிந்தனைத் திறன்கள் நலிவடைந்திருத்தலே இதற்குக் காரணமாகும்.

மேலும், தனியாட்கள் சிந்திக்கும் விதம் இரு வகைப்படும். உய்த்தறி தருக்கம், தொகுத்தறி தருக்கம் என்பனவாகும் இயற்கை விஞ்ஞானப் பாடப்பரப்பில் காணப்படும். உய்த்தறி தருக்கமானது ஒரு பரந்த விடயத்தில் ஆரம்பித்து குறிப்பான தரவுகளை அடைவதற்கு ஆட்களை வழிப்படுத்தும்.

சமூக விஞ்ஞானப் பாடப்பரப்பில் காணப்படும் தொகுத்தறி தருக்கமானது, குறிப்பாகத் தரவுகளைச் சேகரித்து யாதேனுமொன்று தொடர்பாக விரிவான ஒரு கருத்தை, சித்திரத்தை உருவாக்கிக் கொள்ள உதவும்.

நன்கு சிந்தனைச் செய்யும் ஒருவர் தீர்மானமெடுக்கும் (Decision Making) திறனை இயல்பாகவே பெறுவார். இன்றைய வளர்ந்தோரிடையே நல்ல தீர்மானங்களை எடுக்கத்தக்கோர் அரிதாகவே காணப்படுகின்றனர். மாற்று வழிகளைச் சீர்தூக்கிப் பார்த்து நல்லதையே தெரிவு செய்து கொள்வது நல்லதொரு தீர்மானமெடுப்பவரின் சிறப்பியல்பாகும். இவ்வாற்றல் இன்மை காரணமாக மேலும் இருவகையான திறன்களை தற்கால மாணவர்கள் இழக்கின்றனர். பிரச்சினை தீர்த்தல் (Problem

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Solving), முரண்பாடு முகாமை (conflict Management) ஆகியனவே அவையாகும்.

எம்மைச் சூழ பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றன கூடவே பற்பல முரண்பாடுகளும் காணப்படுகின்றன. இப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும், முரண்பாடுகளை முகாமை செய்வதற்கும் முன்வரத்தக்க தனியாட்களை தற்காலப் பாடசாலைக்கல்வியின் ஊடாக உருவாக்குதல் அவசியமாகும். எனவே பாடசாலை மாணவரின் சிந்தனைத் திறன்களைப்புடம் போடுவதற்காகப் புதிய வேலைத்திட்டமொன்று அவசியம் என்பது தெளிவு. பொதுப்பரீட்சைகளுக்காகத் தயாரிக்கப்படும் வினாக்களில் பாரிய அளவில் மாற்றங்களைச் செய்து வகுப்பறை கற்றல் கற்பித்தலை உரிய வழியில் இட்டுச் செல்வதும் கற்றல் தொடர்பாக ஆசிரிய ஆசிரியைகள், பெற்றோர், மாணவ மாணவியர் ஆகிய சகலரதும் மனப்பாங்குகளில் மாற்றத்தை ஏற்படுத்தி இது தொடர்பாக ஆலோசனைகளை வழங்குவதும், சிந்தனைத்திறன்களைக் கொண்ட எதிர்காலச் சந்ததியை உருவாக்குவதற்கு இன்றியமையாதனவாகும்.

இன்று பாடசாலைகள் மற்றும் "டியூசன்" வகுப்புகளுக்கிடையே போட்டி நிலவிய வண்ணமுள்ளன. குறுக்கு வழிகள் உத்திகளைக் கையாண்டு பரீட்சைகளில் சித்தியடைவதற்குத் தேவையான அறிவை மாத்திரம் மாணவர்களுக்கு வழங்குவதில் இவை கவனஞ் செலுத்துகின்றன. அரச பாடசாலை, அரச உதவி பெறும் பாடசாலை, சர்வதேச பாடசாலை, டியூசன் வகுப்பு ஆகிய யாவும் பிள்ளைகளின் அறிவுக் கண்களைத் திறக்கும் நோக்குடனேயே செயற்படுகின்றன. எனவே தமக்கிடையே தேவையற்ற போட்டி நிலமைகள் உருவாகுவதைத் தவிர்த்து தற்கால சமூகத்தின் வெற்றிக்கு வழிகாட்டக்கூடிய கற்றல், கற்பித்தல் முறைகளைக் கையாள்வதற்கு இவ்வனைத்து நிறுவனங்களும் ஒன்று திரளுதல் வேண்டும்.



செல்வி தேவசந்திர தேவர் வைஷ்ணவபிரியா
ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தைப்படுத்தல் தொழிற்பாடு

மாறிவரும் சூழலுக்கு ஏற்ப நிறுவனங்கள் நாளுக்கு நாள் சந்தைப்படுத்தலில் பல்வேறு தந்திரோபாயங்களை மேற்கொண்டு வருகின்றது. அந்தவகையில் சந்தைப்படுத்தலினை முறையாக மேற்கொள்ளாத நிறுவனம் சந்தையை விட்டு வெளியேறும் நிலை ஏற்படுகின்றது.

நுகர்வோரது தேவைகளையும், விருப்பங்களையும் இனங்கண்டு பூர்த்திசெய்து நுகர்வோர் திருப்தியினை ஏற்படுத்திக் கொள்ளும் வகையில் மேற்கொள்ளுகின்ற, சகல தொழிற்பாடுகளையும் உள்ளடக்கியது சந்தைப்படுத்தல் ஆகும். (உ+ம்) உற்பத்தித் திட்டமிடல் (Planning), உற்பத்தி (Production), விலையிடல் (Pricing), விநியோகம் (Distribution), மேம்படுத்தல் (Promotion).

வணிக அமைப்பொன்றின் சந்தைப்படுத்தல் தொடர்பான இலக்கினையும், குறிக்கோளையும் வினைத்திறனுடனும், செயற்றிறன் மிக்க வகையிலும் அடைந்து கொள்ளும் பொருட்டு அவ் வணிகத்தின் மனித, பௌதீக, நிதி, தகவல் மற்றும் ஏனைய சந்தைப்படுத்தல் தொடர்பான வளங்களையும், பணிகளையும் முகாமை செய்தல் சந்தைப்படுத்தல் முகாமைத்துவமாகும்.

**சந்தைப்படுத்தல் தொழிற்பாட்டின் அடிப்படைப் பண்புகள்**

- நுகர்வோனை மன்னனாகக் கொண்ட தொழிற்பாடு
- நுகர்வோரது தேவைகள், விருப்பங்கள், திருப்தி என்பவற்றை பூர்த்தி செய்வதுடன் தொடர்புபட்டது.
- நுகர்வோரில் ஆரம்பித்து நுகர்வோரில் முடிவடைகின்றது.
- உற்பத்திக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டு விற்பனைக்குப் பின்னரும் தொடர்கின்றது.
- சமூக, முகாமைத்துவ ரீதியான பல்வேறு கருமங்களை உள்ளடக்கிய தொழிற்பாடாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சந்தைப்படுத்தலுடன் தொடர்புபடுபவர்கள்**




| | |
|---|---|
| நுகர்வோர் | தரகர்கள் |
| விநியோகஸ்தர் | விற்பனையாளர் |
| முகவர்கள் | வாடிக்கையாளர் |
| உற்பத்தியாளர் | சேவை வழங்குனர் |

**சந்தைப்படுத்தல் ஒரு சமூகத்தின் தொழிற்பாடு**

மக்கள் ஒவ்வொருவருடைய தேவைகளையும், விருப்பங்களையும் பூர்த்திசெய்து வைப்பதற்கு அவசியமான பொருட்கள், சேவைகளை உருவாக்குதல், வழங்குதல், பரிமாற்றம் மூலம் அவர்களை திருப்திப்படுத்துவதில் ஈடுபடுதல் ஆகிய கருமங்களில் ஈடுபடுவதால் சந்தைப்படுத்தல் என்பன சமூகத்தின் தொழிற்பாடாகும்.

**சந்தைப்படுத்தல் ஒரு முகாமைத்துவத்தின் தொழிற்பாடு**

நிறுவன நோக்கங்களை அடைவதில் செல்வாக்குச் செலுத்துவதே முகாமைத்துவம் ஆகும். இங்கு இலகு சந்தையைத் தெரிவு செய்து உயர்வான வாடிக்கையாளரின் பெறுமதியை உருவாக்கி வாடிக்கையாளரை அதிகரித்து தக்கவைத்து நிலைத்திருந்து இலாபம் உழைக்கக் கூடிய வகையில் செயற்படுத்துவதனால் சந்தைப்படுத்தல் முகாமைத்துவத்தின் தொழிற்பாடு என்பர்.

**சந்தைப்படுத்தலில் சந்தை ஆராய்ச்சியின் முதன்மையான தொழிற்பாடு**

சந்தைப்படுத்தல் தொழிற்பாடுகளுள் சந்தையாராய்ச்சி முதன்மையான தொழிற்பாடாகக் காணப்படுகின்றது. ஏனெனில், நுகர்வோர் தேவையினை அறிந்து உற்பத்தி வர்த்தக முயற்சிகளில் ஈடுபடும் போதுதான் நுகர்வோர் அப் பொருட்கள் சேவைகளைக் கொள்வனவு செய்வர்.

**சந்தைப்படுத்தல் நுகர்வோருடன் ஆரம்பித்து நுகர்வோருடன் முடிவடைகிறது**

சந்தைப்படுத்தலில் நுகர்வோரே முதன்மையானவராகக் காணப்படுகின்றனர். ஏனெனில் நுகர்வோர் தேவைக்கேற்பவே உற்பத்தி வர்த்தகம் நடைபெறுகின்றது. அத்துடன் நுகர்வோர் தேவை உற்பத்தி வர்த்தக முயற்சியில் ஈடுபட முன்னர் மதிப்பிடப்படுகின்றது. பின் விற்பனை செய்த பின்னர் விற்பனையின் பின் சேவைகளும் அளிக்கப்படுவதுடன் நுகர்வோர் திருப்தியும் மதிப்பிடப்படுகிறது. அதனாலேயே நுகர்வோருடன் ஆரம்பித்து நுகர்வோருடன் முடிவடைதல் எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சந்தைப்படுத்தல் விற்பனையுடன் முடிவடைவதில்லை.**

சந்தைப்படுத்தல் தொழிற்பாடுகள் விற்பனையுடன் முடிவடையாமல் விற்பனை செய்த பின்னரும் அது தொடர்பாக சில சேவைகள் அளிக்கப்படுகின்றது. இதனாலேயே சந்தைப்படுத்தல் விற்பனைகளுடன் முடிவடைவதில்லை எனக் குறிப்பிடுகின்றது.

**சந்தைப்படுத்தல் உற்பத்திக்கு முன்பு ஆரம்பித்து உற்பத்திக்குப் பின்னும் தொடர்கிறது.**

நுகர்வோர் தேவை மதிப்பீடு செய்து அதன் பின் உற்பத்தி வர்த்தக முயற்சியில் நிறுவனங்கள் ஈடுபடுவதுடன், உற்பத்தியின் பின்பும் நுகர்வோர் திருப்தி உறுதிப்படுத்தும் வரையான சந்தைப்படுத்தல் செயற்பாடு இடம்பெறுவதனால் சந்தைப்படுத்தல் உற்பத்திக்கு முன் ஆரம்பித்து உற்பத்திக்கு பின்னும் தொடர்கிறது என கூறப்படுகிறது.

**சந்தைப்படுத்தலின் பிரதான இலக்கு**

- நிறுவனத்திற்கான வாடிக்கையாளரை அதிகரித்தல்
- வாடிக்கையாளரை நிலையாக வைத்திருக்க முனைதல்
- வாடிக்கையாளர் நுகர்வோர் திருப்தியை உச்சப்படுத்தல்
- பலவகையான பொருட்கள், சேவைகள் மூலம் தெரிவிற்கான வாய்ப்பை அதிகரித்தல்

**சந்தைப்படுத்தும் முகாமையாளர்**

ஒரு நிறுவனத்தினுடைய சந்தைப்படுத்தல் பகுதிக்குப் பொறுப்பாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட அதிகாரியே சந்தைப்படுத்தும் முகாமையாளர் ஆவார். இவர் பின்வரும் பணிகளை நிறைவேற்ற வேண்டியவராக இருக்கின்றார்.

1. நுகர்வோர் திருப்தியினை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுதல்.
2. சந்தையின் கேள்விக்கேற்ப உற்பத்தி கொள்வனவில் ஈடுபடுதல்.
3. சந்தைப்படுத்தல் மாறிகளை பயன்படுத்துதல்.
4. சந்தையின் சூழலை சரியான முறையில் மதிப்பீடு செய்து அதற்கேற்றவாறு நடவடிக்கைகளில் ஈடுபடல்.
5. மாறுபடும் சூழலுக்கு ஏற்றவாறு திட்டங்களை மாற்றியமைத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. நிறுவனத்துடன் தொடர்புடையவர்களுடன் சுமூகமான தொடர்பினை ஏற்படுத்துதல்.
7. சந்தைப்படுத்தல் சூழலானது தாவரங்கள், பறவைகள், மிருகங்கள் ஆகியவற்றின் நடத்தையிலும் அதிக மாற்றத்தினை ஏற்படுத்துகின்றது. இந்நிலையில் மனித நடத்தையிலும் சூழலானது அதிக தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது. ஆகவே சந்தைப்படுத்துவோர் நிறுவனத்தின் இலக்கினை இலகுவாகவும் விரைவாகவும் அடைவதற்காக சூழற்காரணிகளை கருத்திற் கொண்டே சந்தைப்படுத்தல் திட்டத்தினை தயாரித்து நடைமுறைப்படுத்த வேண்டும்.

சந்தைப்படுத்தும் சூழலானது அகச்சூழல், புறச்சூழல் என இரு தொகுதியாக வகுத்து நோக்கலாம். நிறுவனத்தினுடைய உள்ளார்ந்த வளங்கள் அல்லது காரணிகள் அகச்சூழல் எனப்படுகிறது.
உதாரணம் :- சந்தைப்படுத்தும் பணியாளர்கள்.

ஒரு நிறுவனத்தின் செயற்பாடுகளில் தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடிய புறக்காரணிகளை உள்ளடக்கியதையே புறச்சூழல் என்பர். இப்புறச்சூழலும் ஒரு நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் திட்டத்தினைப் பாதிப்பதாக அமைந்திருக்கிறது. இதற்கு உதாரணமாக அரசியல் சூழல், கலாச்சாரச் சூழலினைக் குறிப்பிடலாம்.

நிறுவனங்களின் வாழ்தன்மைக்கும் நிலைத்திருத்தலுக்கும் சந்தைப்படுத்தல் மிக இன்றியமையாததாகும்.

திரு. சண்முகராசா பிரமானந்தன்
ஆசிரியர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலநிலை மாற்றமும் புவி வெப்பமடைதலும் சமகால போக்கு



சமகாலத்தில் காலநிலை மாற்றம் பற்றி பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டாலும் உலக சராசரி வெப்பநிலை மாற்றம் காலநிலையில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றது எனும் யோசனை இப்போது பரவலாக ஏற்கப்பட்ட உண்மையாக கொள்ளப்படுகிறது. விஞ்ஞானிகள் மத்தியில் மனிதனால் தூண்டிவிடப்பட்ட புவி வெப்பமடைதலின் இருப்பு மற்றும் அளவு பற்றிய விவாதங்கள் தொடர்ந்த வண்ணமுள்ளன. பெரும்பாலான அரசியல்வாதிகள் அதிகாரத்தினாலும், சுற்றுச்சூழல் அச்சுறுத்தல்களை குறைப்பதற்குக் கடுமையான முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தச் சிக்கல் பரவலான அளவில் சர்வதேச அதிகாரத்தை அணிதிரட்டியது. 1990 ஆம் ஆண்டில், காலநிலை மாற்றத்திற்கான சர்வதேச அரசாங்கக் குழு (IPCC) பண்ணாட்டு வெப்பநிலை பசுமை இல்ல வாயுக்களின் வெளியீட்டைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் தசாப்தத்திற்கு 15°C ஆக வெப்பநிலை அதிகரிக்க வாய்ப்புள்ளது என குறிப்பிடுகின்றது. இரண்டு வருடங்களுக்குப் பின் பிரேஸிலின் தலைநகர் ரியோ- டீ- ஜெனிரோவில் நடைபெற்ற புவி உச்சி மாநாட்டில் 154 நாடுகள் ஒப்பந்தத்தில் கையெப்பமிட்டனர்.

காலநிலை மாற்றத்தில் அதிகளவில் பங்கு கொள்ளும் காபனீரொட்சைட் வாயுவை குறைப்பதற்கான உறுதிப்பாட்டுடனான ஒப்பந்தம் ஏன் சர்ச்சைக்குரியதாக இருக்கிறது ? பச்சைவீட்டு வாயுக்கள் வெளியேற்றத்தை கட்டுப்படுத்தும் முயற்சிகளுக்கு, கணிசமான பொருளாதார செலவினங்களைக் கொண்டிருக்கும் எந்தவொரு ஒப்பந்தமும் நிலைபேறானதாக இல்லை ஏனெனில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறுகிய காலத்தில் காபனீரொட்சைட்டை குறைப்பதற்கு எரிபொருட்களின் பாவனையை குறைத்தல் வேண்டும். இந்த வெளியீட்டைக் குறைக்க முயற்சிப்பது பொருளாதாரத்தை பாதிக்கும், என வளர்ச்சியடைந்த நாடுகள் கருதுகின்றன இங்கு குறுகிய நோக்கம் கொண்ட அரசியல் மற்றும் பொருளியல் பிள்ளைகள் காணப்படுகின்றமையை விளங்கிக்கொள்ளலாம்.

பச்சை வீட்டு விளைவுகள் மற்றும் மேம்பட்ட பச்சை வீட்டு விளைவுகளின் தாக்கங்கள் பூமி சூடாக இருப்பதற்கு பிரதானமானவை என்பதனை விஞ்ஞானிகள் ஏற்றுக்கொள்கின்றனர். காபனீரொட்சைட்டு, நீராவி, நைட்ரிக் ஒக்சைட் மற்றும் மெதேன் ஆகிய பச்சை வீட்டு வாயுக்கள் சூரியனில் இருந்து குற்றலையாக வெளியிடப்படும் கதிர்கள் புவியினால் நெட்டலைகளாக வெளியிடப்படுகின்றன. இவ்வாறு நெட்டலைகளாக வெளியிடப்படும் கதிர்களை பச்சை வீட்டு வாயுக்கள் உறிஞ்சுகின்றன. வளிமண்டலத்தில் போதியளவு பச்சைவீட்டு வாயுக்களின் சேர்க்கை மனித உயிர்வாழ்க்கைக்கு இன்றியமையாத அம்சமாக இருக்கும், அதே வேளை பச்சை வீட்டு வாயுக்களினால் உறிஞ்சப்படும் நெட்டலைகளின் வீதம் அதிகரிக்கும். இதனால் சுற்றாடலில் பச்சை வீட்டு வாயுக்கள் சூரியனின் வெப்பத்தை உறிஞ்சுவதனால் இது பூமியை வெப்பமடையச் செய்கின்றது.

மனிதனின் செயற்பாடுகள் காரணமாக பச்சை வீட்டு வாயுக்களின் வெளியேற்றம் வளிமண்டலத்தில் சேர்வதன் மூலம் காபனீரொட்சைட்டின் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக கூறுகின்றனர் கைத்தொழில் புரட்சியின் காரணமாக காபனீரொட்சைட்டின் அளவு சுமார் 290 PPM இருந்து 440 PPM ஆக உயர்ந்துள்ளது இருப்பினும் வளிமண்டலத்தினுள்ள அக சிவப்பு ஒளியின் உறிஞ்சு நிலைகளுக்கு மனிதர்கள் பங்களிக்கவில்லை.

1988 ஆம் ஆண்டில் இரண்டு நிகழ்வுகள் அதிகரித்த பச்சை வீட்டு விளைவு கோட்பாட்டை புதுபித்தது. அமெரிக்காவில் வழக்கத்திற்கு மாறாக வெப்பநிலை அதிகரித்துள்ளது. என்று அமெரிக்கா விண்வெளி ஆய்வு நிறுவன இயக்குநர் ''ஜேம்ஸ் ஹான்சென்'' குறிப்பிட்டுள்ளார். இந்த அறிக்கை பரந்தளவில் ஊடக கவனத்தை ஈர்த்தது 1988 ஆம் ஆண்டில் உலக வானிலை அமைப்பு, (WMO) மற்றும் ''ஐ.நா.சுற்றுச்சுழல் திட்டம்'' (UNEP) அகியவற்றுடன் இணைந்து IPCC ஆல் தயாரிக்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அறிக்கைகள் நம்பகத்தன்மை வாய்ந்தவையாக காணப்படுகின்றன. காலநிலை மாற்றம் குறித்து ஐக்கிய நாடுகள் கொள்கை காலநிலை மாற்றத்திற்கு வழிவகுக்கும் ஏனெனில், ஊடகங்களும் கொள்கை வகுப்பாளர்களும் பச்சை வீட்டு வாயுக்களின் வெளியேற்றத்திற்கு தமது ஆதரவான கருத்துக்களை வழங்கி வருவது உலகலாவிய ரீதியில் சாதகமான நிலைமைகளை எதிர்காலத்தில் தோற்றுவிக்கும்.

விஞ்ஞானிகள் காலநிலை குறித்து கணினியின் பயன்பாட்டுடன் புவி வெப்பமடைதலை ஆராய்கின்றனர். இந்த மாதிரிகள் கதிர்வீச்சு வழி இடமாற்றம் மற்றும் பிற நிகழ்வுகளின் இயற்கைவியல் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டவை கணினியின் திறனில் உள்ள வரம்புகள் மற்றும் காலநிலை அமைப்பின் சிக்கலான வடிவம் காரணமாக எளிமைப்படுத்தல்கள் அவசியமாகின்றது. அனைத்து நவீன காலநிலை மாதிரிகளும் இவற்றுடன் பிணைந்த ஒரு வளிமண்டல மாதிரியினை உள்ளடக்குகின்றன. சில மாதிரிகள் பௌதீக மற்றும் உயிரியல் (நிகழ்) முறைகளை உள்ளடக்கியிருக்கின்றன. இந்த மாதிரிகள் எல்லாம் பச்சை வீட்டு வாயுக்கள் அதிகரித்துள்ளமையினால் காலநிலை வெப்பமுற்றுள்ளதைக் காட்டுகின்றது.

ஐ.பி.சி.சி அறிக்கைகள்

1990 இல் வெளியிடப்பட்ட முதலாவது அறிவியியல் மதிப்பீட்டு அறிக்கை ஐக்கிய நாடுகள் சபையின் முதல் அறிவிப்பாகும் இது காலநிலை மாற்றத்திற்கான ஐ.நா கட்டமைப்பு ஒப்பந்தத்திற்கான அடித்தளங்களை அமைத்தது. பிரேசில் ரியோ-டி-ஜெனிரோலில் சுற்றுச்சூழல் மற்றும் மேம்பாட்டுக்கான 1992 ஐக்கிய நாடுகள் மாநாட்டில் தயாரிக்கப்பட்ட ஒரு உடன்படிக்கையாகும் இந்த உடன்படிக்கையில் நாடுகள் தாமதமாகவே தங்கள் பச்சை வீட்டு வாயுக்கள் வெளியேற்றத்தின் அளவை 2000 ஆம் ஆண்டுக்குள் 1990 ஆண்டின் மட்டங்களுக்கு குறைக்க வேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளன. இதில் 150ற்கும் மேற்பட்ட நாடுகள் கையெழுத்திட்டாலும் இவ்விலக்கை அடைவதற்கான வாய்ப்புகள் மிகவும் குறைவாக காணப்படுகின்றன.

IPCC யின் இரண்டாம் அறிவியல் மதீப்பீடு 1996 இல் தயாரிக்கப்பட்டது. பச்சை வீட்டு வாயுக்களின் வெளியீடுகளை 1990 இன் நிலைகளுக்கு உறுதிப்படுத்தாமல் போனதுடன், 1996 அறிக்கையின் உத்தியோகப்பூர்வ குழுக்களில் "காலநிலைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றிய ஒரு தெளிவான மனித செல்வாக்கு இருப்பதாக ஆதாரச் சமநிலை சான்றுகள் கூறுகின்றனர் "காலநிலை மாற்றத்தைத் தடுக்க மேலும் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று பல தரப்பினர் அழைப்பு விடுத்துள்ளார். வளர்ந்த நாடுகள் தற்போது ''பச்சை வீட்டு வாயு நுகர்வில் கட்டாய கட்டுப்பாடுகள் அமுல்படுத்த வேண்டும்." என்று நிர்வாகிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் IPCC அறிக்கைகள் கால நிலை மாற்றத்தைச் சுற்றியுள்ள நிச்சயமற்றத் தன்மைகள் பற்றி பல எச்சரிக்கைகள் நிறைந்திருக்கும் பெரிய ஆவணங்களாகும் இருப்பினும் கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் செய்தி ஊடகங்கள் பெரும்பாலும் இந்து எச்சரிக்கையை தவறவிடுகின்றன பொதுமக்களுக்குச் செய்தி ஊடகத்தால் அறிக்கையிடப்பட்ட அறிக்கைகள் கிடைப்பது குறைவாக உள்ளன. இதன் நம்பகத் தன்மையில் நிச்சயமற்ற நிலை உலகலாவிய ரீதியில் காணப்படுகின்றது.

எவ்வாறாயினும் உலக மக்கள் அனைவருக்கும் பச்சை வீட்டு வாயுக்களின் தாக்கத்தை உணர்ந்து செயற்படும் போதே காலநிலையில் மாற்றம் ஏற்படுவதை தவிர்க்கலாம் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.



திருமதி A.S.N. பர்ஹானா கலீல்
ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் பொருளாதாரம்





ஒரு நாட்டின் அபிவிருத்தியானது அந்நாட்டினது பொருளாதாரத்திலேயே தங்கியுள்ளது அவ்வகையில் ரத்தை நோக்கும் போது. 93.45 பில்லியன், 298.310 பில்லியன் மற்றும் ஒரு தனி நர் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2018 ம் ஆண்டில் 13 480 பில்லியன் தனிநபர் கொள்வனவு சக்தி ஆகியவற்றில் பொருளாதாரம் சமீபத்தில் இலங்கையில் அதிகமான வலுவான வளர்ச்சி விகிதங்களை கொண்டுள்ளது. 2012 காலப்பகுதியில் இலங்கையின் பொருளாதாரம் வலுவான வருடாந்த வளர்ச்சியை 6.4% இலங்கையின் பொருளாதாரம் வலுவான வருடாந்த வளர்சியை சதவீதத்தில் காண முடிந்தது அதன் பிராந்திய சக வாழ்வை விடவும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இது தெற்காசிய பிராந்தியத்தில் மற்ற நாடுகளுக்கு முன்னால் உள்ளது.

மூன்று தசாப்தகால உள்நாட்டு யுத்தம் முடிவடைந்ததில் இருந்து நீண்ட கால மூலோபாய மற்றும் கட்டமைப்பு அபிவிருத்தி சவால்களில் கவனம் செலுத்தி வருகின்றது இது ஒரு உயர் நடுத்தர வருமான நாட்டிற்கு மாற்றும் முயற்சியாகும்.

நாட்டின் முக்கிய பொரளாதார பிரிவுகள் சுற்றுலா, தேயிலை ஏற்றுமதி, ஆடை, ஜவுளி, அரிசி உற்பத்தி மற்றும் பிற விவசாயப் பொருட்கள் இந்த பொருளாதாரத் துறைகளுக்கு மேலதிகமாக, வெளிநாட்டு வேலைவாய்ப்பு, வெளிநாட்டு வேலைவாய்ப்பில் மிகவும் பங்களிப்பு செய்கின்றது. தொண்ணூறு வீதம் இலங்கையர், மத்திய கிழக்கு நாடுகளில் வாழ்கின்றனர்.

மில்லேனியம் அபிவிருத்தி இலக்கு (MDG) வறுமையை ஒழிப்பதற்கான இலக்கை இலங்கை சந்தித்துள்ளதுடன். மற்ற (MDG) களை சந்திக்க மற்றைய தெற்காசிய நாடுகளை சமாளிக்கும் பாதையில் உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2002 முதல் 2009 வரை இலங்கையில் வறுமையில் பெரும் சரிவு ஏற்ப்பட்டது. 23 % இருந்து 9 %மாக வீழ்ச்சி கண்டுள்ளது. வறுமைக் கோட்டின் 20 %இற்குள் ஏழைகளாக வசிப்பவர்கள், இனி வறுமையில் வாழும் 9 %த்தினர் வறுமைக்கு தள்ளப்படுவதற்கு காரணமாக இருக்கும் அதிர்ச்சிக்கான பாதிப்புகளுக்கு உள்ளாகின்றனர்.

இலங்கையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 40%இற்கும் குறைவான வேலைவாய்ப்புக்களை உருவாக்கும் ஒரு சவாலான நிலை உள்ளது. இலங்கை சமூக தேவை, ஆளுமை மற்றும் நிலைத்தன்மை ஆகியவற்றில் பல சவால்களை எதிர்கொள்கிறது.

இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியை கணக்கிடும் கைத்தொழிலுக்குரிய பொருளாதார நடவடிக்கைகளில் பண ரீதியான பெறுமதி அடிப்படை விலை, அடிப்படையிலான மொத்தம் காட்டப்பட்ட பெறுமதியாகும். நிறுவனதுறை என்பது மொத்த பொருளாதாரத்தில் சொத்துக்களை உரிமையாக்கிக் கொள்ளல், பொறுப்பேற்றல் மற்றும் ஏனைய நிறுவனங்களுடன் கொடுக்கல் வாங்கல்களுக்காக தொடர்புகளை ஏற்படுத்தும் ஆற்றலை கொண்ட பொருளாதார அலகு ஆகும்.

இலங்கை மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கை 2015 அடிப்படையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பெறுமதி நடைமுறையில் உள்ள விலையில் நாட்டின் உற்பத்தியின் பெறுமதி காலத்தில் இணைந்து வேறுபட்டுள்ளது? இல்லையா? என்பதை அறிந்து கொள்வது தேசிய கணக்கீட்டின் ஒரு முக்கிய நோக்கம் ஆகும். குறிப்பிட்ட காலத்தினுள் உற்பத்தி செய்த பொருட்கள் சேவைகளின் பெறுமதியை அந்த வருடத்தில் காணப்படும் விலையில் கணிப்பிடப்படுவதனால் நடைமுறை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி எனப் பெறுமதி பெறப்படும்.

எனவே இலங்கையின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டு தற்கால நிலையை விட பொருளாதார ரீதியில் இலங்கையை முன்னேற்ற வழிவகுப்போம்.

திருமதி றிஸ்பா பாருக்
ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவரிடையே மனப்பாங்கு மாற்றம் வராதது ஏன்?

குருகுலக்கல்வி முதல் நவீன யுகக்கல்வி வரை கல்வியின் வளர்ச்சி கரை கண்டு வளர்ந்து கொண்டே வந்துள்ளது. அன்று தொட்டு இன்று வரை சிஷ்யர்கள் மாணவர்களாயினர், குரு ஆசானாகி ஆசிரியராகி வழிகாட்டுபவராகி இப்போது வசதியளிப்போராகவும் மாறி விட்டனர். ஆச்சிரமத்தில் நடந்த கல்வி பாடசாலை, கல்லூரி, கலாசாலைக்கல்வி என விரிவடைந்து மாற்றத்தைக் காட்டியது.

ஆனால் இன்று மாணவர்கள் பலரிடையே மனப்பாங்கு மாற்றம், மட்டும் கரை காணாதது ஏன் என்று புரியவில்லை? மாணவர்கள் கற்றலில் ஈடுபட்டு சிறப்புத் தேர்ச்சி பெற்று 9 Aக்கள், 8 Aக்கள் என பாடத்திறமைகளை காட்டுகின்றனர். ஆனால் தரம் 1 இல் 'அ' வை கைப்பிடித்து எழுத வைத்த ஆசிரியரையும் அடுத்தடுத்த வகுப்புகளுக்கு வழிகாட்டிய ஆசிரியர்களையும் கை நொடிக்கும் அல்லது கண் இமைக்கும் நேரத்திற்குள் மறந்து விடுகின்றனர்.

அங்கு மாணவர்களிடம் அறிவு மட்டும் ஊட்டப்பட்டுள்ளதே தவிர மனதளவில் அவர்கள் மாற்றம் பெறவில்லை என்பது அதற்கு பெற்றோரின், ஆசிரியர்களின் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும்.

அதனால் தான் மாணவர்கள் பஸ்ஸில் செல்லும் போது ஆசிரியர் நின்று கொண்டு வர அவர்கள் ஆசனத்தில் அமர்ந்து கொண்டு சிறிதளவேனும் சிந்திக்காது வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியை கற்பிப்பவர்கள் கடவுளுக்குச் சமமானவர்கள். அவர்கள் ஓரிடத்தில் நின்றால் மாணவர்களுக்கு உட்கார்ந்து கொண்டு இருக்க நினைக்காது. மாறாக "இங்கு அமருங்கள்" என்று தான் கூறத் தோன்றும். ஏன் இந்த மாற்றம் இல்லாது போனது? நாகரிக மோகமா? தொடர்பு சாதன கோளாறா? பெற்றோர், ஆசிரியர்களின் கவனக் குறைவா காரணமாகின்றது.

எத்தனை விதமான உயர் கல்வியையோ, உயர் தொழிலையோ இம்மாணவர்கள் பெற்றாலும் தங்களுடைய மனப்பாங்கு மாற்றத்தில் வேறுபாட்டினை கொண்டு வரா விட்டால் கற்றல் நடைபெறும் இடங்களிலோ, தொழில் பார்க்கும் இடங்களிலோ வாழ்க்கையின் அடுத்த படிநிலைகளிலேயோ பாரிய வீழ்ச்சியை சந்திக்க வேண்டியிருக்கும்.

அடுத்ததாக மாணவர்களுக்கு நாவடக்கம் மிக முக்கியம்.

"யாகாவராயினும் நாகாக்க காவாகால்
சோகாப்பர் சொல் இழுக்குப் பட்டு"

என்பது திருவள்ளுவர் தெளிவுரை. அப்பொழுது தான் வாழும் வீடு, பாடசாலை, தொழிலிடம் என இவ்வாறான இடங்களிலும் வாழ்நாள் சாதனையாளராக தடம் பதிக்கலாம். அடுத்து பணிவு இது மாணவர்களிடையே இல்லாது போனால் வாழ்க்கையிலும் உயர் நிலையை அடைய முடியாது போகும். எந்த இடத்திலும் பொருத்தமற்ற சொற்பிரயோகங்களை மேற்கொண்டால் அதன் பின் விளைவு மிக மோசமானதாகவே அமையும். பணிந்து போதல் முக்கிய சிக்கல்களை இல்லாது செய்து வாழ்வை வளப்படுத்தும்.

மாணவர்கள் தங்களுடைய நடை, உடை, பாவனையில் மாற்றத்தை கொண்டு வர வேண்டும் என்று எண்ணினாலே மனப்பாங்கில் மாற்றம் வரும் என்பது வெள்ளிடைமலை.

எனவே எந்த ஒரு பிள்ளை மனப்பாங்கு மாற்றத்துக்குள்ளாகி குருவையும், பெற்றோரையும், மூத்தோரையும், அயலோரையும், சிறியோரையும் நேசிக்கிறதோ அன்றே சிறந்த பிரஜை நாட்டுக்கு கிடைக்கப் பெறும் என்பதில் ஐயமில்லை.

திருமதி மேனகா குணசேகரன்
ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பை விதைத்து பண்பை அறுவடை செய்வோம்

**" To be normal during the adolescent period is by itself abnormal"**
**- Anna Freud**

என உளவியலாளர் சிக்மன் பிராய்ட் அவர்களின் மகளான அன்னா பிராய்ட் வளரிளம் (Teen age) பற்றிக் குறிப்பிடுகின்றார். இந்த உளவியல் உண்மையை இலங்கையின் கல்வித்-துறையிலுள்ள எத்தனைப்பேர் உணர்ந்து செயற்படுகின்றார்கள் என்று சிந்தித்துப் பார்த்தால் அது விரல்விட்டு எண்ணிவிடக்கூடியதே! என்பது மிகவும் கசப்பான உண்மை. இலங்கையின் ஆசிரியத்துவத்தில் "உளவியல் கோட்பாடுகள்" வெறும் ஆசிரியப் பயிற்சிக்கு மட்டுமே வரையறுக்கப்பட்டுவிட்ட நிலையில் பாடசாலைகளில் அது கடுகளவேனும் பயன்படுத்தப்படுகின்றதா என்பது கேள்விக்குறியே!

உலகிலுள்ள ஒவ்வொரு மனிதனது இயல்புக்கும் நடத்தைக்கும் பின்னால் ஏதோ ஓர் உளவியல் காரணி ஒளிந்து கொண்டுள்ள நிலையில் அவற்றைத் துள்ளியமாக அறிந்து செயற்படாத சூழல் ஒருபோதும் நமக்கு வசப்படப் போவதில்லை. அத்தகைய வசப்படாத சூழலில் நமது நோக்கம் ஒருபோதும் நிறைவேறப் போவதில்லை. இவ்விதிக்கு பாடசாலைகள் மட்டும் விதிவிலக்கானவையல்ல. உளவியல் ரீதியாக மாணவர்களை அணுகும்போது சாதிக்கக் கூடியவை ஏராளம். எந்த ஒரு ஆசிரியர் மனிதனது அடிப்படை உளவியல் தேவைகளையும் நடத்தைகளுக்கான உளவியல் காரணிகளையும் உணர்ந்தும் ஏற்றும் கொள்கின்றாரோ அவருக்கு அனைத்தும் வசப்படுகின்றது.

உண்மையில் மனித இயல்பின் மிக ஆழமான உளவியல் தூண்டுதல் " முக்கியமானவராக விளங்க வேண்டும்." என்பதாகும். இது ஒரு தீவிரமான அடிப்படைத் தாக்கம். மக்கள் தங்களின் இந்த இதய தாக்கத்தை நேர்மையாக தணிக்கும் ஒருவரின் காலடியில் கட்டுண்டு கிடப்பார்கள். இந்த முக்கியத்துவ உணர்வு குறித்த விருப்பம்தான் காலத்தால் அழியாத புதினங்களைப் படைக்க சார்லஸ் டிக்கன்ஸிற்கு உத்வேகம் அளித்தது. இவர் மட்டுமல்ல ஜார்ஜ் வாஷிங்டன்கூட " பலம் பொருந்திய அமெரிக்க அதிபர் அவர்களே" என்று அழைக்கப்படவேண்டும் என விரும்பினார். " மேன்மை பொருத்திய மாட்சிமை மிக்க அரசியார்" என்று முத்திரையிடப்படாத எந்தக் கடிதத்தையும் திறக்க மறுத்தார் பேரரசி கேதரின். முக்கியத்துவ உணர்வைப் பெறுவதற்குப் போராடிய பல பிரபலமானவர்களின் சுவாரசியமான இத்தகைய எடுத்துக்காட்டுக்கள் மனிதர்களின் உளவியல் தேவைக்கு சான்று பகர்கின்றன.

இதே முக்கியத்துவ உணர்வுதான் பல சிறுவர்களும், சிறுமியரும் பல தீய கும்பல்களில் சேர்வதற்கும் குற்றச் செயல்களில் ஈடுபடுவதற்கும் வழிவகுக்கின்றது. சீனாவின் பீஜிங் நகரில் ஒரு நவீன மருத்துவமனையைக் கட்டுவதற்கு பணம் வழங்கியதன் மூலம் ஜான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டி. ராக்.ஃ.பெல்லர் தனது முக்கியத்துவ உணர்வை பூர்த்தி செய்துகொண்ட அதேவேளை ஒரு கொள்ளைக்காரனாக, வங்கிகளில் திருடுபவனாக, கொலைகாரனாக இருப்பதன் மூலம் அமெரிக்காவின் டில்லிங்கர் தன் முக்கியத்துவ உணர்வைப் பெற்றான். அமெரிக்க உளவு நிறுவனமான எ.ஃ.ப்பிஐ (FBI) அவனை மும்முரமாக தேடிக்கொண்டிருந்தபோது, மின்னசோட்டா மாநிலத்தில் ஒரு பண்ணை வீட்டில் அதிரடியாக நுழைந்து "நான்தான் டில்லிங்கர்," என்று கூறினான். பொதுமக்களின் பிரதான எதிரி என்பதில் அவன் பெருமிதம் கொண்டிருந்தான். "நான் உங்களைத் தாக்கப் போவதில்லை, ஆனால் நான்தான் டில்லிங்கர்." என்று கூறினான் அவன். ஒரு சராசரி இளம் குற்றவாளி தான் கைது செய்யப்பட்டு காவலில் அடைக்கப்பட்ட பிறகு முதலில் கேட்பது, அவனை ஒரு கதாநாயகனாகச் சித்தரித்துச் செய்திகளை வெளியிட்டுள்ள பரபரப்பான செய்தித்தாள்களைத்தான் என்று தெரிவிக்கின்றார் நியூயோர்க்கின் காவல்துறை ஆணையாளராக இருந்த ஈ. பி. மல்ரூனி. இத்தகைய குற்றவாளிகளின் முக்கியத்துவம் பெறும் விருப்பம் அல்லது கணிப்புத் தேவை தம் மாணவப் பருவத்தில் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்டிருந்தால் இத்தகைய எதிர்மறையான வகையில் முக்கியத்துவம் பெற ஒருபோதும் முனைந்திருக்க மாட்டார்கள்.

முக்கியத்துவ உணர்வு குறித்த இந்த ஆழ்மன விருப்பமானது நாம் தினமும் சந்திக்கும் ஒவ்வொரு மாணவரிடத்திலும் குவிந்து கிடக்கின்றது. தாம் பாராட்டப்பட வேண்டும், தாம் அன்பு செலுத்தப்பட வேண்டும், தாம் கணிக்கப்பெற வேண்டும் என்ற ஆழ்மன வேட்கையோடு பள்ளிக்கு வரும் மாணவர்கள் வீட்டிற்குத் திரும்பும் போது என்ன எடுத்துச் செல்கின்றார்கள்? குட்டி முயற்சிகளால் பெற்ற ஏராளமான பாராட்டுக்கள், மதிப்பு மிக்க ஆளுமை, தன்னம்பிக்கை, அன்பு இவைகளையா? அல்லது உடல் வலி, வடு, மனக்காயம், மனவலி, கடுஞ்சொற்கள் தந்த வேதனை, வகுப்பில் எல்லோர் முன்னிலையிலும் தன்னைக் குற்றம் சாட்டியதால் ஏற்பட்ட அவமானம், பதைபதைப்பு இவைகளையா? விவாதத்திற்குரிய இக்கேள்விக்கான விடையே ஒரு மாணவனது அறிவு, திறன், மனப்பாங்கு ஆகிய மூன்றினதும் விருத்தியைத் தீர்மானிப்பதில் பெரும் செல்வாக்குச் செலுத்துகின்றது என்றால் அது மிகையாகாது.

வகுப்பறையை தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் பொருட்டு தரம் ஒன்று மாணவர் வாயில் பிளாஸ்தர் ஒட்டுவது முதற்கொண்டு பயிற்சிக் கொப்பிகளை வெளியில் வீசி எறிவது, ஈறாக யௌவனப் பருவத்தின் இயல்பான காதல் உணர்வுகளை எல்லோர் முன்னிலையிலும் கொச்சைப்படுத்திப் பேசுதல் வரை தினமும் பல்வேறு வடுக்களை சுமந்து கொண்டே மாணவர்கள் வீடு செல்கின்றனர். சிலர் என்றோ ஓர் நாள் அறியாமல் தவறிழைத்தமைக்காக குத்தப்பட்ட முத்திரையை கடைசிவரை அகற்றிக் கொள்ள இயலாமலும் இன்னும் சிலர் தம் தவறுகளைத் திருத்திக் கொள்ள வாய்ப்பு வழங்கப்படாமலும் இன்னும் சிலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறமையிருந்தும் வாய்ப்புகள் மறுக்கப்பட்டு பல்வேறு பலிவாங்கல்களுக்குட்பட்டு முக்கியத்துவமிழந்து தமது பள்ளி வாழ்க்கையை நிறைவு செய்து வெளியேறும் அதே வேளை இன்னும் சிலர் தம் பள்ளி வாழ்க்கையிலிருந்து பாதியிலேயே விடைபெற்றுச் செல்கின்றனர். இவ்வாறு தம் முக்கியத்துவத்தை இழந்து உளவியல் ரீதியான தாக்கத்திற்கு ஆளாகும் மாணவர்களில் பெரும்பாலானவர்களுக்கு பாடசாலைக் காலத்திலோ அல்லது பிற்காலத்திலோ பல்வேறு ஆளுமைக் குறைபாடுகள் ஏற்படுகின்றன. அதுமட்டுமன்றி பலர் நெறிபிறழ்ந்து போவதற்கும் சமூகவிரோதச் செயற்பாடுகளில் ஈடுபடவும் இதுவே காரணமாகின்றது. ஆகவே சமூகத்தில் ஒரு ராக்ஃபெல்லர் உருவாகுவதும் ஒரு டில்லிங்கர் உருவாகுவதும் பாடசாலை பெற்றுக் கொடுக்கும் அனுபவங்களைச் சார்ந்ததே.

உண்மையில் மாணவருக்கு கிடைக்கும் இத்தகைய அனுபவங்களுள் சில கசப்பான அனுபவங்கள் சில சமயங்களில் உயிரையே பறித்து விடுகின்றன. ஆம் வகுப்புத் தலைவிக்கு மாணவன் ஒருவனால் வழங்கப்பட்ட காதல் கடிதமொன்றை கண்டெடுத்த வகுப்பாசிரியர் "பௌத்த கலாசாரத்தைப் போதிக்கும் பேராசிரியரின் மகளின் ஒழுக்கம் இப்படி இருக்கிறது." என வகுப்பறையில் அனைத்து மாணவர்களின் முன்னால் நிந்திக்கின்றார். அதன்பின்னர் வீடு சென்ற மாணவி அருகிலுள்ள குளத்தில் குதித்து தன் உயிரை மாய்த்துக் கொள்கிறாள். மீரிகம பிரதேசத்தைச் சேர்ந்த பாடசாலையொன்றில் நிகழ்ந்த இந்த சம்பவம் இலங்கையின் கல்வித்துறையில் நிகழ்ந்த, நிகழ்ந்துகொண்டிருக்கின்ற இத்தகைய பல சம்பவங்களுள் ஒன்றேயன்றி ஒரேயொரு சம்பவம் அல்ல. இச்சம்பவம் இடம்பெற்று இன்றைக்கு ஏறத்தாள பதினைந்து ஆண்டுகளுக்கும் அதிகமாகிவிட்ட நிலையில் மனித நாகரிகம் மிக உயர்ந்து விட்ட, கல்வித்துறையும் கல்விக்கான வாய்ப்புகளும் விசாலமடைந்துவிட்ட இன்றைய சமூகத்திலும் தம் உளவியல் அறிவை வளர்த்துக் கொள்ளாத ஆசிரியர்கள் இதே சம்பவங்களை நிகழ்த்துவது மிகவும் வேதனைக்குறியது. கடந்த வருடம் செல்லிடப்பேசி ஒன்றை வைத்திருந்தமையின் பேரில் வகுப்பில் அனைத்து மாணவர் முன்னிலையிலும் வகுப்பாசிரியரால் அவமானப்படுத்தப்பட்டு தற்கொலை செய்து கொண்ட நான்காம் தரத்தில் கல்வி பயின்ற மாணவியின் சம்பவம் இன்றும் அவ்வாறான சம்பவங்கள் நிகழ்கின்றன என்பதற்கு நல்ல எடுத்துக்காட்டு. இது இவ்வாறிருக்க தினமும் பல நூற்றுக்கணக்கான மாணவர்கள் பாடசாலைச் சூழலில் பல்வேறு விமர்சனத்திற்கு ஆளாகி மனதளவில் மரணித்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பதும் மறுக்க முடியாத உண்மை. பிள்ளையொன்று தன் வளர்ச்சிப் பருவத்தில் பல்வேறு படிநிலைகளை கடந்து வருகின்றது. இவ்வாறு கடந்து வரும் ஒவ்வொரு பருவத்திலும் வெவ்வேறு உடலியல் மற்றும் உளவியல் மாற்றங்கள் நிகழ்கின்றன. எனவே இத்தகைய மாற்றங்களால் அவர்களது இயல்புகளும் நடத்தைகளும் மாற்றமடைகின்றன. இம்மாற்றங்கள் இயல்பானவை என்பதை முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய கல்விமுறையானது ஒழுக்கம் மற்றும் தரம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டது. இவற்றுக்கு ஒரு மாணவனால் பங்கம் ஏற்படும்போது பள்ளி எடுக்கும் தவறான நடவடிக்கைகளால் எத்தனை அசம்பாவிதங்கள் நடந்து விடுகின்றன. ஆம் அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில்

" ஒரு குழந்தை தற்கொலை செய்துகொள்கிறது."

" ஒரு குழந்தை பள்ளிக்கு வருவதை குறைத்துக் கொள்கின்றது."

" ஒரு குழந்தை ஊரைவிட்டே ஓடிவிடுகிறது"

" ஒரு குழந்தை கடுமையான மன உளைச்சல் நோய்க்கு ஆளாகின்றது."

" ஒரு குழந்தை ஆசிரியைக்கு எதிராக கத்தியை நீட்டுகிறது."

" ஒரு குழந்தை ஆத்திரத்தோடு தன்னைவிட பலமற்ற குழந்தை மீது பாய்கின்றது."

" ஒரு குழந்தை தன் சகாக்களோடு மது அருந்தி முகநூலில் பகிர்கிறது."

இவ்வாறான குழந்தைகளின் ஒழுங்கீன செயல் ஒவ்வொன்றின் பின்னேயும் ஏதோ ஒரு காரணம் இருக்கிறது. ஆனால் குழந்தைத் தரப்பு நியாயத்தைக் கேட்க பெரும்பாலும் எவரும் முன்வருவதில்லை. ஒரு குழந்தை பலவித குடும்ப சூழ்நிலையிலிருந்து பலவித மனநிலையோடு பள்ளிக்கு வரலாம். பல குடும்பங்கள் வறுமையாலும், கசந்த உறவுகளாலும் நொருங்கிப் போனவை. அந்தக் குடும்பங்களில் இருந்து வரும் பிள்ளைகளுக்கு பள்ளிதான் ஓர் ஆறுதல் எனவே அக்குழந்தைகள் வீடு திரும்பும் போது ஓரளவுக்கு மகிழ்வான மனநிலையோடு செல்வதை பள்ளி உறுதி செய்யவேண்டும்.

மேலும் "கல்வியின் சக்கரவர்த்தி குழந்தையே. குழந்தை எந்த அளவிற்கு வகுப்பறையில் மதிக்கப்படுகின்றதோ அந்த அளவிற்கு கற்றல் சாத்தியமாகிறது. எது தவறு என்பதன் மீதே கவனம் செலுத்தும் 'தண்டனை' கல்வியைவிட, சரியான நடத்தையை தேடி பாராட்டி உயர்த்தும் முன்னுதாரணக் கல்வியே சிறப்பானது." என கூறுகின்றார் ரஷ்ய கல்வியியலாளர் மெக்கன்ரோ. இவையே நாம் கற்றுத் தெளிய வேண்டிய வகுப்பறைப் பாடங்கள் ஆகும். இதனையே நல்ல நடத்தைக்காக வெகுமதியளிக்கப்படும் ஒரு விலங்கு, மோசமான நடத்தைக்காக தண்டிக்கப்படும் விலங்கைவிட மிக வேகமாக கற்றுக் கொள்ளும் என்பதையும், தான் கற்றுக் கொண்டவற்றை அதிக ஆற்றலுடன் தன் நினைவில் தக்க வைத்துக்கொள்ளும் என்பதையும் உலகப் புகழ்பெற்ற உளவியலாளர் பி. எஃப் ஸ்கின்னர் தன் பரிசோதனைகள் மூலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிரூபித்துக் காட்டியுள்ளார். இது மனிதர்களுக்கும் பொருந்தும் என்பதை பின்னர் நடத்தப்பட்ட ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

மாணவர்களைக் காயப்படுத்துவது அவர்களை மாற்றாது. மனதைப் புண்படுத்தும் விமர்சனங்களும் கண்டனங்களும் இறுதியில் எந்தவிதமான விளைவையும் ஏற்படுத்தப் போவதில்லை. பாராட்டும் அங்கீகாரமும் மட்டுமே விரும்பத்தக்க விளைவுகளை ஏற்படுத்தும் என்பதே நிதர்சனமான உளவியல் உண்மை.

**"எப்போது பள்ளிக்கு விடுமுறை என அறிவித்தால் குழந்தைகள் மனம் வருந்துகிறார்களோ, பள்ளி வேண்டும் என அடம் பிடிக்கிறார்களோ அப்போதுதான் உண்மையான கல்வி நடக்கிறது என்று அர்த்தம்."**

**- ஜோர்ஜ் பெர்னாட்ஷா**

செல்வி. பழனியப்பன் லிங்கேஸ்வரி ( Professional Counselor )
B.Com, PGD in Education, Diploma in Counselling,
PGD in Counselling ®, Msc in Counselling and Psycho therapy. ( R)
ஆசிரியர்: ஆலோசனைக் கூறலும் வழிகாட்டலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் பார்வையில் இலக்கியமும் சமூகமும்

'இலக்கியம் பயில்வது ஒரு வகை பயணம் தான்' என எடிசன் எனும் அறிஞர் கூறுகிறார். 'இலக்கியமாவது பாரதமும் இராமாயணமும் போன்றன' என நாச்சினார்கினியர் கூறுகிறார். இந்த இலக்கிய பயணத்தின் மூலம் ஒரு குறிப்பிட்ட மக்கள் கூட்டத்தின் வாழ்க்கை அமைப்பையும், மனப்போக்குகளையும் அறிய கூடியதாக இருக்கின்றது. இலக்கியம் காலம், இடம் எனும் தளங்களையும், வாசகரின் அறிவுத்திறன்கள், ஏற்புமுறைகள் முதலியவற்றை எதிர்கொண்டு வாழ்கின்ற திறம் பெறும் என்று திறனாய்வாளர்கள் கூறுகின்றனர். படைப்பு - படைப்பாளன் - சமுதாயம் இவை தமக்குள் நெருங்கிய பிணைப்பினை கொண்டவை என சமூகவியல் திறனாய்வுகள் கூறுகின்றன. மனிதன் தன் உணர்வின் வெளிப்பாடாக இலக்கியத்தை தோற்றுவிக்கிறான். இலக்கியம் அது எழுந்த காலத்தின் எல்லாப் பகுதிகளையும் முழுமையாக படம்பிடித்து காட்டும் வல்லமையுடையது.

மக்கள் வாழ்வாங்கு வாழும் முறையை இலக்கியம் காட்டுகிறது. மக்கள் வாழ்வே இலக்கியம். இலக்கியமே மக்கள் வாழ்வு எனலாம். இலக்கு மனித எண்ணங்களில் குறித்த ஒரு வடிவத்தை பெற்றதால் இலக்கியம் தோற்றம் பெற்றது. 'இலக்கியம் மனித வாழ்வின் அர்த்தத்தை கற்றுக்கொடுக்கிறது, போராட்டங்களுக்கு துணையாகிறது, அவன் கதையை அவனுக்கே கற்றுத்தருகிறது' என்று எமர்ஷன் எனும் அறிஞர் கூறுகிறார். சமூக இயக்கத்தை பற்றி சிந்திக்காத இலக்கியம் மனிதனுக்கு பயன்படாமல் போகின்றது. சங்கம் வைத்து தமிழ் வளர்த்த காலத்திலிருந்து இன்று வரை தமிழ் மொழி நாவல், சிறுகதை, கவிதை, பாடல்கள் என பல்வேறு வடிவங்களில் இலக்கியத்தை சுமந்து வந்துள்ளன.

சங்ககாலத்தில் தமிழுக்கு மேலும் அணி சேர்க்கும் பல இலக்கியங்கள் தோன்றியுள்ளன. அவ்விலக்கியங்கள் மாந்தர்களை விட அவர்களின் உணர்வுகள், ஆசைகள், ஆதங்கங்கள் போன்ற பண்புகளை சிறப்பாக காட்டுகின்றன. சங்ககால சமூகம் இயற்கையோடு ஒன்றித்து வாழ்ந்தது. இதனால் இவ்விலக்கியங்கள் இயற்கையோடு இணைந்த காதல், போர், கலை எனும் பண்புகளை அதிகம் பேசுகின்றன. தமிழ் இலக்கியங்கள் தோன்றிய கால சூழ்நிலைகளுக்கேற்ப அதன் கருப்பொருளை இயற்கை, போர், அறம், பக்தி, விரக்தி என்று பல்வேறு கோணங்களில் மாற்றி கொண்டதை காணலாம். அறிஞர் எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளை அவர்கள் 'காதலும் - போரும் பழந்தமிழ் இலக்கியத்தின் பிரிவாகவும், சமயமும் - தத்துவமும் இடைகால இலக்கியத்தின் சாரமாகவும், அறிவியலும் - மானுடவியலும் இக்கால இலக்கியங்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்காகவும் காணப்படுகின்றன' எனக் கூறுகிறார்.

'ஈன்று புரந்தருதல் என் தலைக்கடனே

சான்றோனாக்குதல் தந்தைக்கு கடனே' என்று சங்க கால செய்யுள் பெண்ணின் சமூகப்பங்கையும், ஆணின் கடமையையும் காட்டுகிறது. 'ஈன்றவளோடு எண்ணக் கடவுளும் இல்' என்று மறுபுறம் இலக்கியம் தாய்மையை கடவுளாக மதிக்கிறது. அந்தந்த காலத்திற்கேற்ப சமூகம் எவ்வாறு இருந்ததோ அதனை அக்கால இலக்கியங்களில் காணலாம். அறம், ஒழுக்கம் காக்கப்பட வேண்டியவை என கருதிய காலப்பகுதியில் தோற்றம் பெற்ற சிலப்பதிகார காப்பியம் சிறந்த அறக்கருத்துக்களை தன்னகத்தே கொண்டுள்ளது. செய்த வினைகள் பிறவிகள் தோறும் தொடர்ந்து வரும் எனும் உயரிய சிந்தனையை இதில் காணலாம்.

அதே போன்று கம்பராமாயணத்தை எடுத்து நோக்கினால், அந்த காலத்தில் காணப்பட்ட பல சமூகப்பண்புகளை இதில் காணலாம். மனிதரின் புறவாழ்வு குறைபாடாக ஒற்றுமையின்மையை காட்டுவதற்காக இராமன் எனும் பாத்திரத்தின் மூலம் தன் தம்பியரோடும், மனிதரிலும் தாழ்ந்த வேடர் குலத்தினரோடும், குரங்கின தலைவரோடும், அரக்கரோடும், பறவைகளோடும் நட்பும், உரிமையும் பாராட்டுபவராக படைத்துள்ளார். கம்பராமாயணத்தில் சமூகத்தின் உயர் பண்புகளான நட்பின் சிறப்பை, கற்பின் உயர்வை, தீமையின் அழிவை, தியாகத்தின் உயர்வை ஒவ்வொரு பகுதிகளிலும் காணலாம், கம்பராமாயணத்தை போன்றே ஏனைய காப்பியங்கள், சிற்றிலக்கியங்கள் அக்கால சமூக நிலையை கூறுவதுடன், சமூகத்தின் வெளிப்பாடே இலக்கியம் எனும் எண்ணப்போக்கை தருகின்றன.

எந்த ஒரு இலக்கியமும் சமுதாயப் பிரச்சினைகளை துல்லியமாக படைத்துக் காட்ட வேண்டும். யதார்த்தமாக அவை அமைய வேண்டும். உண்மையில் இலக்கிய கருப்பொருள் காலத்திற்கு காலம் மாற கூடியவை, மாற வேண்டியவை, 'ஒரு சமூகம் குறித்த காலத்தில் எவ்வகை இலக்கியத்தை ஏற்றுக்கொள்ள தயாராக இருக்குமோ, எவ்வகை இலக்கியத்தை கற்று இன்புறுமோ, அவ்வகை இலக்கியங்களே அக்காலத்தில் உண்டாவது இயல்பு' என பேராசிரியர் வையாப்புரிப்பிள்ளை கூறுகிறார்.

இலக்கிய வளர்ச்சி பாதையில் வாய்மொழி இலக்கியங்கள் தனிச் சிறப்புடையன. மக்களின் வாழ்க்கையோடும், நம்பிக்கையோடும், நடைமுறைகளோடும் நெருங்கிய உறவுடையவை. அக்கால சமூகத்தில் பெண்கள் உரிமையற்று பல கட்டுப்பாடுகளுடன் வாழ்ந்தனர். அவர்களின் உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தர்ப்பத்தை நாட்டார் பாடல்கள் வழங்கின. இலக்கிய உலகிற்கு தாய்மையால் தாலாட்டு கிடைத்தது. நாட்டார் பாடல்களில் அவர்களின் அறிவு, ஆற்றல், அனுபவம், அவலம், ஆசை, துன்பம் எனும் எல்லா உணர்வுகளையும் அறியலாம். இதனை நோக்கும் போது நாட்டார் பாடல்கள் சமூகத்தை காட்டும் கண்ணாடிகளாகவே விளங்கின எனலாம்.

அடுத்ததாக கவிதை இலக்கியங்களை நோக்கினால் அதில் புது திருப்பு முனையை ஏற்படுத்திய மகாகவி பாரதியாரை மறந்துவிட முடியாது. கற்றவர்களிடம் மட்டுமே சிறைப்பட்டிருந்த கவிதையை பொது மக்களிடமும் கொண்டு சேர்த்து சமுதாய கவியாக்கினார். மக்களுக்கு சுதந்திர உணர்வை ஊட்டினார்.

'எண்ணிலா நோயுடையார் - இவர்
எழுந்து நடப்பதற்கும் வலிமையிலார்
கண்ணிலாக் குழந்தை போல் - பிறர்
காட்டிய வழியிற் சென்று மாட்டிக்கொள்வார்' என அக்கால

ஆட்சியில் அடிமைபட்டிருந்த மக்களை சாடுகிறார். பாரதியார் பாடல்களுக்கு கருவாகாத பொருள் இல்லையென்றே கூற வேண்டும். நாட்டின் விடுதலை, தொழில், பெண் விடுதலை, பாலிய திருமணம், கைம்மை நிலை, கல்வி, வாழ்வு நிலையாமை, காதல் என்று எல்லா விடயங்களையும் தன் கவி திறனால் வெளிப்படுத்தி சமூகத்திற்கு உயிர் கொடுத்தார். வெளி உலகமே அறியாத பெண்களை கல்வி உலகிற்கு காலடி பதிக்க வைத்தார்.

'கற்பு நிலையென்று சொல்ல வந்தால் - இரு
கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்' என்றும்
'பெண்ணுக்குள் ஞானத்தை வைத்தான் - புவி
பேணி வளர்ந்திடும் ஈசன்
மண்ணுக்குள்ளே சில மூடர் - நல்
மாதர் அறிவை கெடுத்தார்' என்றும்

பெண்களில் அக்கால சமூக நிலையை உலகிற்கு எடுத்துரைத்தார்.

'இன்பமும் ஓர் கணத்தோற்றம் - இங்கு
இளமையும் செல்வமும் ஓர் கணத்தோற்றம்
துன்பமும் ஓர் கணத்தோற்றம் - இங்கு
தோல்வி, முதுமை ஓர் கணத்தோற்றம்' என்று வாழ்வின்

நிலையாமையை சமூகத்திற்கு எடுத்துக்காட்டியுள்ளார். சமுதாய அநீதிகளுக்கு முற்றுப்புள்ளி வைத்திடும் ஒரு இலக்கிய இயக்கமே தேவை என்பதை பாரதி கண்டவர். இலக்கிய உலகில் புதியதொரு சகாப்தத்தை உருவாக்கினார். இவரது இலக்கிய படைப்புகள் ஒவ்வொன்றும் சமூகப்பயனை கருதியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதியாரை அடியொட்டி பாரதிதாசனும் தமது இலக்கிய படைப்புகளால் சமூகப்பண்புகளை வெளிக்காட்டியுள்ளார். அதிகாரம், சாதி, சமயம், மூடநம்பிக்கை என பல தடைக்கற்களை சமூகத்திலிருந்து அப்புறப்படுத்த தன் பாடல்களை பயன்படுத்தினார்.

"இட்டதோர் தாமரைப்பூ இதழ் விரித்தல் போலே
வட்டமாய் புறாக்கள் கூடி இரையுண்ணும் அவற்றின் வாழ்வில்
வெட்டுமில்லை குத்துமில்லை வேறு வேறாக இருந்தருந்தும்
கட்டில்லை கீழ் மேல் எனும் கண்மூடி வழக்கமில்லை" என்று சிந்திக்க தெரிந்த மனிதனிடம் ஒற்றுமை பண்பு இல்லை என்பதை இயற்கையோடு ஒப்பிட்டு பாடியுள்ளார். பாரதியை போன்றே அக்கால பெண்களின் முன்னேற்றத்திற்கு கவியால் குரல் கொடுத்தார். இவரது பாடல் வரி ஒவ்வொன்றும் சமூகத்தையே நோக்காக கொண்டுள்ளமையை அவதானிக்கலாம். இவர் போலவே பட்டுகோட்டை கல்யாண சுந்தரம், கண்ணதாசன், வைரமுத்து போன்ற பல கவிஞர்களின் சினிமா பாடல்களும் சமூக நோக்கையே கருவாக கொண்டுள்ளமையை அறியலாம்.

மனித சமுதாயம் மாற்றமுறும் போது சிந்தனை வளமும் மாற்றமடைகிறது. ஒரு இலக்கியம் அந்த சமுதாயத்தை பிரதிபலிக்கும் போதே அது வாழ்கிறது.

அந்த வகையில் எமது மலையக இலக்கியங்களை எடுத்து நோக்கினால் அவர்களின் வாழ்க்கை அம்சங்கள், தொழில்சார் பிரச்சினைகள், சமூக பிற்போக்கான அம்சங்கள், போராட்ட உணர்வுகள் போன்ற சமூகப்பண்புகளை காணலாம். உதாரணமாக - 'ஒரு கூடை கொழுந்து' சிறுகதையில் வரும் லட்சுமி எனும் மலையகப் பெண்ணின் சவால், துணிவு, நம்பிக்கை என்பன பாராட்டத்தக்கன. 'தீக்குளிப்பு' எனும் சிறுகதை மலையக பெண்ணின் குடும்ப பொறுப்புகள், காதல், பாசம் எனும் உள்ளத்து உணர்வுகளை மீறியவையாக காட்டுகிறது. இவ்வாறான இலக்கியங்கள் மலையக சமூகத்தைப் படம்பிடித்து காட்டுகின்றன எனலாம்.

மஹாகவியின் காவியமான 'சடங்கு' யாழ்ப்பாண விவசாய குடம்பத்தின் பழைய போலியான ஆசாரங்களில் கட்டுண்டு கிடக்கும் சமூகத்தை பிரதிபலிக்கிறது. புதுமைப்பித்தனின் 'துன்பக்கேணி' உமா ஜானகி ராமனின் 'அம்மா பிளிஸ்' போன்ற சிறுகதைகளும், எழுத்தாளர்களான கல்கியின் 'தியாக பூமி'. அகிலனின் 'பெண்', பார்த்த சாரதியின் 'ஆத்மாவின் ராகங்கள்' சங்கரராமனின் 'மண்ணாசை', ஆர். சண்முக சுந்தரத்தின் 'நாகம்மாள்' போன்ற பல நாவல்கள் சமூகத்தில் காணப்படும் கீழ்மட்ட, நடுத்தர வர்க்கத்தினரின் சமூகப் பிரச்சினைகளை, போராட்டங்களை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக்காட்டுகின்றன. இவ்வாறு நோக்குகையில் தமிழ் இலக்கிய வடிவங்கள் அனைத்திலும் நேரடியாகவும், மறைமுகமாகவும் சமூக நடைமுறைகளை காணலாம். பிறப்பிலிருந்து இறப்பு வரை மனிதனின் வாழ்க்கையை இலக்கியங்கள் கண்ணாடி போல் காட்டுகின்றன எனலாம்.

மிதமிஞ்சிய கற்பனைகளையும், கனவுகளையும் மட்டுமே பறைசாற்றுவதாக எந்த ஒரு இலக்கியமும் நின்று விடக்கூடாது. இலக்கியமானது காலங்கடந்து, நிலம் கடந்து, தலைமுறைகள் பல கடந்து வாழ்வதற்கு ஏற்ற வகையில் கருத்தாழம், சிந்தனையாற்றல், பொது உண்மையை காட்டும் பண்புகள் என்பவற்றை கொண்டு சமூகத்தை சரியான பாதையில் இயக்கக்கூடியவாறு அமைவது சிறப்பானது. இவ்விலக்கியங்கள் வாழ்வின் எதிரொலிகளாக, சமூதாயத்தடைகளை தகர்த்தெறிய கூடிய சக்திகளாக, மானுட வளர்ச்சியை பேசும் மைல் கற்களாக, மொழியை வளர்க்கும் உயிர் நாடியாக அமைதல் வேண்டும், இவ்வாறான இலக்கியங்கள் பழங்காலத்தில் இருந்து இன்று வரை சமூகத்தின் சிறப்பான செயலாற்றுகைக்கு தம் சக்திகளை கொடுத்துள்ளமையை நாம் காணலாம். இத்தகைய சமூக நோக்குடைய இலக்கியங்கள் எத்தனை புதுமைகள் வந்தாலும் அத்தனையும் தன் ஆற்றலால் கடந்து நிலை பெறும் என்பதில் ஐயமில்லை.

"இன்னவைதான் கவி எழுத ஏற்ற பொருள் என்று
பிறர் சொன்னவற்றை நீர் திருப்பிச் சொல்லாதீர்
சோலை, கடல், மின்னல், முகில், தென்றலினை மறவுங்கள்
மீந்திருக்கும் இன்னல், உழைப்பு, ஏழ்மை, உயர்வு
என்பவற்றை பாடுங்கள்"

- மஹாகவி (உருத்திர மூர்த்தி) -



திருமதி தேவிகா இரவிச்சந்திரன்
ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவீன தொழினுட்பத்தால் நலிவடையும் வாசிப்பு

இன்று மனிதன் அடைந்துள்ள பின்னடைவுகளுக்கு முழு முதற்காரணம் வாசிப்பில் ஏற்பட்ட குறையென்றால் மிகையாகாது வாசிப்பு வீதம் குறையக்காரணம் என்ன? தொல்லை காட்சியாய் மாறிவிட்ட தொலைக்காட்சி எவ்வாறென்றால் அன்றெல்லாம் செய்தி அறிய வேண்டும் என்றால் பத்திரிகையை வாசிக்க வேண்டும். இன்று தொலைக்காட்சி பார்ப்பதை பொழுது போக்காகக் கருதி காலை மாலை அதிலேயே அமர்கின்றனர். இன்னும் சமையல் குறிப்புகள், கைவேலைகள் கலைஞருடன் உரையால், நாடகம், சினிமா, விளையாட்டு நிகழ்ச்சிகள் என பல இவ்வாறான நிகழ்வுகளையெல்லாம் சலிக்காமல் பார்த்துவிட்டு நேரம் இல்லை என்று கூறிக்கொள்கின்றார்கள்.



பாடசாலை மாணர்களுக்கு பாடசாலையில் நூலகம் இருந்தும் கூட வாசிப்பில் நாட்டம் இல்லை அதோடு நேரமும் இல்லை, ஏன் எந்த நிலை! பாடசாலை முடிய மேலதிக வகுப்புகள் வீடு சென்றதும் காட்டூன் நிகழ்ச்சியை கண்இமைக்காமல் பார்க்கின்றனர், அது முடிய பசியும், தூக்கமும், தூக்கத்தை கட்டியிடித்துக் கொண்டு விடிய விடிய பாடசாலையில் வழங்கப்படும் வீட்டு வேலைகளை நிறைவு செய்ய வேண்டியுள்ளது உடலின் சீரான வாளர்ச்சிக்கு தேவையான உடற்பயிற்சியில் ஈடுபட நேரமில்லை இவ்வாறான நிலையில் பாடசாலை இடைவேளையில் நூலகத்தை உபயோகிப்பது எப்படி ? மாலை நேர மேலதிக வகுப்புகளில் கொடுக்கப்பட்ட வீட்டு வேலைகளை செய்ய வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறுதான் இன்று வாசிப்பு வீதம் குறைந்து செல்கின்றது. நூலகங்களை பயன்படுத்தும் வீதம் குறைந்து செல்கின்றது. காரணம் என்னவென்றால் நவீன தொடர்பு சாதனங்களின் வளர்ச்சியைத் தவிர வேறொன்றுமில்லை அன்று கடிதங்களின் மூலம் தொடர்பு கொண்டவன் இன்று கையடக்கத் தொலைபேசியின் மூலம் தொடர்புகொள்கின்றன. எழுத்தறிவின் ஆரம்பம் வாசிப்பறிவு இது வளர்ந்தால்தான் நாளைய சமூகத்தின் தலைவர்களை அறிஞர்களாய் உருவாக்க முடியும்.

நேரமில்லை, நேரமில்லை என மனிதன் தன் வேளைகளை நவீனத்தின் கீழ் தொலைப்பதால்தான் அவனுடைய அடிப்படைத் தேவைகளைக் கூட அவனால் பூரணப்படுத்திக் கொள்ள முடியவில்லை, மாறும் ஜகத்தின் முதலாவது விதி என்று மாற்றங்களுக்கு முழுவதும் அடிபணிந்து விடுவதால் தான் மனிதன் நேரமில்லாத பிரச்சினைக்கு ஆளாகியிருக்கிறான். மனிதன் மாற்றங்களுக்கு அமைய மனிதன் தன் வாழ்க்கையில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். ஆனால் மாற்றமே வாழ்க்கையாகிவிடக்கூடாது. தொழில்நுட்பத்திற்குள் மண்டியிட்டு விடக்கூடாது.

நாளைய சமூகத்தின் தலைவர்களை உருவாக்கவும், மனிதன் பூரணமாக உருவாகுவதற்கும் அன்றாட வாழ்க்கையில் வாசிப்பை வழக்கமாய், பழக்கமாய் கொள்வது அவசியமாகும்.

திருமதி. ஜே.யூ.ஜுனைடீன்
ஆசிரியர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர்களின் கற்றலில் தாக்கங்கள்

இன்றைய நவீன கல்வியின் இலக்கு ஒவ்வொரு மாணவனும் தனது வாழ்க்கைப் போராட்டத்தின் ஊடாக புதிய சவால்களை எதிர்கொள்ளக்கூடிய தன்மையினை அறிவு பூர்வமாக கண்டு தேர்ச்சியுடன் எதிர்கொண்டு பொருந்தி அதற்கான வழிவகைகளைக் கண்டு பயணிக்க வேண்டும் என்பதாகும். இதற்கு தோணியாக அமைவது பாடசாலை, பெற்றோர், ஆசிரியர்கள், சமூகம், சகபாடிகள் என்பதில் ஐயமில்லை.

மாணவர்களின் கற்றல் சிறப்படைய கற்பித்தல் சூழலை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய பாரிய பொறுப்பு பாடசாலை அதிபரின் கையிலேயே உள்ளது. புதிய கற்பித்தல் வளங்களை பெற்றுக் கொடுப்பது மட்டுமின்றி பெற்றோரை பாடசாலையுடன் நெருங்கிய தொடர்பு கொள்ளச் செய்வதால் மாணவரிடையே கல்வியில் ஆர்வம் ஏற்படுகிறது. இக்கடமையை அதிபர் தவறவிடும் பட்சத்தில் அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியோரிடம் முரண்பாடு ஏற்படுவது தவிர்க்க முடியாததுடன் மாணவர் கல்வியில் தாக்கத்தை ஏற்படுத்துவதில் பெரும் காரணியாக உருவெடுக்கின்றது.

குடும்பப் பின்னணி மாணவர் கல்வியின் அத்திவாரமாகும். குடும்ப அங்கத்தினர் தம் கடமை, பொறுப்புக்களை தவறவிடுவது குழந்தைகளின் உள, உடல் வளர்ச்சியில் பெரும் பாதிப்பை ஏற்படுகின்றது. குடும்பத்தின் வறுமை நிலை, பெற்றோரின் கல்வியறிவு இன்மை, வீட்டில் பெற்றோரில் அன்பு அரவணைப்பு இல்லாமை, தந்தையரின் அதிகரித்த மதுபாவனையும் வீட்டில் ஏற்படும் பிரச்சினைகளும், தொலைக்காட்சிக்கு முக்கியத்துவம் கொடுத்தல் என்பன கல்வியின் இடையூறுகளாகும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுப்பறை என்பது பாடசாலையின் அங்கீகரிக்கப்பட்ட ஒரு களமாகும். மாணவர் தொழிற்பாட்டை ஏற்படுத்தும் ஒரு அங்கம். இங்கு ஆசிரியர் மாணவரிடையே மிக அந்நியோன்னிய தொடர்புகள் காணப்பட்டாலே கற்றல் - கற்பித்தல் எனும் செயன்முறை வெற்றியளிக்கும். அன்றி மாணவர்களிடையே பாரபட்சம் காட்டுதல், மாணவர்களின் உள உணர்வுகளுக்கு மதிப்பளித்து செயற்படாமை, சில ஆசிரியர்களின் தேவையற்றதும் கடுமையானதுமான தண்டனைகள், மீள்திறன் மாணவர்களை கவனித்து மெல்லக் கற்போரை புறக்கணித்தல், கற்றல் கற்பித்தலில் தெளிவின்மை, சில ஆசிரியர்களின் முறைகேடான நடத்தைகள், மாணவர் கற்றலில் பெரும் தாக்கத்தை செலுத்துகின்றது, என்பது வெள்ளிடைமலை.

சகபாடிகளின் செயற்பாடுகள் கல்வியில் பெருமாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரு சாதனமாகும். பொறாமை எண்ணங்கள், மாணவர்களுக்கு உடல், உளரீதியில் தாக்கம் கொடுத்தல், கலவன் பாடசாலைகளின் காதல் தொடர்புகள் தாக்கத்தை ஏற்படுத்துவதை நோக்கலாம். இவ்வகையில் ஆசிரிய மாணவ இடைவினை, சகபாடி இடைவினை பெற்றோர் மாணவ இடைவினை என்பன மாணவர் கல்வியில் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்துவதுடன் உள நெருக்கீடுகளை அதிகரித்து மாணவர்களின் உடல், உளச் சமநிலையை பாதிப்படையச் செய்கின்றன.

திருமதி பானுமதி செல்வநாயகம்
உதவிக் கல்விப் பணிப்பாளர்
(தமிழ் மொழி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகியல் நோக்கில் நாட்டுப்புற இலக்கியம்

பேராசிரியர் துரை. மனோகரன்

கலை இலக்கியங்களைப் பொறுத்தவரையில் அழகியல் எனும் சொல், அவற்றோடு நெருங்கியத் தொடர்பு கொண்டதாக விளங்கி வந்திருக்கிறது. அழகியல் தொடர்பான தேடல்கள் பழைய கிரேக்கர் காலம் முதலாகவே நிகழ்ந்து வந்துள்ளன. "அழகு என்றால் என்ன என்று சொல்வாயா?" என்ற சோக்கிரட்டீஸின் கேள்வி முதல், இது பற்றிய விசாரணைகள் தொடக்கம் பெற்றன, எனலாம். அவரைத் தொடர்ந்து பிளேட்டோ, அரிஸ்டோட்டில் ஆகியோரும் அழகியல் பற்றிய விசாரணைகளைத் தொடர்ந்தனர். காலப்போக்கில் காண்ட், ஹெகல் போன்றோரும் அழகியல் தொடர்பான கருத்துக்களை முன்வைத்தனர். அழகியல் என்னும் சொல்லுக்குரிய பொருளை, அச்சொல்லுக்கு ஏற்பப் பயன்படுத்தியவராக ஹெகல் விளங்குகிறார். அழகியல் கோட்பாட்டுக்கு உரிய முறையில் ஆழமாக அதனைப் பயன்படுத்தியவர், ஹெகலே ஆவர். அழகியல், கலை இலக்கிய விமர்சனம் தொடர்பில் மார்க்சிய அழகியல் ஒரு முன்னேற்றகரமான பாதையை ஏற்படுத்தியது. மார்க்சிய அழகியலைப் பொறுத்தவரை, கலையின் சாராம்சத்தையும், கலையின் அடிப்படை விதிகளையும், கலைப்படைப்பாக்கத்தின் இயல்புகளையும் உள்ளடக்கிய விஞ்ஞானமாகவே அது அழகியலை நோக்குகிறது. அழகியலோடு தொடர்பான கலைத்துவம் என்பது, கலையின் படைப்பாக்கம், செய்நேர்த்தி ஆகியவற்றைக் குறித்துநிற்கிறது. கலை இலக்கியத்தில் என்ன கூறப்படுகிறது என்பதை விடவும், எப்படிக் கூறப்படுகிறது என்பதை நோக்குவதே அழகியலின் அடிப்படையாகும் என்பர். இக்கட்டுரை அழகியல் நோக்கில் நாட்டுப்புற இலக்கியத்தை நோக்குவதாக அமைகிறது.

எம் மொழி இலக்கியங்களை நோக்கினும், என்றும் அவற்றின் முன்னோடிகளாக விளங்குபவை, நாட்டுப்புற இலக்கியங்களாகும். ஏட்டு இலக்கியங்களின் வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்குபவையும் அவையே ஆகும். தமிழைப் பொறுத்தவரையிலும், சங்க இலக்கியங்களுக்கு முன்தோன்றி, அவற்றுக்கு முன்னோடியாக விளங்கியவை, நாட்டுப்புற இலக்கியங்களே. காலப்போக்கில் அவை தனியாகவும், ஏட்டு இலக்கியங்களோடு இணைந்தும் வளர்ச்சி பெற்று வந்துள்ளன. நாட்டுப்புற இலக்கியம், நாடோடி இலக்கியம், வாய்மொழி இலக்கியம், பாமர இலக்கியம், கிராமிய இலக்கியம், நாட்டார் இலக்கியம் எனப் பல்வேறு பெயர்களால் இவ்விலக்கியம் குறிப்பிடப்படுகின்றது.

நாட்டுப்புற இலக்கியத்தின் ஒரு வகையான நாட்டுப்புறப் பாடல்கள், நாகரிக வாசனை வீசாத கிராமியப் பகைப்புலத்தில் தோன்றி, ஆக்கியவரின் பெயரை அறிய இயலாது, எல்லோர் நாவிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயின்று வந்துள்ளன. எளிய சொற்களாலும், பேச்சுவழக்கும், இசைத்தன்மையும், பாடல் அடிகள் திரும்பத் திரும்பப் பாடப்படும் இயல்பும் கொண்டவையாக அப்பாடல்கள் விளங்குகின்றன.

நாட்டுப்புறப் பாடல்கள் தாலாட்டு முதல் ஒப்பாரி வரை மனித வாழ்வோடு இயைந்த பல்வேறு அம்சங்களையும் தம்முள் அடக்கி வளர்ந்துவந்துள்ளன. தமிழில் சங்ககாலக் கவிஞர் முதல் இளங்கோ, மாணிக்கவாசகர், பாரதி உட்படப் பல்வேறு கவிஞர்களையும் பாதித்து, தமது செல்வாக்கை அவை உணர்த்திவந்துள்ளன. கோபாலகிருஷ்ண பாரதியார் போன்றோர் தமது கீர்த்தனைகளுக்கு வளம் சேர்ப்பதற்கு நாட்டுப்புறப் பாடல் வடிவங்களையும் கையாண்டுள்ளனர். கொத்தமங்கலம் சுப்பு, திருலோக சீதாராம், சுரபி போன்ற கவிஞர்கள் நாட்டுப்புறப் பாடல் மரபிலேயே தமது கவிதைகளை எழுதி, தம்மாலான முறையில் தமிழுக்குப் புதிய வளத்தைச் சேர்த்துள்ளனர்.

இருபதாம் நூற்றாண்டின் யுகக் கவிஞர் பாரதி, நாட்டுப்புற இலக்கியத்தில் தாம் கொண்ட இயல்பான ஈடுபாட்டைக் குயில்பாட்டின் ஓரிடத்தில் குதூகலத்தோடு குறிப்பிடுகிறார்.

> "ஏற்றநீர்ப் பாட்டின் இசையினிலும் நெல்லிடிக்குங்
> கோற்றொடியார் குக்குவெனக் கொஞ்சும் ஒலியினிலும்
> சுண்ண மிடிப்பார்தம் சுவைமிகுந்த பண்களிலும்
> பண்ணை மடவார் பழகுபல பாட்டினிலும்
> வட்டமிட்டுப் பெண்கள் வளைக்கரங்கள் தாமொலிக்கக்
> கொட்டி யிசைத்திடுமோர் கூட்டமுதப் பாட்டினிலும்"

தாம் நெஞ்சைப் பறிகொடுத்தமை பற்றி, அவர் சுவை ததும்பக் கூறுகின்றார்.

நாட்டுப்புறப் பாடல்கள் வாய்மொழியாகவே பரவிவந்துள்ளன. அதனால், அவற்றில் மாற்றங்கள் ஏற்படுவதும் இயல்பானதே. அத்தகைய மாற்றங்கள் திரிபு வடிவம், மாற்றுவடிவம் எனப் பெயர் பெறுகின்றன. நாட்டுப்புறப் பாடல்கள் அனைத்தும் களநிலைப் பாடல்கள் என்று எடுத்துக்கொள்வதற்கில்லை. அவை பெரும்பாலும் பாவனைப் பாடல்களாகவே விளங்குவதைக் காணலாம். நாட்டுப்புறப் பாடல்களில் எதுகையை விட மோனைக்கே அதிகம் இடமளிக்கப்பட்டுள்ளதையும் காணமுடிகிறது. இவற்றில் பெரும்பாலும் தனிச் சொற்கள் இடம்பெறுவதுண்டு. இவை சொற்களின் சேர்க்கைக்கும், பாடல்களின் நீட்டிசைப்புக்கும் துணை புரிவனவாக விளங்குகின்றன.

நாட்டுப்புறப் பாடல்கள் தாலாட்டுப் பாடல்கள், விளையாட்டுப் பாடல்கள், தொழில் பாடல்கள், காதல் பாடல்கள், வழிபாட்டுப் பாடல்கள், ஒப்பாரிப் பாடல்கள், கதைப் பாடல்கள் எனப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலவகைப்படுகின்றன. இவற்றுள் தாலாட்டும், ஒப்பாரியும் பெண்களாலேயே பாடப்படுகின்றன. கும்மியும் பெரும்பாலும் பெண்களால் பாடப்படுகின்றன. விளையாட்டுப் பாடல்கள் சிறுவர் பாடல்களாக அமைந்துள்ளன. தொழில் பாடல்கள், காதல் பாடல்கள் முதலியன இருபாலாரும் சேர்ந்து பாடுவனவாக விளங்குகின்றன.

தாலாட்டுப் பாடல்கள் பொதுவாக ஆராரோ, ஆரிரரோ, ஓராரோ, ஓஓஓஓ, ஓராரோ, ரிரிரி, ரோரோரோ போன்ற முன்னோட்ட இசையைக் கொண்டிருக்கும். பிரதேசத்துக்குப் பிரதேசம், சாதிக்குச் சாதி இத்தகைய முன்னோட்ட இசை வேறுபாடுகள் இடம்பெறுகின்றன. பெண் ஒருத்தி தாலாட்டுப் பாடத் தொடங்கும் முன் சிணுங்குவது வழக்கம். இத்தகைய சிணுங்கல் ஒரு சிணுங்கல், இரண்டு சிணுங்கல், மூன்று சிணுங்கல் எனவும் அமைவது உண்டு. தாலாட்டுப் பாடல் ஒன்று பின்வருமாறு அமைந்துள்ளது:

"ஆரடித்தார் ஏன் அழுதாய்?
அடித்தாரைச் சொல்லியழு - நான்
அடிக்கு அடியே வாங்கிடுவேன் - நீ
கூவி அழுவதென்ன
குயிலின் குரல்நோக? - நீ
ஏங்கி அழுவதென்ன
ஏலப்பூ வாய்நோக? - நீ
பாடி அழுவதென்ன - உன்
பவளப்பூ வாய்நோக?"

நாட்டுப்புறக் காதல் பாடல்கள் காதலின் சிறப்பைப் பாடுவனவாக மாத்திரம் அமையவில்லை. அவை காதல் தோல்வி, மணமுறிவு, பொருந்தா மணம், கள்ள உறவு முதலானவற்றையும் எடுத்துரைக்கின்றன மானுடவியல் அறிஞர் எல்வின் குறிப்பிடுவதைப் போல, "உண்மையான, வெளிப்படையான, ஒழிவுமறைவற்ற காதல் பாடல்களாக நாட்டுப்புறக் காதல் பாடல்கள் இருக்கின்றன."

நாட்டுப்புறக் காதல் பாடல்களில் சுட்டி ஒருவர் பெயர் கொள்ளப்படும் முறை இல்லை என்று சொல்லப்படுகிறது. ஆயினும், சுட்டி ஒருவர் பெயர் கூறும் முறை சில பாடல்களில் இடம்பெறுவதைக் காணலாம். பின்வரும் பாடல் அதற்கு உதாரணமாக விளங்குகிறது:

"கொத்து மல்லித் தோட்டத்திலே
குளிக்கப் போயி நிக்கையிலே
அத்தை மகன் முத்துசாமி
அத்தெறிந்தான் பிச்சிச் சரம்."

காதல் பாடல்களில் இடம்பெறும் வெளிப்படைத்தன்மைக்குப் பின்வரும் பாடல் ஓர் உதாரணம்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மாங்கனியும் இல்லையடா
'தேங்கனியும் இல்லையடா
'பால்குடிக்கும் பாலனுக்கு
'பால்குடம் கொண்டுபோறேன்."

காதல் பாடல்களில் ஆணும், பெண்ணும் சேர்ந்து பாடுகின்ற போக்கும் காணப்படுகிறது. அதேவேளை, ஆணும், பெண்ணும் தனித்தனியாகப் பாடும் முறைமையும் இடம்பெறுகின்றது. நாட்டுப்புறக் காதல் பாடல்கள் பெரும்பாலும் தெம்மாங்குப் பாடல்களாகவே அமைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

நாட்டுப்புற இலக்கியத்தின் பிறிதொரு வகையாக அமைவன, நாட்டுப்புறக் கதைகளாகும். நாட்டுப்புறக் கதைகள் தொடர்பாக நா. வானமாமலை கூறுவன மனங்கொள்ளத்தக்கன:

"நாட்டுக் கதைகள் சமூகத்தையும் அதன் உறுப்பான குடும்பத்தையும் சித்தரிக்கின்றன. குறிப்பிட்ட சமூக வளர்ச்சிக் கட்டத்தில் குடும்ப உறுப்பினர்களிடையே நிலவும் உறவுகளைச் சித்தரித்து பிரச்சனைகளையும் சுட்டிக்காட்டுகின்றன. நாட்டின் மானிட மதிப்புகளை (Human Values) உருவாக்கி, அவற்றை எடைக்கல்லாகக் கொண்டு, மனிதர்களின் செயல்களையும், சிந்தனைகளையும், சமூக வழக்கங்களையும் மதிப்பிடுகிறது. இந்த மானிட மதிப்புகளின் அடிப்படையில் அரசியல், சமூக நிகழ்ச்சிகளை விமர்சிக்கிறது. கேலியும், நகைச்சுவையும் கலந்து இக்கதைகள் நீதி போதிக்கின்றன. நீதி அம்சம் பெரும்பாலான கதைகளில் முனைப்பாக உள்ளன. நமது கிராமமக்களின் பண்பாட்டு வரலாற்றை அறிந்துகொள்ள இக்கதைகள் பெரிதும் உதவும்."

நாட்டுப்புறக்கதைகளில் மக்களின் இயல்பான பேச்சு வழக்குகளும், சமுதாய நடைமுறைகளும் இடம்பெறுவதைக் காணலாம். அவற்றின் அழகியல் கவர்ச்சியும் அவை செல்வாக்குப் பெறக் காரணமாக அமைகிறது.

நாட்டுப்புற இலக்கியங்கள் நீண்டகாலமாகப் பல்வேறு கவிஞர்களையும் பெருமளவு பாதித்துவந்துள்ளன. தமிழ்த் திரைப்படங்களில் பல்வேறு கவிஞர்களும் நாட்டுப்புறப் பாடல்களை அடியொற்றிப் பல பாடல்களைப் புனைந்துள்ளனர். அவை திரைப்படப் பாடல்களுக்குப் பொருளிலும், அமைப்பிலும், இசையிலும், சுவையிலும் வளம் சேர்த்துள்ளன. உடுமலை நாராயணகவி, பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், மருதகாசி, தஞ்சை ராமையாதாஸ், என்.எஸ். கிருஷ்ணன், முகவை ராஜமாணிக்கம், சுந்தர வாத்தியார், கு.மா. பாலசுப்பிரமணியம், க.மு.ஷெரிப், கண்ணதாசன், பஞ்சு அருணாசலம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கே.சி.எஸ். அருணாசலம், கலைஞானம், புலமைப்பித்தன், நெல்லை அருள்மணி, வைரமுத்து, முத்துலிங்கம், நா. காமராசன், கங்கை அமரன் போன்றோர் தமது திரைப்படப் பாடல்களில் நாட்டுப்புற இலக்கியங்களின் வடிவங்களையும், பாணியையும், சாயலையும் புகுத்தியவர்களாக விளங்குகின்றனர்.

இசையமைப்பாளரைப் பொறுத்தவரையில் ஜி. ராமநாதன், கே.வி. மகாதேவன், புகழேந்தி, மாஸ்டர் வேணு, விஸ்வநாதன், ராமமூர்த்தி, இளையராஜா, நரசிம்மன், தேவா உட்படக் கணிசமானோர் நாட்டுப்புற இலக்கிய மெட்டுக்களில் இசையமைத்து, திரைப்படப் பாடல்களைச் செழுமையுறச் செய்துள்ளனர்.

நாட்டுப்புற இலக்கியங்கள் கிராமங்களின் உயிர்ப்பையும், ஊக்கத்தையும், உழைப்பையும், களிப்பையும், சுகத்தையும், சோகத்தையும் எடுத்துக்காட்டுகின்றன. உழைப்பில் ஈடுபடும் மக்கள், தங்கள் களைப்பை மறப்பதற்கு இனிய பாடல்களைப் பாடி இன்புறுவர். அத்தோடு, கிராமத்து முக்கிய நிகழ்ச்சிகளின்போதெல்லாம் எல்லோரையும் அழைத்து, உழைத்து மகிழ்வது கிராம மக்களின் வழக்கமாகும். தமிழ்நாட்டுக் கிராமங்களில் தொன்றுதொட்டு இவ்வழக்கம் இருந்துவருவதைக் காணலாம். இத்தகைய அம்சத்தைக் கொண்ட சுவையான திரைப்படப் பாடல் மனத்தைக் கவரும் முறையில் விளங்குகிறது.

"அடி ராக்காயி மூக்காயி
குப்பாயி சரஸ்வதி
கஸ்தூரி மீனாட்சி!
தங்கப்பல் காரையா
தங்க மகளுக்கும்
வாத்தியா ரையாவுக்கும்
தைமாசம் கல்யாணம்
நெல்லுக்குத்த வாங்கடியோ!



சுத்தச்சம்பா பச்சைநெல்லுக்
குத்தத்தான் வேணும்
முத்துமுத்தாப் பச்சரிசி
அள்ளத்தான் வேணும்
முல்லைவெள்ளி போல அள்ளிப்
பொங்கத்தான் வேணும்
நம்மவீட்டுக் கல்யாணம் - இது
நம்மவீட்டுக் கல்யாணம்"

என்று தொடர்ந்து செல்லும் அப்பாடலை, எஸ். ஜானகி குழுவினர் அதியற்புதமாகப் பாடியுள்ளனர்.

பொதுவாகக் கிராமவாசிகளுக்குப் பட்டண வாழ்க்கைமீது கவர்ச்சியிருப்பது உண்டு. பட்டண வாழ்க்கையச் சொர்க்கம் என்றும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகத்தின் விளைநிலம் எனவும், இனிய பொழுதுபோக்குகளின் இருப்பிடம் என்றும், வருமானத்துக்கு உரிய வழிவகைகள் காட்டும் இடம் எனவும் கிராமவாசிகள் கருதுவது உண்டு. இக்கரைக்கு அக்கரை பச்சை அல்லவா? இதே அடிப்படையைக் கொண்டு, சுவை மிகுந்த திரைப்படப் பாடல் ஒன்றைப் புனைந்துள்ளார், உடுமலை நாராயணகவி. பட்டண வாழ்வை விரும்பும் கணவன் ஒருவனையும், அதனை வெறுத்துக் கேலி செய்யும் மனைவி ஒருத்தியையும் நாட்டுப்புறப் பாடல் அடிப்படையில் அமைந்த அப்பாடலில் காணலாம்.

"பட்டணந்தான் போகலாமடி - பொம்பளே
பணங்காசு தேடலாமடி - நல்ல
கட்டாணி முத்தே - என்
கண்ணாட்டி நீயும்
வாடி பொண்டாட்டித் தாயே!

டவுனுபக்கம் போகாதீங்க - மாப்புளே
டவுனாகிப் போயிடுவீங்க - அந்த
டாம்பீகம் ஏழைக்குத்
தாங்காது பயணம்
வேண்டாம்னாக் கேளுமாமா!"

எனத் தொடங்கும் அத்திரைப்படப் பாடல், பட்டண வாழ்வு பற்றிய சுவாரசியமான விமர்சனமுமாக அமைந்துள்ளது.

இவை போன்றே தாலாட்டுப் பாடல்கள், விளையாட்டுப் பாடல்கள், காதல் பாடல்கள், கதைப்பாடல்கள் முதலியனவும் திரையிசையில் இடம்பெற்றுவந்துள்ளன. இவை மாத்திரம் அன்றி, இலாவணி, வில்லுப்பாட்டு, கும்மி, கரகம் முதலானவை தொடர்பான பாடல்களும் திரையிசைப் பாடல்களாக வெளிவந்துள்ளன.

தமிழர் சமுதாயத்தில் நீண்டகாலமாகக் கூத்துகள் இடம்பெற்றுவந்துள்ளன. இவற்றுள் தெருக்கூத்தும் ஒன்றாகும். புராண, இதிகாசக் கதைகளினின்றும் பெறப்பட்ட கதையம்சங்களைப் பெரும்பாலும் கொண்டிருக்கும் தெருக்கூத்தின் செல்வாக்கினை திரையிசைத் துறையிலும் காணலாம். நவராத்திரி திரைப்படத்தில் இடம்பெறும் "சத்தியவான் சாவித்திரி" தெருக்கூத்து இவ்வகையில் குறிப்பிடத்தக்கது.

நாட்டுப்புற இலக்கியம் ஒரு சமுதாயத்தின் உயிர்த்துவமான உணர்வுகளை செயற்கைப் பூச்சுகள் இன்றி இயல்பாகக் காட்டுகின்றது. அத்தகைய இலக்கியத்தின் செல்வாக்கு, பல்வேறு துறைகளிலும் பரந்து காணப்படுவதைப் போன்று, திரைப்படப் பாடல்களிலும் ஊடுருவி, அத்துறைக்குச் செழுமையூட்டி வந்துள்ளது. மேற்கத்தைய ஆரவார இசைகளுக்கு மத்தியில், நமது மண்ணின் மணத்தை நுகரச் செய்யும் நாட்டுப்புற இலக்கிய வடிவங்கள் திரைப்படப்பாடல்களுக்குப் புதிய வலுவையும், வனப்பையும், வளத்தையும் சேர்த்துவந்துள்ளன.

நாட்டுப்புற இலக்கியத்துக்கே உரிய தனித்துவமான இயல்புகளோடு, அவற்றின் அழகியல் அம்சமும் சேர்ந்தே அவற்றுக்கெனத் தனிச் செல்வாக்கைத் தேடித்தந்துள்ளது. அழகியல் நோக்கில் நாட்டுப்புற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியங்களை நோக்குவது ஒரு சுவாரசியமான அனுபவமாகும்.

உசாத்துணை நூல்கள் :


- இளங்கோ, நா.(2005) நாட்டுப்புறக் காதல் பாடல்களும் அகப்பொருள் மரபுகளும், சென்னை: காவ்யா.
- கனகசபை, த. (2004) நாட்டுப்புறப் பாடல்களின் அழகியல் கட்டமைப்பு, சென்னை: பொன்னி.
- சண்முகசுந்தரம், சு. (1976) நாட்டுப்புற இலக்கியத்தின் செல்வாக்கு, சென்னை: இலக்கிய மாணவர் வெளியீடு.
- மனோகரன், துரை.(2005) பழம் புனலும் புது வெள்ளமும், கண்டி.
- ராஜநாராயணன், கி. (பதிப்பு) (1991) நாட்டுப்புறக் கதைகள் - ஒரு பன்முகப் பார்வை, சிவகங்கை: அன்னம்.
- ராஜநாராயணன், கி. (2002) கிராமியக் கதைகள், தஞ்சாவூர்: அகரம்.



பேராசிரியர் துரை. மனோகரன்
முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர்
பேராதனைப் பல்கலைக்கழகம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யஸ்வந்திகா ரமேஷ்
தரம் - 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கமலேஸ்வரன் லக்ஷினி
தரம் - 7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங்கத்தமிழ் சுவைத்திட வந்திட்ட அனைவருக்கும்

## உளமார நவில்கின்றோம் நன்றிகள்

### இன்புற்று வருகை தந்த

**திருமதி சாந்தினி றொசய்றோ**

*பிரதம அதிதி*

*சிரேஷ்ட விரிவுரையாளர் - கதிரியல் துறை மருத்துவபீடம்*

*பேராதனைப் பல்கலைக்கழகம்*

**திருமதி கோகிலேஸ்வரி ராம்குமார்**

*கௌரவ அதிதி*

*பிரதி அதிபர் - இரஜவெல இந்து தேசிய கல்லூரி*

*சிறப்பு விருந்தினர்கள், அதிபர், உதவி அதிபர், பிரதி அதிபர்கள்,*
*தமிழ்ப்பிரிவு அதிபர், தமிழ்ப்பிரிவு ஆசிரியர்கள்...*
*தமிழ் இலக்கிய மன்றக் குழுவினர்கள்...*
*அனைத்து மாணவச் செல்வங்கள், அறிவுசார் பெற்றோர்கள்,*
*அன்புடன் ஆதரவு நல்கிய அனுசரனையாளர்கள்...*

*திருமதி பிரபாங்கனி அருட்செல்வம் (சித்திர பாட ஆசிரியர்)*
*அட்டைப்பட ஆலோசனையாளர்*
*ரிஸ்வி சாரா, அன்ஸர் அமானியா - அட்டைப்படம் (மாணவிகள்)*
*திரு. ம. ஸ்ரீராம்குமார் (அட்டைப்படம் நிர்மாண வடிவமைப்பு)*

*பின்னணி இசைக்கலைஞர்கள், ஒளி, ஒலிக்கலைஞர்கள்*
*வீடியோ படக்கலைஞர்கள்,*
*நிழற்படக்கலைஞர் திரு. K. சதிஸ்குமார்,*
*பாடசாலை உதவியாளர்கள்...*

*இதழ் வடிவமைப்பு*
*திருமதி மீரா அல்பிரட்*

*கணினி எழுத்தாக்கம்*
*திருமதி ரஞ்சனி செற்றிக்,*
*அன்புடன் குறுகிய காலத்தில் பதிப்பித்துத் தந்த*
*பாக்யா அச்சகத்தினர் (திரு. ஜானக ஜயரத்ன)*

*எழுத்துத் திருத்தத்திற்கு உதவிய*
*திருமதி தேவிகா இரவிச்சந்திரன், திருமதி நந்தினி பாஸ்கரன்,*
*திருமதி சுமதினி மஹின்தன்ராஜ், திருமதி ஷபீனா முனவ்வர்*
*(ஆசிரியர்கள்)*

*விநாயகமூர்த்தி நர்மதா, ராஜா மதுபாஷினி, பீலிக்ஸ் அந்தோனி இவோன்,*
*சிவப்பிரகாசம் தர்ஷிகா, சிவதாசன் கவிதா*
*(மாணவிகள்)*

**செல்வன் வேந்தன் பாஸ்கரன்**
**செல்வி இராகவன் பிருந்தா (2011)**

## ஆயிரம் கோடி நன்றிகள்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய கீதம்

ஸ்ரீ லங்கா தாயே – நம் ஸ்ரீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே //

நல் எழில் பொழில் சீரணி
நலங்கள் யாவும் நிறை வான் மணி லங்கா
ஞாலம் புகழ் வளவயல் நதி மலை மலர்
நறுஞ் சோலை கொள் லங்கா

நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
நமதுதியேல் தாயே
நமதலை நினதடி மேல் வைத்தோமே
நமதுயிரே தாயே – நம் ஸ்ரீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே //

நமதாரருள் ஆனாய்
நவை தவிர் உணர்வானாய்
நமதேர் வலியானாய்
நவில் சுதந்திரமானாய்
நமதிளமையை நாட்டே
நகுமடி தனையோட்டே
அமைவுறும் அறிவுடனே
அடல் செறி துணிவருளே – நம் ஸ்ரீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே //

நமதாரருள் ஒளி வளமே
நறியமலர் என நிலவும்தாயே
யாமெலாம் ஒரு கருணை அனை பயந்த
எழில் கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்
ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ, நமோ, தாயே – நம் ஸ்ரீ லங்கா
நமோ, நமோ, நமோ, நமோ, தாயே //



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவே தெய்வம் என்ற மகாகவி...



"உள்ள தனைத்திலும் உள்ளொளி யாகி

ஒளிர்ந்திடும் ஆன்மாவே - இங்கு,

கொள்ளற் கரிய பிரமமென் றே மறை

கூவுதல் கேளீரோ?"



ஸ்ரீமான் மகாகவி சுப்ரமண்ய பாரதியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






இழுமெனும்
ஓசையில்
இசையும்
என் மனம்
கருங்கற்
பாறையுள்
கசியும்
"ஸ்வரம்"

மீரா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org